REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஒக்டோபர் 9 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 240 | October 09, Friday, 2020 | 24 பக்கங்கள் | 30/-



வடக்கின் உதயம்
பக்கம் 9-11

## பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவருக்கு சிறப்பு ஏற்பாடு

அவர்கள் வசிக்கும் மாவட்டங்களிலேயே தோற்ற வசதி



**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையில் இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அவர்கள் தற்போது வசிக்கும் மாவட்டங்களிலேயே பரீட்சைக்குத் தோற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்.பி முஜீபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர கல்வியை தமிழ் மொழி மூலம்

06

## கொரோனா குறித்த தவறான தகவல்களை நம்ப வேண்டாம்

முகநூலில் ஜனாதிபதி கோட்டாபய அறிவுறுத்தல்



கொரோனா தொற்று தொடர்பான தவறான தகவல்களை நம்ப வேண்டாமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று(08) தனது முகநூலில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி, "கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் உலகெங்கும் பரவிக்கொண்டிருந்த வேளையில், ஒரு பலமான தேசமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து அதனை தோற்கடித்து வெற்றிகண்டோம்.

06

## விலாசத்தை மாற்றி கொழும்பில் ஒளிந்திருக்கும் தொழிற்சாலை ஊழியர்கள்

PCR பரிசோதனைக்கு முன்வருமாறு இராணுவத் தளபதி அழைப்பு



மினுவாங்கொடை தொழிற்சாலையில் பணியாற்றிய பலர் கொழும்பில் ஒளிந்திருப்பதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருந்தும் தற்போது விலாசத்தை மாற்றி மறைந்திருக்கும் குறிப்பிட்ட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் உடனடியாக விரும்பி முன்வந்து தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு இராணுவத் தளபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேல் மாகாணத்திற்கு வெளியே சென்றிருக்கும் ஊழியர்கள் 495 பேர் வரையில் உரிய முகவரியில் இல்லையெனவும், கொழும்பின் ஏனைய பிரதேசங்களில் அவர்கள்

06

### கொரோனா பரவலை தடுக்க சகல தரப்பும் கடும் பிரயத்தனம்

# தனிமைப்படுத்தலுக்கு இடையூறு ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை

பிரதிப்பொலிஸ் மாஅதிபர் அஜித்ரோஹண எச்சரிக்கை



கம்பஹா, முதுன்கொட பகுதியில் பீ.சி.ஆர் பரிசோதனை
(படம்லக்மால் சில்வா)

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் தனிமைப்படுத்த லுக்காக அழைத்துச் செல்ல கம்பஹா மாவட்டத்தில் பொலிஸாரினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களுக்கு வருகின்றனர்.

தனிமைப்படுத்தலுக்கு வராது ஒளிந்திருப்பவர்களுக்கு எதிராக தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் ஊழியர்கள் வேறு பிரதேசங்களில் இருக்கின்றமை தொடர்பில் எமக்கு தரவுகள் கிடைத்திருந்தன. அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் வேறு பிரதேசங்களில் இருந்தால்

06

## பாராளுமன்ற பணியாளர்கள் எவருக்கும் கொவிட்–19 தொற்று ஏற்படவில்லை



பாராளுமன்ற பணியாளர் ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கு கொவிட் 19 தொற்று ஏற்பட்டிருப்பதாக பல்வேறு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவிக்கின்றது.

பாராளுமன்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா

06

## வடக்கிற்கு விரைவில் நேரடி விஜயம் மேற்கொள்ளவுள்ளேன்

ஸ்ரீதரன் எம்.பியின் கேள்விக்கு அமைச்சர் பீரிஸ் பதில்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

வட மாகாணத்துக்கு நேரில் சென்று அங்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்போவதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் .பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வடக்கில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேலைத்திட்டங்கள்

06

## திரையரங்குகள், இரவு விடுதிகள் மூடப்படும்

அனைத்து திரையரங்குகள், இரவு விடுதிகள், உணவகங்கள் மற்றும் சூதாட்ட நிலையங்களை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதான தொற்றுநோயியல் நிபுணர், விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதிகரித்து வரும் கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக நாட்டின் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ள நிலையில் வைத்திய நிபுணர் அந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

## வரவு-செலவு திட்டத்தினூடாக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

சபையில் அமைச்சர் பந்துல குணவர்தன



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான திட்டங்கள் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கும் வரவு-செலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்படவிருப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

27/2 நிலையியற் கட்டளையின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

கொவிட்-19 பிரச்சினையால் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில் மட்டுமன்றி உலகில் அனைத்து நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.187 மில்லியன் பேர் தொழிலை இழந்துள்ளனர்.

06

## கொழும்பில் கர்ப்பிணி பெண்ணுக்கு கொரோனா

சுவாசக் கோளாறுக்கு சிகிச்சைக்கு வந்தவராம்



கொழும்பு, காசல் வீதி மகளிர் மகப்பேற்று மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கர்ப்பிணிப் பெண், சுவாசக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. கம்பஹா மீரிகம பகுதியை சேர்ந்த பெண்ணுக்கே இவ்வாறு

06

### அத்துமீறும் குடியேற்றங்கள்;

## சமலின் கவனத்திற்கு கொண்டு சென்ற சாணக்கியன் எம்.பி



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பிரதேசமான மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பகுதிகளில் அம்பாறை மாவட்ட பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினரால் அபகரிக்கப்படும் காணிகள் குறித்தும் இதனால் அப்பகுதியில் ஏற்படவுள்ள இன

06

### மக்களை தூண்டிவிட்டு பலிக்கடாவாக்கி பாராளுமன்றம் வந்தவர்;

## மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்க தமிழ் மக்கள் இனியும் தயாரில்லை

பாராளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் கஜேந்திரகுமாருக்கு பதில்



**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

தமிழ் மக்களை பலிக்கடாவாக்கி விட்டு வெளிநாட்டிற்கு தப்பியவர்கள் இன்று எம்மீது குற்றஞ்சாட்டுகின்றனர். மக்களை தூண்டிவிட்டு அவர்களை பலிக்கடாவாக்கியவர்கள் இவர்கள். இவர்களே எமது மக்களை மரணம் வரை விரட்டினர். இனியும் மண்குதிரையை நம்பி மக்கள் ஆற்றில் இறங்க மாட்டார்கள் என

06



## தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன்

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அரசியல் செய்ய வேண்டாமென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06



## கொரோனா பரவல் வீரியம் முன்னரை விட அதிகரிப்பு

டாக்டர் சுதத் சமரவீர எச்சரிக்கை

03

### பரீட்சை தடைகளை அகற்ற

## கூட்டு வழிநடத்தல் மத்திய நிலையம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

க.பொ.த உயர்தர பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதில் காணப்படும் தடைகளை அகற்றி அனைவரையும் பரீட்சையில் பங்கேற்கச் செய்யும் முகமாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையமும், பரீட்சைகள் திணைக்களமும் இணைந்த கூட்டு வழிநடத்தல் மத்திய நிலையமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டு செயல்பாட்டு மையமானது இடர் முகாமைத்துவ மத்திய நிலையமும், பரீட்சைகள்

06



தலைவரே, உங்கட தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவில தொடர்ந்தும் குழப்பமா இருக்கே.....?

குழப்பமா இருந்தாத்தான் அது கூட்டமைப்பு... அதைத்தான் எங்கட சனமும் விரும்புதடா தம்பி...!!

### பிரபாகரனின் மகன் குறித்த கருத்து

## பொன்சேகா மன்னிப்பு கோர வேண்டும் என்கிறார் சிவாஜி



இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றம் நடந்ததென்பதை ஏற்றுக்கொண்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சிறுவர் படையணியின் தளபதியென கூறியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் ஆட்சியாளர்களை சர்வதேச நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் அனைத்து தமிழ்த் தேசிய சக்திகளும் ஒன்றிணைய வேண்டுமென தெரிவித்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது,

06

### 20 ஆவது திருத்தம்; நிறைவேற்ற

## ஐ.ம.சவின் ஆதரவு மட்டுமே பெறப்படும் என்கிறார் மஹிந்தானந்த



**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**


20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவை மாத்திரம் தான் பெறுவோம். வேறு கட்சிகளின் ஆதரவை பெற மாட்டோமென அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

ஒத்திவைப்புவேளை விவாதத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

06

## நரிக்கடிக்குள்ளான ஒரு வயது குழந்தை

ஹொரணையில் பயங்கரம்



மீமனபலான பகுதியில் நரிக் கடிக்குள்ளான ஒரு வயது பெண் குழந்தை, சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு முற்றத்தில் சகோதரர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையே இவ்வாறு நரியின் கடிக்கு இலக்காகியுள்ளது. இச் சம்பவம் (07) மாலை இடம்பெற்றுள்ளது. குழந்தை தனது 05 மற்றும் 06 வயதுடைய

06

# சர்வதேச செய்திகள்

## இத்தாலியில் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயம்




கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பொது இடங்களில் முகக்கவசம் அணிவதை இத்தாலி கட்டாயமாக்கியுள்ளது. தனிப்பட்ட வீடுகள் தவிர வெளிப்புறத்தின் எல்லா இடங்களிலும் இத்தாலியர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விடவும் இத்தாலியில் கொவிட்–19 சம்பவங்கள் குறைவாக இருந்தபோதும், தொற்று எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பொருளாதாரத்தை சீர்குலைக்கும் முடக்க நிலை ஒன்றுக்கு திரும்புவதைத் தவிர்க்க கடும் நடவடிக்கைகள் எடுப்பது அவசியம் என்று இத்தாலி பிரதமர் கிசப்பே கொடே தெரிவித்துள்ளார்.

## கொரோனா பாதித்து ஒரு வாரம்: பணிக்கு திரும்பினார் டிரம்ப்

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு ஒரு வாரத்திற்குள் பணிக்குத் திரும்பி இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டார்.

ஜனாதிபதிக்கு 24 மணி நேரத்திற்கு மேலான காலத்தில் கொவிட்–19 அறிகுறிகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் நான்கு நாட்களுக்கு மேலாக காய்ச்சல் இன்றி இருப்பதாகவும் அவரது மருத்துவர் சீன் கொன்லி குறிப்பிட்டார்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை வீடியோ செய்தி ஒன்றை வெளியிட்ட டிரம்ப், தாம் நலமாக இருப்பதாகவும், “இது கடவுளின் ஆசிர்வாதம்” என்றும் குறிப்பிட்டார்.

கொரோனாவுக்கு எதிராக தாம் பெற்ற சிகிச்சை அனைத்து அமெரிக்கர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். ரெஜ்டினெரோன் மருத்தகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட அந்த மருந்துகளை இலவசமாக வழங்கப்போவதாகவும் டிரம்ப் வாக்குறுதி அளித்துள்ளார்.



சிகிச்சை முறைகளை விடவும் தமக்கு வழங்கப்பட்ட பரீட்சார்த்தமான அந்த நோய் எதிர்ப்பு மருந்து நோயை குணப்படுத்தியதாகவும், பலநூறு அயிரம் மருந்துகள் தயாராக இருப்பதாகவும் டிரம்ப் தெரிவித்துள்ளார். எனினும் ரெஜ்டினெரோனின் இந்த மருந்துக்கு அமெரிக்க அரச மருந்துக்கட்டுப்பாட்டகத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா தொற்றுக்கு உள்ளானது உறுதி செய்யப்பட்ட நிலையில் டிரம்ப் மூன்று நாட்கள் மருத்துவமனையில் கழித்துவிட்டு கடந்த திங்களன்று வெள்ளை மாளிகை திரும்பினார். எனினும் அவருக்கு தொடர்ந்து கொரோனா தொற்று இருப்பதாக மருத்துவர்கள் அப்போது தெரிவித்தனர்.

மருத்துவமனையில் இருந்து திரும்பியது தொடக்கம் டிரம்பின் செயற்பாடுகளை அவரது ஆதரவாளர்கள் பாராட்டியபோது, அவரது நடத்தை தவறானது என்ற குற்றச்சாட்டுகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செப்டெம்பரில் வரலாறு காணாத கடும் வெப்பம்



உலகில் இதுவரையில்லாத வகையில் செப்டம்பர் மாதம் மிகக் கடுமையான வெப்பம் பதிவாகியிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் புவி ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பாக, ஆர்க்டிக், சைபீரியாவின் வட பகுதி, மத்திய கிழக்கு வட்டாரம், வட ஆபிரிக்கா ஆகியவற்றில் கடந்த மாதம் கடும் வெப்பம் நிலவியது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் காட்டுத் தீச் சம்பவங்கள் நீடித்திருந்த வேளையில், லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் அதிகபட்சமாக 49 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானது. இவ்வாண்டில் ஜனவரி, மே, செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களில் இதுவரை இல்லாத அளவில் அதிகமான வெப்பம் நிலவியது. மிக சூடான ஆண்டு என்று பதிவான 2016 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு பதிவான வெப்ப அளவில் அதிக வித்தியாசம் இல்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

## அமெரிக்க பெண் கவிஞருக்கு இலக்கியத்திற்கு நோபல் பரிசு

அமெரிக்க பெண் கவிஞரான லுயிஸ் குலுக் இந்த ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளார்.

“அவரது தவறற்ற கவிதைக் குரலின் அபாரமான அழகு தனிப்பட்ட இருப்பை பிரபஞ்சமயமாக்குகிறது” என்று இந்த விருதை அறிவித்த நோபல் குழு பாராட்டியுள்ளது.

டைனமைட் கண்டுபிடிப்பாளரும் தொழிலதிபருமான அல்பிரெட் நோபலின் பெயரில் 1901 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வரும் நோபல் விருதில் லுயிஸ் குலுக் 1.1 மில்லியன் டொலர் பரிசுத் தொகையை வென்றுள்ளார்.

இந்த வார ஆரம்பத்தில் மருத்துவம், பௌதீகம் மற்றும் இராசாயனத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நிலையில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு நேற்று வெளியிடப்பட்டது.

எனினும் கடந்த பல ஆண்டுகளாக இலக்கியத்திற்கான நோபல் பரிசு சர்ச்சையை ஏற்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2018 ஆம் ஆண்டு இந்த விருது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் 2019இல் இரு வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.



அதிக விற்பனை கொண்ட பிரபல இலக்கியவாதிகளை நோபல் குழு தவிர்த்து வருவதோடு, அதிகம் அறியப்படாத இலக்கியவாதிகள் மீது கவனம் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது. கடந்த ஆண்டு வெற்றியாளரான ஆஸ்திரிய நாட்டின் எழுத்தாளரான பீட்டர் ஹான்ட்கே மீது பரவலாக விமர்சனங்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

1943 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் பிறந்த லுயிஸ் குலுக் 1968 ஆம் ஆண்டில் ‘பர்ஸ்ட் பார்ன்’ என்ற கவிதை மூலம் அறிமுகமானார். பின்னர் அமெரிக்க சமகால இலக்கியத்தில் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவராக பாராட்டபபட்டார். அவர் 12 கவிதைத் தொகுப்புகளையும், கவிதைகள் குறித்த சில கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

## ஆப்கானில் இருந்து அமெரிக்க படைகளை வாபஸ்பெற திட்டம்



ஆப்கானில் இருக்கும் அனைத்து அமெரிக்கத் துருப்புகளும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வீடு திரும்புவார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஆப்கானில் இருக்கும் அமெரிக்கத் துருப்புகள் 2,500 ஆக குறைக்கப்படும் என்று அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கூறிய நிலையிலேயே டிரம்ப் கடந்த புதன்கிழமை இதனைத் தெரிவித்திருந்தார்.

அமெரிக்கா மற்றும் தலிபான்களுக்கு இடையே கடந்த பெப்ரவரியில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி தலிபான்களின் தீவிரவாத எதிர்ப்பு உத்தரவாதத்திற்கு பகரமாக 2021 மே மாதத்திற்குள் வெளிநாட்டுத் துருப்புகள் ஆப்கானில் இருந்து வெளியேற இணக்கம் எட்டப்பட்டது.

இதற்காக ஆப்கான் அரசுடன் தலிபான்கள் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு வரவேண்டி இருப்பதோடு அதிகார பகிர்வு முறை ஒன்றுக்கு இணங்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பரில் ஆப்கானில் அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கை 5,000 மற்றும் 4,000க்கும் இடையே குறைக்கப்படும் என்று டிரம்ப் மற்றும் ஏனைய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் டிரம்பின் புதிய அறிவிப்பு அவரது உத்தரவா அல்லது வாக்குறுதியா என்ற தெளிவில்லாமல் உள்ளது.

## புர்கினா பாசோ தாக்குதலில் இடம்பெயர்ந்த 25 பேர் பலி

புர்கினா பாசோவில் இடம்பெயர்ந்தவர்களை ஏற்றி தமது சொந்த ஊர்களுக்கு அழைத்துச் சென்ற வாகனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருக்கும் இந்த சம்பவத்தில் ஆயுததாரிகள் ஆண்களை மாத்திரம் வேறாக பிரித்து கொன்றிருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது. இதன் போது பெண்கள் மற்றும் சிறுவர்களை விடுவித்ததாக உயிர்தப்பியவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாதுகாப்பு நிலை மேம்பட்டிருப்பதான நம்பிக்கையில் இடம்பெயர்ந்த மக்கள் பசில்லா நகரில் இருந்து தமது சொந்த ஊருக்கு திரும்பும் வழியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.



மேற்கு ஆபிரிக்காவில் அமைதியான நாடுகளில் ஒன்றாக இருந்த புர்கினா போசோவில் ஆயுதப் போராட்டங்கள் காரணமாக வன்முறை அதிகரித்திருப்பதோடு, இவ்வாறான வன்முறைகளில் இந்த ஆண்டில் 2,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இந்த மோதல்களால் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரேசிலில் கொரோனா தொற்று ஐந்து மில்லியனைத் தொட்டது

பிரேசிலில் கொரோனா தொற்று சம்பவங்கள் 5 மில்லியனை கடந்திருப்பதோடு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 150,000ஐ நெருங்கி இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரேசிலில் மேலும் 31,553 புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவானதை அடுத்து அங்கு பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 5,000,694 ஆக அதிகரித்துள்ளது என்று அந்நாட்டு சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு அடுத்து உலகில் அதிகமான நோய்த் தொற்று பாதிப்பு கொண்ட நாடாக பிரேசில் உள்ளது.



அதேபோன்று கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் 734 பேர் உயிரிழந்திருப்பதோடு அந்நாட்டில் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 147,228 ஆக அதிகரித்துள்ளது.

எனினும் பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ இந்த வைரஸ் அச்சுறுத்தல் குறித்து குறைமதிப்பீடுகளை வெளியிட்டு வருவதோடு இதற்கு எதிரான முடக்க நடவடிக்கைகளையும் பொருட்படுத்தாமல் உள்ளார்.

## போர் நிறுத்த முயற்சிகளுக்கு இடையே அசர்–ஆர்மேனியா தொடர்ந்தும் மோதல்



தெற்கு காகசஸில் முழு அளவில் போர் ஒன்று வெடிப்பதை தவிர்ப்பதற்கு அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா, ஜெனீவா நகரில் கூடவிருக்கும் நிலையில் அசர்பைஜான் மற்றும் ஆர்மேனிய இனப் படைகளுக்கு இடையில் நேற்றும் மோதல் ஏற்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய நகொர்னோ கரபக் பிராந்தியத்தைச் சூழவே புதிய மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

கன்ஜா நகர் மீது ஆர்மேனிய படைகள் பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக அசர்பைஜான் குறிப்பிட்டுள்ளது.

கொரன்போன் பிராந்தியத்தில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. ஏனைய கிராமங்கள் மீது ஆர்மேனிய இனப் படையினர் சூடு நடத்தியதாகவும் அசர்பைஜான் கூறியது.

கடந்த செப்டெம்பர் 27 ஆம் திகதி மோதல் ஆரம்பமானது தொடக்கம் 30 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அசர்பைஜான் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இதில் மேலும் 143 பொதுமக்கள் காயமடைந்ததாகக் குறிப்பிடும் அசர்பைஜான் இராணுவத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து குறிப்பிடவில்லை.

மறுபுறம் தற்போதைய நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கும் நகொர்னோ கரபக் பிராந்திய ஆர்மேனிய இன நிர்வாகத்தினர் தொடர்ந்து பீரங்கி மற்றும் ரொக்கெட் தாக்குதல்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

மலைப் பிராந்தியமான நகொர்னோ கரபக் அசர்பைஜான் நாட்டு எல்லைக்குள் இருந்தபோதும் அது ஆர்மேனிய இனப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த மோதல் ஆரம்பித்தது தொடக்கம் 12 பொதுமக்கள் மற்றும் 320 படையினர் கொல்லப்பட்டிருப்பதாக ஆர்மேனிய இனப் படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் ஜெனீவாவில் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைக்கு அசர்பைஜான் வெளியுறவு அமைச்சர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் ஆர்மேனியா தனது வெளியுறவு அமைச்சரை அனுப்பவில்லை.

இந்நிலையில் ஆர்மேனிய வெளியுறவு அமைச்சரை வரும் திங்கட்கிழமை மொஸ்கோவில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் நாட்டு பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

அசர்பைஜானின் நெருங்கிய நட்பு நாடான துருக்கி மற்றும் ஆர்மேனியாவின் பாதுகாப்பு கூட்டாளியான ரஷ்யா இந்த மோதலில் நேரடியாக தலையிடும் வாய்ப்பு அதிகரித்திருப்பதே சர்வதேச அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.



கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸுக்கும் இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்த்துவுக்கும் (Eric Lavertu) இடையிலான சந்திப்பு கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்றபோது.

# இயற்கை எரிவாயு மூலம் மின் உற்பத்தி

## அமைச்சர் டளஸ் அழகப்பெரும



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

இயற்கை எரிவாயு மூலம் உற்பத்தி செய்யப்படும் 600 மெகாவாட் மின்சாரம் மூன்று வருடங்களுக்குள் தேசிய மின் இணைப்புக்குப் பெற்றுக் கொடுக்கப்படுமென அமைச்சர் டளஸ் அழகப்பெரும பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எரிபொருள் மூலம் மேற்கொள்ளப்படும் மின் உற்பத்திக்கு பெரும் செலவு ஏற்படுவதால் 2025 ஆம் ஆண்டுக்குள் தற்போது 32 வீதமாக உள்ள அத்தகைய உற்பத்தியை 05 வீதமாக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2015 தொடக்கம் 2019 வரையான கால கட்டங்களில் மின்சார சபைக்கு பில்லியன் கணக்கில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றை நிவர்த்தி செய்து இலாபம் ஈட்டும் வகையில் மின்சார சபையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (08) வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் சமிந்த விஜேசிறி எம்.பி.எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

06

# ஜும்ஆ தொழுகைக்கு 50 பேருக்கே அனுமதி

கொவிட் 19 வைரஸ் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளதால், இன்று ஜும்ஆத் தொழுகைக்கு பங்கேற்போரின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கிணங்க இன்று ஜும்ஆத் தொழுகைக்கு ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் ஐம்பதுக்கு உட்பட்டோரே அனுமதிக்கப்படவுள்ளனர். மேலும் ஐவேளை தொழுகைகளிலும் இந்த எண்ணிக்கையில் மக்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இது குறித்து நேர காலத்துடன்

06

# மினுவாங்கொடை தொழிற்சாலையில் நேற்று மாலைவரை 1,042 பேர் பதிவு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 வைரஸ் தொற்றுக்குள்ளான 217 பேர் நேற்று வியாழக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொவிட் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இனங்காணப்பட்டுள்ள 207 பேரில் 202 பேர் மினுவாங்கொடை தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் என்பதுடன், 03 பேர் ரஷ்யாவிலிருந்து வந்த இலங்கையார் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் தனிமைப்படுத்தல் முகாமிலுள்ள இந்தியாவை சேர்ந்தவர்களென்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் நேற்று மாலைவரை 1,034 பேர் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக பி.சீ.ஆர். பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கியூ.ஆர்.668 விமானத்தின் மூலம் வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த 42 பேர் நேற்று அதிகாலை இலங்கை வந்துள்ளனர். இவர்கள் முப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை வரை 49,577 பேர் தனிமைப்படுத்தல் செயல்பாட்டை முடித்துக்கொண்டு தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். முப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 80 தனிமைப்படுத்தல் முகாம்களில் 8,029 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 3,08 989 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கொவிட் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் சுமார் 85 பேருக்கு பி.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் மினுவாங்கொடை பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. மினுவங்கொடை பொலிஸ் நிலையத்தில் உணவகமொன்றை பராமரித்துச் சென்ற

06

# யுத்த காலத்தில் வடக்கில் இரசாயன ஆயுத பயன்பாடு

## வடக்கில் புற்றுநோயாளர் அதிகரிக்க காரணம்



யுத்த காலத்தின் போது பயன்படுத்தப்பட்ட இரசாயனங்களாலும் வேறு பல காரணிகளாலும் வடக்கில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் சிகிச்சை வழங்கும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு, தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் (07) நடைபெற்ற ஒத்திவைப்பு பிரேரணையின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில், யாழ் மாவட்டத்தின் ஒரு பிரச்சினைத் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தலாம் என நினைக்கின்றேன். யுத்தம் காரணமாக வடக்கில் புற்றுநோயாளர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகமாக காணப்படுகின்றனர்.

போரின் போது பயன்படுத்தப்பட்ட இரசாயனங்களாலும் வேறு பல காரணிகளாலும் அங்கு புற்றுநோயாளர் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. அநுராதபுரம் கொழும்பு போன்ற பகுதிகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக செல்லமுடியாத மக்களுக்கான சிகிச்சை வழங்கும் நிலையமாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவே காணப்படுகிறது.

இது வட மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. 70, 80களில் இந்த வைத்தியசாலை

06

# இன்று பாராளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்விகள் மாத்திரமே

இன்று காலை (09) 10 மணிக்கு ஆரம்பமாகும் பாராளுமன்ற அமர்வுகளை வாய்மூல விடைக்கான கேள்விகளை மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு நேற்று (08) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மறைந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர் சுரங்கனி எல்லாவல, அமரர் ஆர்.ஆர்.டபிள்யூ.ராஜபக்ஷ அமரர் கே.பி.சில்வா ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை இன்று முன்வைக்காது எதிர்வரும் 23ஆம் திகதி முன்வைப்பதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# 20 ஆவது திருத்தம் அடுத்த அமர்வின் ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்த சட்டமூலம் அடுத்த பாராளுமன்ற அமர்வின் ஒழுக்குப்பத்திரத்தில் முதலாவதாக உள்வாங்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்த யோசனை கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றது விசாணை நிறைவடைந்துள்ள நிலையில் 12 ஆம் திகதிக்கு முன்னர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட

06

அதிகளவான தொழிலாளர்களை கொண்ட

# அனைத்து தொழிற்சாலைகளிலும் PCR பரிசோதனைகளுக்கு ஏற்பாடு



அதிகளவான தொழிலாளர்களை கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா தொற்று சம்பவத்தைத் தொடர்ந்து அதிகளவான தொழிலாளர்களைக் கொண்ட அனைத்து தொழிற்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை சம்பவத்திற்குப் பின்னர், முன்னெச்சரிக்கையாக பி.சி.ஆர் பரிசோதனையை தொடர்ச்சியாக நடத்த அதிகளவான தொழிலாளர்களை கொண்ட அனைத்து தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் தகவல் கொடுத்துள்ளோமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவராவது வைரஸுடன் அடையாளம் காணப்பட்டால், அனைத்து ஊழியர்களிடமும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதே விதிமுறையாகும்

06

# இந்தியா அல்லது எந்தவொரு நாட்டிலிருந்தும் எவரும் ஆடைத்தொழிற்சாலைக்கு வரவில்லை

## பிரண்டிக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிப்பு




இந்தியா அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தும் எந்தத் தரப்பினரும் மினுவாங்கொடை ஆடை உற்பத்தித் தொழிற்சாலையை அணுகவில்லை என பிரண்டிக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடையில் பிரண்டிக்ஸ் தொழிற்சாலையில் கண்டறிந்த கொவிட் 19 தொற்று தொடர்பாக எழுந்த வினாக்கள் குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் அந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'எங்கள் பிரண்டிக்ஸ் நிறுவனம், மினுவாங்கொடையில் அமைந்துள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட கொவிட் 19 நெருக்கடியை வழிநடத்தும் சவாலை தொடர்ந்து எதிர்கொள்கிறது. இந்த செயல்முறை முழுவதும், வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், பொதுமக்கள் எழுப்பும் எந்தவொரு வினாவைப் பற்றியும் புதுத் தகவல்களை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம்.

மினுவாங்கொடையில் அமைந்துள்ள எங்கள் தொழிற்சாலையில் வெளிநாட்டினர் பணிபுரிகின்றனர் என்பதை குறித்து வினாக்கள் எழுந்துள்ளன என்பதை நாங்கள் புரிந்துள்ளோம். இந்தியாவிலிருந்து அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தும் எந்தவொரு தரப்பினரும் இத்தொழிற்சாலையை அணுகவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும். மேலும் மினுவங்கொடை தொழிற்சாலையில் இந்தியாவிலிருந்து எந்தவொரு துணியையும் பயன்படுத்தவில்லை என்பதையும், இந்தியாவில் உள்ள எங்கள் தொழிற்சாலைகலிளிருந்து எந்த தயாரிப்பு ஆர்டர்களையும் எடுக்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

06

# கொரோனா பரவல் வீரியம் முன்னரை விட அதிகரிப்பு

## டாக்டர் சுதத் சமரவீர எச்சரிக்கை



முன்னைரைவிட மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா தொற்றின் பரவல் வீரியம் அதிகமென பிரதான தொற்றுநோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா தொற்று சமூக மட்டத்தில் வேகமாக பரவிவருவது தொடர்பில் நேற்று தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

முன்னரை விடவும் மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா தொற்றின் பரவல் வீரியம் அதிகமாக இருக்கிறது. வைரஸின் வீரிய முறை மாற்றங்கள் இந்த வகை சூழ்நிலைக்கு வழிவகுத்திருக்கலாம். இதன்காரணமாக இந்த வைரஸினால் ஒரு வரிடமிருந்து மற்றவர் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகிறது.

தற்போது கொரோனா பரவல் நிலைமை தீவிரமாக இருப்பதால், மக்கள் தற்போதைய சுகாதார வழிகாட்டுதல்களைக் தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டும்.

இதன்மூலம் தற்போதைய வைரஸ் சமூகத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பெரும் பாதிப்பை தடுக்கமுடியும். இதேவேளை மினுவாங்கொடை தொழிற்சாலை கொரோனா பரவலின் அனைத்து தொடர்புகளையும் கண்டறிய கணிசமான காலம் எடுக்கும்.

இதற்கிடையில், மினுவாங்கொடை பகுதியில் மட்டுமல்ல, பிற பகுதிகளிலும் மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், தொழிற்சாலையின் பல பணியாளர்கள் யாழ்ப்பாணம், மாத்தளை, குருநாகல், மற்றும் மொனராகலை போன்ற

06

இந்தியாவில் 24 மணி நேரத்தில்

# புதிதாக 78,524 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 68 இலட்சத்தை கடந்துள்ள நிலையில், 58.27 லட்சம் பேர் குணமடைந்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உலகில் வேகமாக வைரஸ் பரவும் நாடுகளில் இந்தியா முதலிடத்திலுள்ளது. கடந்த மாதம் தினமும் நோய்த்தொற்று ஒரு இலட்சத்தை எட்டிய நிலையில், தற்போது குறையத் தொடங்கி உள்ளது. அதேசமயம் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கடந்த சில தினங்களாக ஆயிரத்திற்கும் கீழ் குறைந்துள்ளது.

இந்நிலையில், நேற்றுக் காலை இந்திய மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 68 இலட்சத்தை தாண்டியுள்ளது. மொத்த பாதிப்பு 68 இலட்சத்து 35 ஆயிரத்து 656 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 78 ஆயிரத்து 524 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 971 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை

06

# கொவிட் 19 வைரஸை கட்டுப்படுத்த முடியும்

## டாக்டர் சுதத் சமரவீர

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பரவியுள்ள கொவிட் 19 வைரஸை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன், இங்கு அடையாளம் காணப்படும் நோயாளர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை அளிப்பதற்கான இயலுமை சுகாதாரத்துறைக்கு உள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வு பிரிவின் பிரதான வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 21

**குறள் தரும் சிந்தனை**



இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல் வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

## கொரோனா சவாலை முறியடிப்பதில் மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் கொவிட் 19 தொற்று பதிவாக ஆரம்பித்ததைத் தொடர்ந்து நாட்டின் பல பிரதேசங்களிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் இனங்காணப்பட்ட போதிலும், அவர்கள் மினுவாங்கொடை தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்களாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தொற்று இந்த வகையில் பதிவாகின்ற போதிலும் அதன் பரவலை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் விரிவாக முன்னெடுக்கப்படுக்கின்றன. குறிப்பாக சுகாதாரத் துறையினரும் பாதுகாப்புத் துறையினரும் இந்நடவடிக்கைகளை பரந்த அடிப்படையில் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் கொரோனா தொற்று தொடர்பிலான பி.சி.ஆர் பரிசோதனை நடவடிக்கை விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. இந்நாட்டில் இவ்வைரஸ் தொற்று பதிவாகத் தொடங்கிய மார்ச் மாதம் முதல் கடந்த ஏழு மாத காலப் பகுதியில் அதிகூடிய பி.சி. ஆர் பரிசோதனை நேற்றுமுன்தினம் 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தினத்தில் மாத்திரம் 5608 பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அத்தோடு தற்போது கொவிட் 19 தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளுடன் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையும் நேற்றுமுன்தினம் முதல் இச்சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தவென பரந்துபட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் சிலர் மக்களை குழப்பும் வகையில் வதந்திகளை பரப்பவும் முயற்சி செய்கின்றனர். இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு அற்ப அரசியல் இலாபம் தேடுவதை நோக்காகக் கொண்டுள்ளது. அதனால் மக்கள் வதந்திகள் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும். அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தகவல்களையும், சுகாதார தரப்பினரின் வழிகாட்டல்களையும், பாதுகாப்புத் தரப்பினரின் அறிவுறுத்தல்களையும் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'இத்தொற்று உலகில் வேகமாக பரவிக் கொண்டிருந்த சூழலில் இந்நாட்டு மக்களாகிய நாமனைவரும் ஒன்றுபட்டு ஒரு தேசமாக இதன் பரவலை வெற்றிகரமாக கட்டுப்படுத்தினோம். ஆனால், எங்கோ இழைக்கப்பட்ட ஒரு அலட்சியமான தவறு காரணமாக இத்தொற்று மீண்டும் நாட்டில் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் முன்னரைப் போன்று இம்முறையும் இத்தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினர் வழங்கும் அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை அலட்சியப்படுத்தாமல் நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் பின்பற்றுங்கள்' என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இந்நாட்டில் கொவிட் 19 தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்கம் வழங்கியிருந்த அறிவுறுத்தல்களை பின்பற்றுவதில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அலட்சியப் போக்கின் விளைவாகவே இத்தொற்று மீண்டும் ஏற்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதனால் முன்பைப் போன்று இத்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உச்சபட்ச ஒத்துழைப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

இது கண்ணுக்கு புலப்படாத ஒரு வைரஸ் தொற்று. இவ்வைரஸானது சமூக இழுக்குக்குரிய ஒன்றல்ல. இருப்பினும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களை சிலர் ஒதுக்கலுக்கு உள்ளாக்குவதாகவும் அவர்களைத் தவறான கண்கொண்டு நோக்குவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் விளைவாக சிலர் தங்களது நோய் நிலை தொடர்பில் பகிரங்கமாக கதைக்கவோ மருத்துவ பரிசோதனைகளுக்கு முன்வரவோ பின்வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. முற்றிலும் பிழையான செயற்பாடாகும். கொரோனா தொற்றை தவறான கண்கொண்டு நோக்குவதும் முற்றிலும் பிழையான நடவடிக்கை. கொவிட் 19 தொற்று ஏனைய வைரஸ்களைப் போன்ற ஒன்றான போதிலும் அது வேகமாக ஆளுக்காள் தொற்றி பரவக் கூடியதாக விளங்குகின்றது. அதன் தொற்றை தவிர்த்துக் கொள்வதில் மக்கள் அதிக கவனம் செலுத்துவது மிக அவசியம்.

ஏனெனில் இவ்வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவோ தவிர்த்துக் கொள்ளவோ இற்றை வரையும் மருந்துகள் புழக்கத்திற்கு வரவில்லை. அதனால் இவ்வைரஸ் தொற்றை தவிர்த்துக் கொள்வதற்காக சுகாதார தரப்பினரும் பாதுகாப்புத் துறையினரும் வழங்கும் அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை உச்சளவில் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். அது இவ்வைரஸின் தொற்றையும் பரவலையும் கட்டுப்படுத்துவதற்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாகவும் ஒத்துழைப்பாகவும் அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அவசியமில்லாமல் வீட்டை விட்டு எவரும் வெளியேற வேண்டாம்!



கொரோனா தொற்று அச்சுறுத்தல் நிலவுகின்ற இக்காலத்தில் அநாவசியமாக வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச கொரோனா பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது மீண்டும் பரவியுள்ள கொவிட் 19 தாக்கத்தைத் தடுப்பதற்காக பிரதேச செயலக ரீதியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் முன்னாயத்த கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரனின் வழிகாட்டலில் பதில் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன், திருக்கோவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி.அ.அனோஜா, நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜெயசுந்தரி கணேசராஜா, நிருவாக கிராம உத்தியோகத்தர் திருமதி எஸ்.பரிமளவாணி, சிரேஷ்ட கிராம உத்தியோகத்தர் கண.இராஜரெட்ணம், திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.ஜெயவீர, திருக்கோவில் காஞ்சிரங்குடா 242 இராணுவ முகாம் கட்டளைத் தளபதி பி.திஸாநாயக்கா, திருக்கோவில் வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் ஏ.பி. மஸ்ஹூத், திருக்கோவில் விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி, பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் அக்கரைப்பற்று தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் இ. மகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

## வெளியிடங்களில் இருந்து வருவோர் கிராம சேவகரிடம் பதிய வேண்டும்

### திருக்கோவில் பிரதேச செயலகத்தில் தீர்மானம்

வெளியிடங்களிலிருந்து திருக்கோவில் பிரதேசத்திற்கு வருவோர் உடனடியாக கிராம சேவை அலுவலரிடம் பதிய வேண்டும். அதே போன்று ஞாயிறு சந்தை உள்ளிட்ட பல்வேறு தேவைகளின் நிமித்தம் இங்கு வரும் வாகனங்கள் அனைத்தும் பதியப்பட வேண்டும்.

பொதுமக்கள் வீட்டில் இருந்து வெளியேறும் போது முகக்கவசம் அணிதல் அவசியம். மக்கள் கூட்டமாக நிற்பதைத் தவிர்த்தல் வேண்டும். வெளிச் சூழலில் இருந்து வீட்டுக்குச் சென்றவுடன் கைகளை சவர்க்காரம் அல்லது கையை சுத்த செய்யும் பதார்த்தங்களை இட்டு கழுவுதல் பிரதானமாகும். அதே போன்று அவசியம் இல்லாமல் வெளியில் வருவதை தடுத்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அவசியமேற்படின் பொதுஇடங்களில் தொற்று நீக்கம் செய்யவும், அவசியமான உணவுப் பொருட்களை காலடிக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யவும் முப்படையினர், சுகாதார வைத்திய பணிமனையினர், பிரதேச சபையினர் தயார் நிலையிலிருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட சகல தீர்மானங்களும் அந்தந்த பிரிவு ஆலய ஒலிபெருக்கி வாயிலாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(காரைதீவு குறூப் நிருபர்)

# 'குறைபாடுகள் இல்லாத மனிதன் இல்லை: நான் கூட தவறுகள் இழைக்கக் கூடியவன்'

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவராக எந்த விதமான இடைவெளியும் இல்லாமல் தொடர்ந்து 19 ஆண்டுகள் செயல்பட்டு, 20ம் ஆண்டில் பிரதமர் மோடி 7ம் தேதி அடியெடுத்து வைத்தார். இதற்காக பலதரப்பிலிருந்தும் அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

இந்த 20 ஆண்டு கால தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவராக நரேந்திர மோடி இருந்து வருவதன் அடிப்படையில் அவர் இந்தி மொழியில் தொடர் ட்வீட்களில் சில கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார்.

“எனக்கு நாட்டு நலனும் ஏழைகளின் நலனுமே முக்கியம் என்பதை நாட்டு மக்களுக்கு மீண்டும் உறுதிபட கூற விரும்புகிறேன். எந்த ஒரு நபரும் தன்னிடம் குறைபாடுகள் இல்லை என்று கூறிக் கொள்ள முடியாது. நீண்ட காலமாக முக்கியமான, பொறுப்புள்ள பதவிகளில் நான் இருந்து கொண்டிருக்கிறேன், ஒரு மனிதனாக நான் கூட தவறுகள் இழைக்கக் கூடியவனே.

என்னிடம் உள்ள குறைபாடுகளையும் மீறி என் மீதான மக்களின் நேயம் அதிகரித்து வருவது என் நல்லதிர்ஷ்டமே. உங்களது ஆசிகளும் அன்பும் நாட்டுக்கு சேவை செய்யும், ஏழைகளின் நலம் காக்கும், இந்தியாவை புதிய உயரங்களுக்கு இட்டுச் செல்லும் உறுதிப்பாட்டை வலுவாக்குகிறது.

சிறு வயது முதலே என் விதைக்கப்பட்ட ஒரு கருத்து என்னவெனில் மக்களே மகேசன், ஜனநாயகத்தில் மக்கள் கடவுள் போன்று சக்தி வாய்ந்தவர்கள்.

நீண்ட காலமாக நாட்டு மக்கள் என்னை நம்பி பல முக்கிய பொறுப்புகளை ஒப்படைத்துள்ளனர். அவற்றை நிறைவேற்ற நான் உண்மையான அர்ப்பணிப்புள்ள முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்” இவ்வாறு மோடி தெரிவித்துள்ளார்.



## ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக 20வது வருடத்தில் காலடி

# மனித வாழ்வின் அங்கமாகியுள்ள தபால் துறை

உலக தபால் தினம் ஒக்டோபர் 9ம் திகதி சர்வதேச ரீதியில் கொண்டாடப்படுகிறது. 1874ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ம் திகதி சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் சர்வதேச தபால் ஒன்றியம் (Universal Postal Union) ஸ்தாபிக்கப்பட்டது. இதை நினைவுகூரும் முகமாக ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் 9ம் திகதி உலக தபால் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது

இலங்கையில் 1815 இல் முதன் முதலாக ஆறு தபால் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 22.08.1872இல் முதன் முதலில் தபால் அட்டை அறிமுகமானது.

ஆரம்ப காலத்தில் கடிதங்களைப் போடுவதற்கு தபால் பெட்டிகள் பயன்படுத்தப்படவில்லை. கடிதங்களைக் கொண்டு செல்பவர்களே கடிதங்களைப் பெற்றும் வந்தனர். 1653 ஆம் ஆண்டு தபால் பெட்டி அறிமுகமாகியது. சார்ஸ் ரீவ்ஸ் என்பவர் தபால்பெட்டிக்கு மாதிரி வடிவத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.



சிவப்பு வண்ணம் மக்களது பார்வையை உடனடியாக ஈர்க்கும் சக்தி கொண்டதால் தபால் பெட்டிகளுக்கு சிவப்பு வண்ணம் பூசலாம் என பிரித்தானிய அரசு அறிவுறுத்தியது. இது போஸ்ட் ஒபீஸ் ரெட் என ஒரு வர்ணமாகவே பிரபலமாயிற்று. பச்சை நிறத் தபால் பெட்டிகளும் பின்னர் அறிமுகமாயின. ஆனால் அவை மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்நாட்டு தபால்களைப் போடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஒட்டும் தன்மையுள்ள முத்திரைகளும், ஒரே அளவைக் கொண்ட தபால் கட்டணமும் ஜேம்ஸ் சாமேர்ஸ்' (James Chalmers) என்பவரால் 1834 ஆண்டளவில் முன் வைக்கப்பட்டன. இன்று வரை முத்திரையில் நாட்டுப் பெயரைக் குறிப்பிடாமல் அச்சிடும் ஒரே நாடு பிரித்தானியாவாகும்.



தபால்துறை என்பது மற்ற எல்லாத் துறைகளையும் விட சிறப்பானதொன்றாகும். இது மனித வாழ்வின் அங்கமாக தற்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கிறது. அறிவியல் கருவிகள் கண்டுபிடிப்பதற்கு முன் செய்திக் கருவியாய் விளங்கியது நம் தபால் துறைதான்.

ஆரம்ப காலத்தில் ஒருவர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்திகளை அனுப்பப் பயன்பட்டது கடிதங்கள். அவை வெறும் காகிதங்கள் மட்டும் அல்ல. சில கடிதங்கள் காவியமாகவும், வரலாறாகவும் ஆகியுள்ளன. இன்றளவும் நம் உலகம் அறிவியல் ரீதியாக வளர்ந்துதான் வருகின்றது.

## உலக அஞ்சல் தினம் இன்று

(தகவல்: ஆர். நடராஜன்)




## கல்முனை வடக்கு செயலாளர் பிரிவில்

# நிர்மாணிக்கப்பட்ட முதியோர் பராமரிப்பு நிலையம் பிரதிநிதிகளிடம் ஒப்படைப்பு

*பெரியநீலாவணை விசேட நிருபர்*

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பெரியநீலாவணை தொடர் மாடி வீட்டுத் திட்டத்தில் இருபது இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட முதியோர் மத்திய நிலையத்தை பராமரிக்கும் பொறுப்பு பெரியநீலாவணை01பி முதியோர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ் தலைமையில் நேற்று (08) இந்நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டில் கொரோனா மீண்டும் தீவிரமடைந்து வருவதால், கல்முனை பிராந்தியத்தில் பொது மக்கள் ஒன்று கூடல்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த முதியோர் இல்லத்தின் திறப்பு விழா தவிர்க்கப்பட்டு, சங்கத்தின் பிரதி நிதிகளிடம் பராமரிப்பு மத்திய நிலையம் கையளிக்கப்பட்டது. வருகை தந்திருந்த முதியோர் சங்க பிரதிநிதிகளிடத்தில் பிரதேச செயலாளர் உரையாற்றினார். அங்கு அவர் கூறியதாவது:

எங்களை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையர்கள் தான் இன்று முதியவர்களாக உள்ளனர். தாய், தந்தையர்களை கனம் பண்ண வேண்டியது எமது பொறுப்பு.

இதனால்தான் தாய், தந்தையர்களை இறைவனுக்கு ஒப்பிடுகிறார்கள். முதியோர்களை திட்டுவதும், மரியாதைக் குறைவாக நடாத்துவதும் குற்றமாகும். நாம் முதியோர்களை



பாதுகாக்க வேண்டும். இவர்களது அனுபவம் முக்கியமானது. இவர்களின் அனுபவங்களை கொண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வினைத்திறன் கூடியதாக செய்யலாம்.

இன்று அரசாங்கம் முதியோருக்கு பல சலுகைகளை வழங்கி வருகின்றது. முதியோருக்கான மாதாந்த கொடுப்பனவு, இலவச வைத்திய சேவை, சமுர்த்தி கொடுப்பனவு, விசேட அடையாள அட்டை, வாழ்வாதார உதவிகள் எனப் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றகீப், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.ஐ.எம். முர்சித், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.எல்.சுபாஸ்கரன், கிராம சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கொரோனா:

# தொற்றுக்குள்ளான 78 பேர் காத்தான்குடியில் அனுமதி

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

கொரோனா தொற்றுக்குள்ளான 78 பேர் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி ஆதார வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட

கொரோனா தொற்றுக்குள்ளான 78 பேரே காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களும் இன்னும் சிலருமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் (07) கடந்த புதன்கிழமை நள்ளிரவு பஸ் வண்டியில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளோரில் கம்பஹா மாவட்டம் உட்பட பல பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர்.

# திராய்க்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு போட்டோகொப்பி இயந்திரம்

## மக்கள் வங்கியின் இந்து மா மன்றம் உதவி

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

திராய்க்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கப்பட்டது. மக்கள் வங்கி இந்து மா மன்றம் இதனை அன்பளிப்புச் செய்தது.

அட்டாளைச்சேனை மக்கள் வங்கி கிளையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உதவிப் பொது முகாமையாளர் ஆர்.ரவிகரன் மற்றும் பிராந்திய முகாமையாளர் கபில திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் எம்.ஐ.எஹியா தலைமை தாங்கினார்.

திராய்க்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எம்.சண்டேஸ்வரனிடம் போட்டோ கொப்பி இயந்திரம் கையளிக்கப்பட்டது.

மேலும் பிரதி முகாமையாளர்களான எஸ்.எம்.ஏ.ஜவாத், பி.விஜிதா, அட்டாளைச்சேனை மக்கள் வங்கி கிளையின் வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். நபீல், அம்பாறை மாவட்ட இந்து மாமன்ற இணைப்பாளர் ஏ.சுந்தரராஜன் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களும் இதில் கலந்து கொண்டனர்.

# பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு உபகார நிதி

*அட்டாளைச்சேனை குறூப் நிருபர்*

அக்கரைபற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, ஆயிஷா பாளிகா மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில், கபொத உயர்தர வகுப்புகளில் பயிலும் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு உபகார நிதி வழங்கப்பட உள்ளது. இலங்கயர் நம்பிக்கை நிதியம்” என்ற சமூக சேவா அமைப்பினர் இதற்கு முன் வந்துள்ளனர்.

அக்கரைபற்று முஸ்லிம் மத்திய கல்லூரி ஒன்று கூடல் மண்டபத்தில் அதிபர் எ.எம். முஜீன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இது தொடர்பான வைபவம் நடந்தது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு உபகார நிதி வழங்



கும் வைபவத்தில் அமைப்பின் ஸ்தாபக தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பொறியியலாளர் ஜாஹ்பர் மொஹமத் இஸ்மாயில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார். தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், அவர்களது தாய்மார்கள், பழைய மாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் உரையாற்றிய பொறியியலாளர் ஜாஹ்பர் மொஹமத் இஸ்மாயில் கூறியதாவது; கல்வி ஒருவரது பாரிய சொத்தாகும். இதன் வளர்ச்சிக்கும் கல்வியில் ஆவலாக உள்ளோர்களுக்கும் உதவுவது பெரும் பாக்கியமாகும்.

அதிலும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக கல்வியை தொடர முடியாதவர்களுக்கு உதவுவது பெரும் பேறாகும். எனக்கு இந்தப்பாக்கியம் கிடைத்தமைக்கு நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்’ என்றார்.

இதுபோன்ற ஒரு வைபவம் ஆயிஷா பாளிகா மகாவித்தியாலயத்திலும் அதன் அதிபர் திருமதி நஜீமா ஹரருதீன் தலைமயில் நடைபெற்றதும் குறிப்படத்தக்கது.

## கொரோனா அச்சம்:

# மட்டு.மாவட்டத்தில் பூங்காக்கள் சுற்றுலாத் தளங்கள் பூட்டு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

நாட்டின் பல பாகங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு தொழில்நுட்பக்கல்லூரி, பூங்காக்கள் மற்றும் சுற்றுலாத் தளங்கள் என்பனவும் மூடப்பட்டுள்ளது. மேலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவாக பார்வையிட வரும் காத்தான்குடி அல்அக்ஸா பள்ளிவாசலும் மறு அறிவித்தல்வரை பார்வையிடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

மக்கள் முகக்கவசம் அணிந்து செயற்படுவதுடன் சமுக இடைவெளிகளையும் பேணி, கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்து வருகின்றனர்.

# சுருக்கு வலையை பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன்பிடித்தோருக்கு அபராதம்

## மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

*ரொட்டவெவ குறூப் நிருபர்*

திருகோணமலை கடற்பரப்பில் சுருக்கு வலைகளை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்த ஏழு மீனவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் ரந்திக்க லக்மால் ஜெயலத் நேற்று (08) இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கிண்ணியா, தோப்பூர், சல்லி, சாம்பல் தீவு போன்ற பகுதிகளைச் சேர்ந்த 35க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிய வருகின்றது. மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளும் இலங்கை கடற்படையினரும் இணைந்து நடாத்திய சுற்றிவளைப்பிலே, இச்சந்தேக நபர்கள் ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்த சுருக்கு வலைகளும் கைப்பற்றப்பட்டன. இதனால் அரசுக்கு 15270 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் திருகோணமலைக்கு பொறுப்பான அதிகாரி, இதுகுறித்து நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து குறித்த 7 மீனவர்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவீதம் தண்டம் செலுத்துமாறும் அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு மாதகாலம் சிறை தண்டனை வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது.

இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தற்சமயம் மீனவர்களிடம் பணம் இல்லை எனவும் அப்பணத்தை அடுத்த தவணைக்கு முன்னர் செலுத்துவதாகவும் நீதிமன்றில் தெரியப்படுத்தினார்.

இதையடுத்து 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டது. டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி இவ்வழக்கு மீண்டும் விசாரிக்கப் படவுள்ளது.

# மட்டு. விவசாயிகளுக்கு சோள விதைகள் விநியோகம்

*ஏறாவூர் நிருபர்*

உள்ளூர் தானிய உற்பத்திகளை அதிகரிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டத்தின் கீழ் சோளம் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கே இவ்வாறு சோள விதைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் கரடியனாறு, ஆயித்தியமலை மற்றும் வந்தாறுமூலை ஆகிய விவசாய பிரிவுகளில் அறுநூறு ஏக்கரில் சோளம் செய்கை பண்ணப்படவுள்ளது.

மானிய அடிப்படையில் சோள விதைகளை வழங்கிய இந்நிகழ்வு, வந்தாறுமூலை கமநல சேவைகள் நிலைய விவசாய விரிவாக்கல் பிரிவில் நடைபெற்றது.

விவசாய போதனாசிரியர் சி. சித்திரவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

காலநிலை சீரமைப்பிற்கான விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெளிநாட்டு தானியங்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

# மட்டக்களப்பு அம்பாரை மாவட்ட எல்லைப்பிரச்சினை: அதிகாரிகள் கள விஜயம்

*கல்லாறு தினகரன் நிருபர்*

பல வருடங்களாக தீர்வின்றி இழுபறியடன் தொடரும் மட்டக்களப்ப மாவட்டத்தின் தெற்கு எல்லைப்பிரச்சினை சம்பந்தமாக தீர்க்கமான முடிவை எடுக்கும் வகையில்,இரு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும்



உயர் மட்டக் குழுக்கள் குறித்த பகுதியைச் சென்று பார்வையிட்டன.இவர்களின் இந்தக் களவிஜயம் நேற்றுக் காலை (08) இடம்பெற்றது.மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான மட்ட மட்டக்களப்பு உயர் குழுவும், அம்பாறை மாவட்டட மேலதிக அரசாங்க அதிபர் கேதீஸ்வரன் தலைமையிலான அம்பாறை மாவட்ட குழுவினரும் இவ்விஜயத்தில் பங்கேற்றனர்.

மாவட்டங்களின் எல்லைப் பிரதேசங்களான பெரியகல்லாறு, பெரியநீலாவணை எல்லை கிராமங்களில் சர்ச்சைக்குரிய குறிப்பிட்ட சில வீதிகளையே இக்குழு பார்வையிட்டது.

இதற்கான வழிகாட்டல்களை இரு மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்த, நில அளவைக் திணைக்கள குழுவினர் மற்றும் காணி திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர்

வழங்கினர்.வரைபடங்களின் உதவியுடன் இவர்களுக்கு வழிகாட்டப்பட்டது.

கள ஆய்வுகளைத் தொடர்ந்து இரு பகுதியினரும் மண்முனை தென் எருவில் பிரதேச செயலகத்தில் (களுவாஞ்சிக்குடி மகாநாட்டு மண்டபத்தில்) பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்ததையின் இறுதியில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் அலோசனைகளைப் பெற்ற பின் இறுதி முடிவெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

# கட்சியின் பெயரைப் பயன்படுத்தி கூட்டம் ஏற்பாடு

## பொலிஸில் முறைப்பாடு

*பாசிக்குடா நிருபர்*

மட்டக்களப்பு வாகரை பிரதேச கேணி நகர் நாவலடியில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெயரைப் பயன்படுத்தி போலிப் பிரசார கூட்டம் ஏற்பாடு செய்தவர்களுக்கு எதிராக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மீராவோடை வட்டாரத் தலைவர் றபீக் ஏ கபூர் , இம்முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

இவ்வாறான கூட்டங்களை கூட்டடி பொய்யான வாக்குறிதிகளை வழங்கி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கிலே, இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: கட்சியின் தலைமைக்கு தெரியப்படுத்தியே, இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

கட்சியின் மாவட்டத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு வழங்கிய தகவலுக்கு அமையவே, இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆட்சியிலுள்ள கட்சியின் செல்வாக்குகளைப் பயன்படுத்தி சிலர்,இவ்வாறு பொது மக்களை ஏமாற்ற முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வெளியிடங்களிலிருந்து அக்கரைப்பற்று வருவோரின் விபரங்களை அறிவிக்க உத்தரவு

*ஒலுவில் விசேட நிருபர்*

வெளியிடங்களிலிருந்து அக்கரைப்பற்று நகருக்கு வரும் பொது மக்கள் தொடர்பாக பொலிஸார் மற்றும் சுகாதார பகுதியினருக்கு அறிவிக்க வேண்டுமென, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் சக்கி தெரிவித்தார்.

நாட்டில் தற்போது வேகமாக பரவிவரும் கொரோனா சமூகப் பரவல் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அக்கரைப்பற்று பிரதேசத்தை கொரோனா நோயிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்று வியாழக்கிழமை (08) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸான் தலைமையில் நடைபெற்றது.இதில் சில முக்கிய தீர்மானங்கள எடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்று நகருக்கு வரும் பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து சமூக இடைவெளியைப் பேணுதல், பொலிஸார் மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பின்பற்றல், பொது மக்கள் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணி நடத்தல் போன்ற தீர்மானங்களே இங்கு எடுக்கப்பட்டன.

இத் தீர்மானங்களைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழையையடுத்து அக்கரைப்பற்று பிரதேசத்தில் கூடுதலாக டெங்கு நோய் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதால், வடிகான்களை துப்பரவு செய்ய வேண்டுமெனவும், வடிகானுக்குள் குப்பைகள் மற்றும் கழிவு நீர் என்பவற்றை விடுபவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும், மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் சக்கி தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ. றாஸிக், அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் திருமதி பரூஸா நக்பர், பொலிஸார், இராணுவத்தினர், அனைத்து பள்ளிவாசல் தலைவர் மற்றும் மாநகர சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பரீட்சைகளுக்கு தோற்றும்...

தொடரும் பெருமளவிலான மாணவர்கள் குருணாகல், கண்டி மற்றும் கிழக்கு மாகாணங்களில் விடுதிகளில் தங்கி கல்வி செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவர்கள் தற்போது தங்களது வீடுகளுக்கு வந்திருக்கின்றனர். இவ்வாறான நிலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை குறித்த திகதியில் இடம்பெறும் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், கம்பஹா மாவட்ட மாணவர்கள் அவர்கள் கல்வி கற்ற பிரதேசங்களுக்கு சென்று பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய சூழ்நிலை நாட்டில் காணப்படவில்லை. அதனால் குறிப்பாக கம்பஹா மாவட்ட மாணவர்கள் அவர்கள் இருக்கும் இடங்களிலேயே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென முஜிபூர் ரஹ்மான் எம்.பி சபையில் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளிக்கையிலே கல்வியமைச்சர் இவ்வாறு பதிலளித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னுமொரு மாவட்டத்துக்கு சென்று பரீட்சை எழுதுவதை தவிர்த்து மாணவர்கள் இருக்கும் மாவட்டங்களிலே பரீட்சைக்கு தோற்ற முடியுமான ஏற்பாடுகளை மேற்கொள்ள தற்போது நாம் முயற்சிக்கின்றோம்.

கொரரோனா வைரஸ் தொற்று சூழ்நிலையில் வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிட்டு வருகின்றோம்.

குறிப்பாக கம்பஹா மாவட்ட மாணவர்கள் அவர்கள் வசிக்கும்இடங்களிலேயே பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவித்தார்.

## கொரோனா குறித்த...

தற்போது கொரோனா வைரஸ் மீண்டும் நம் நாட்டிற்குள் வந்துள்ளது. முன்னரைப் போலவே, எமது சுகாதார, பாதுகாப்பு மற்றும் ஏனைய சேவை துறைகளை சேர்ந்தவர்கள் இந்த அச்சுறுத்தலில் இருந்து நம்மைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

இந்த சவாலான சூழ்நிலையில், சுகாதார அதிகாரிகள் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதோடு, பல்வேறுபட்ட பொய்ப் பிரச்சார குழுக்களால் பரப்பப்படும் தவறான பிரசாரத்திற்கு ஏமாறாமல், உத்தியோகபூர்வ அரசாங்க தகவல் சேவைகளிலிருந்து தேவையான தகவல்களைப் பெற்று அதன்படி செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என பதிவிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தலுக்கு...

உடனடியாக கம்பஹா மாவட்டத்தில் பொலிஸாரினால் அடையாளப்படுத்த இடங்களுக்கு வருகைத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம். குறிப்பிட்ட இடங்களுக்கு வருகைத்தர வேண்டும். வருகைத்தராதவர்களை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடந்துக்கொண்டுள்ளதாக கருதி அவர்களுக்கு எதிராக கடுமையாகச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

18 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்ந்தும் அமுலிலுள்ளது. அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்வது முற்றாக தடைச் செய்யப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 6 மணி வரையான காலப்பகுதியில் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 79 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய 18 மோட்டார் சைக்கிள்களும் ஒரு முச்சக்கரவண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை , சுகாதார அதிகாரிகள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது , அதற்கு எதிர்ப்பை தெரிவித்து அவர்களது நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள பகுதிகளின் ஊடாக பொதுப்போக்குவரத்து சாதனங்கள் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் . இதேவேளை அந்த பகுதிகளில் ஆட்களை ஏற்றுவதோ , இறக்குவதோ தடை செய்யப்பட்டுள்ளது. சுகாதார தேவைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு செல்வார்களுக்கு ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரம் அவசியமில்லை.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குரிய அறிகுறிகள் காணப்படும் நபர்கள் வெளியில் செல்லாது , அவர்களின் வீடுகளில் இருந்துக் கொண்டே அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய சேவை பெற்றுக் கொடுக்கப்படும். அதேவேளை , வீடுகளில் உள்ளவர்கள் தமது வீட்டை அண்டிய பகுதிகளை சுத்தம் செய்யவதில் எந்த பிரச்சினையும் இல்லை . மாறாக குழுக்களாக கூடி எந்த நடவடிக்கைகளிலும் ஈடுப்படக்கூடாது. இது போன்ற செயற்பாடுகள் முற்றாக தடைச் செய்யப்பட்டுள்ளன.

## பாராளுமன்ற பணியாளர்கள்...

எழுப்பிய (08) கேள்விக்கு சபாநாயகர் வழங்கிய பதில் இந்த செய்திக்கு அடிப்படையாக காணப்படுகின்றது. பத்தரமுல்லையில் அமைந்துள்ள அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பாராளுமன்ற விவகார பிரிவின் பணியாளர் ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கு கொவிட் 19 தொற்று தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்டுள்ளதால் நேற்றைய தினம் குறித்த அலுவலகத்துக்குள் பிரவேசிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லையென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு இங்கு சுட்டிக்காட்டினார்.

எனவே பாராளுமன்ற பணியாளர் ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கு கொவிட் 19 வைரஸ் ஏற்பட்டிருப்பதாக வெளியிடப்பட்டிருக்கும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

## வடக்கிற்கு விரைவில்...

முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது யாழ் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம் பி எஸ்.சிறிதரனால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தமது கேள்வியின் போது கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் மற்றும் ஊழியர் பற்றாக்குறைதொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; நான் தனிப்பட்ட ரீதியில் வடக்கிற்கு நேரில் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளேன். அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்கு அதன் போது நடவடிக்கை எடுப்போம்.அதேவேளைமுழங்காவில்மகாவித்தியாலய பிரச்சினை தொடர்பாகவும் நாம் ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கு வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## சமலின் கவனத்திற்கு கொண்டு...

முரண்பாடுகள் குறித்தும் மகாவலி அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கவனத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கொண்டு சென்றுள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவை (07) இரா.சாணக்கியன் மகாவலி வலய அபிவிருத்தி திட்டங்கள் நடைபெற்று வரும் மட்டக்களப்பு மாவட்ட எல்லை பகுதிகளில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு தலைமையிலான குழுவினர் அத்துமீறி காணிகளை அபகரித்து விவசாய செய்கையில் ஈடுபடுவதற்கா முயற்சிகளில் ஈடுபட்டு வருவது குறித்து தெரிவித்தார். அத்துடன், அதனால் மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும், இதனால் ஏற்படக்கூடிய தமிழ், சிங்கள இன முரண்பாடுகள் குறித்தும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் இதன் பின்னணியில் கிழக்கு மாகாண ஆளுநர் இருப்பதையும் சுட்டி காட்டியிருந்தார்.

## வரவு செலவு திட்டத்தினூடாக...

ஏப்ரல் தாக்குதலினால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது.கோவிட் 19 இனால் நிலைமை மேலும் மோசமானது. இருந்தாலும் அரசாங்மக் வரிச்சலுகை பொதியொன்றை அறிமுகம் செய்து வரிகளை குறைத்தது.வருமான வரியை இரத்துச் செய்தது. கடந்த காலத்தில் விலைகட்டுப்பாட்டு சட்டமொன்று இருந்தது.அதனை லலித் அதுலத் முதலி இரத்துச் செய்தார். தற்பொழுது நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் அமுலிலுள்ளது. விலைக்கட்டுப்பாட்டினூடாக விலைகளை கட்டுப்படுத்துவது கஷ்டம். சந்தையில் தரமற்ற முகக்கவசங்கள் விற்பனைக்குள்ளன. தனியார் நிறுவனமொன்று மருத்துவ பாதுகாப்பான முகக்கவசத்தை குறைந்த விலைக்கு உற்பத்தி செய்துள்ளது. அதற்கு சந்தைக்கு வாய்ப்பு வழங்க நாம் தலையீடு செய்துள்ளோம். நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தினூடாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேம்படுத்த தேவையான திட்டங்கள் முன்வைக்கப்படும் என்றார்.

## கொழும்பில் கர்ப்பிணி...

கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உறுதியானதையடுத்து முல்லேரியா ஐ.டி.எச் மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மினுவாங்கொடை கொரோனா தொற்று பரவலுக்கும் இந்தப் பெண்ணுக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளதா? என்பது குறித்து விசாரணைகள் நடந்து வருவதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## விலாசத்தை மாற்றி...

மறைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொரோனா கொத்தணி அடையாளம் காணப்பட்ட ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் அல்லது வைத்தியசாலையில் மாத்திரமே இருக்க வேண்டுமே தவிர வீட்டிலிருக்கக் கூடாதென இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். இது தேசிய பொறுப்பாக கருதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் சுகாதார பிரிவிற்கு அறிவித்து உடனடியாக தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு அவர் கூறியுள்ளார்.

## கூட்டு வழிநடத்தல்...

திணைக்களம், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒருங்கிணைப்பில் இயக்கப்படுகிறது. செயல்பாட்டு மையம் ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் நவம்பர் 6ஆம் திகதிவரை செயல்படவுள்ளது. இந்தக் காலப்பகுதியில் ஏதேனும் விபத்துகள் அல்லது இடர்கள் காரணமாக மாணவர்கள் எவரும் பரீட்சைக்குத் தோற்றுவதில் தடைகள் ஏற்பட்டால் செயல்பாட்டு மையத்தை தொடர்பு கொள்ளலாம். இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற இலக்கத்துடனும் பரீட்சைகள் திணைக்களத்தின் இலக்கத்துடனும் இந்தக் காலப்பகுதியில் 24 மணித்தியாலமும் தொடர்புக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை...

அவ்வாறு செயற்பட்டவர்களால் கல்முனை நகர சபை பிரச்சினையைக் கூட தீர்த்து வைக்க வைக்க முடியாமல்

போனதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச ஒப்பந்தங்கள் எமது நாட்டின் பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் பாதுகாப்பதாக அமைய வேண்டும். அவற்றைப் பாதிக்கும் வகையில் எந்த ஒப்பந்தங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## நரிக்கடிக்குள்ளான...

சகோதரர்களுடன் வீட்டின் முற்றத்தில், விளையாடிக்கொண்டிருந்தபோது, நரி வருவதை அவதானித்த இரு சகோதரர்களும் அங்கிருந்து வீட்டுக்குள் ஓடிச் சென்றுள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த தாய், ஒரு வயதுக் குழந்தையை நரியிடமிருந்து மீட்டபோது நரி குழந்தையின் பாதத்தைக் கடித்து குதறியுள்ளது.

நரியின் கடிக்குள்ளான குழந்தை சிகிச்சைக்காக ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. குழந்தையை கடித்த நரியை பிரதேசவாசிகள் அடித்துக் கொன்றுள்ளனர்.

## மண் குதிரையை நம்பி...

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான கஜேந்திர குமார் பொன்னம்பலத்திற்குமிடையில் நேற்று சபையில் கடுமையான வாதப்பிரதிவாதம் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

## பொன்சேகா மன்னிப்பு...

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சிறுவர் படையணியின் தளபதி எனக்கூறியமை தொடர்பில் பதில் வழங்குவதற்கான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## கொவிட் 19 வைரஸை... (03ஆம் பக்கத் தொடர்)

மினுவாங்கொடை தொழிற்சாலையில் பணியாற்றிய அனைத்து தொழிலாளர்களுக்கும் பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. தற்போது இங்கு இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு பரவியுள்ள வைரஸ் வித்தியாசமாகவுள்ளது. இது ஏனைய பிரதேசங்களுக்கும் பரவியுள்ளது. என்றாலும் மினுவாங்கொடை தொழிற்சாலை தொழிலாளர்களுடன் தொடர்புடையவர்களுக்கு தான் கொவிட் 19 தொற்று ஏற்பட்டு வருகிறது. வெளியில் நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை. வெளியில் கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளவர்கள் எவரும் அடையாளங்காணப்படாமையால் இந்நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமென நினைக்கின்றோம். பதிவாகும் பெரும்பாலான நோயாளர்கள் நோய் அறிகுறிகள் இல்லாதவர்களாகும். இவர்களுக்கு வைத்தியாலையில் உள்ள அதியுச்ச சேவையின் தேவை ஏற்படாது. 4,000 வரையான நோயாளர்களை எம்மால் முகாமை செய்ய முடியும்.

## ஐ.ம.சவின் ஆதரவு மட்டுமே...

எமது பொருளாதார கொள்கையும் கடந்த அரசின் பொருளாதார கொள்கையும் மாற்றமானவை. அவர்கள் மேலைத்தேய தனவந்த பொருளாதார கொள்கையை பின்பற்றுகையில் நாம் உள்நாட்டு தன்னிறைவு பொருளாதார கொள்கையை பின்பற்றுகிறோம். நாட்டின் பொருளாதாரம் பலமடைந்து வருகையிலே இரண்டாவது கொரோனா அலை தலைதூக்கியுள்ளது.உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆட்சியில் பலவீனமாக பொருளாதார நிலை காணப்பட்டது. எமது அரச பொருளாதாரத்தை சரிவர முகாமைத்துவம் செய்து வருகிறது.

ஒப்பந்தம் குறித்து கடந்த அரசு பே

## இயற்கை எரிவாயு... (03ஆம் பக்கத் தொடர்)

மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அவை பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் வரை 8 வீதமான மின்சாரம் வீண் விரயமாக்கப்பட்டுள்ளது. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் இயற்கை எரிவாயு மூலம் 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

நிலக்கரி கொள்வனவில் கடந்த காலங்களில் மோசடி ஏற்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று முன்தினம் குழுவில் விரிவாக ஆராயப்பட்டது. அது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவர் மற்றும் உயரதிகாரிகள் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் கோப் குழு தீர்மானித்துள்ளது. கடந்த அரசாங்கத்தில் காலத்தில் புதிதாக மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்காமையே மின்சார சபை நட்டம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும்.

அதேவேளை மின் இணைப்புக்கான வினநியோக பாதைகள் சுத்திகரிப்பு, மற்றும் மின்சார இணைப்பு வழங்குதல் இணைப்பை துண்டித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு கடந்த காலங்களில் வெளியாரே நியமிக்கப்பட்டனர். மின்சார சபை அதற்காக பெரும் செலவை எதிர்நோக்கியது. அதனால் மின்சார சபை ஊழியர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும் கடந்தகால செயற்பாடுகளுக்கு என்னால் பொறுப்புக்கூற முடியாது எனினும் எதிர்கால செயற்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் என்னால் பொறுப்பு கூற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மினுவங்கொடை... (03ஆம் பக்கத் தொடர்)

நபரொருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நபருக்கு அவரின் மகனின் மூலமாக கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. அவர் மினுவங்கொடை ஆடைஉற்பத்தி தொழிற்சாலையில் உணவகம் ஒன்றை பராமரித்துச் செல்லும் நிலையில் அவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## யுத்த காலத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அங்கு ஆளணி மற்றும் இதர வசதிகளின் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் புற்றுநோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக கொரோனா காலத்தில் அதிகம் பாதிப்புக்குட்படக்கூடியவர்கள் புற்றுநோயாளர்களே எனவே தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலைக்கு உரிய ஆளணி மற்றும் வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன். எனினும் மத்திய அரசானது இந்த வைத்தியசாலையை தம் அதிகாரத்தின் கீழ் சுவீகரிக்க முயல்கிறது அதன் மூலம் நிர்வாகத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

இவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டு விசேட திட்டங்கள் மூலம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு அது தரம் உயர்த்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அனைத்து... (03ஆம் பக்கத் தொடர்)

என்று அவர் கூறினார். இதற்கிடையில், நேற்று தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட மினுவங்கொடை தொழிற்சாலையின் சில ஊழியர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு சென்று தம்மை அடையாளப்படுத்த தவறிவிட்டனர்.

இதன் விளைவாக, இந்த ஊழியர்களை கண்டுபிடிப்பதற்காக வீட்டுக்கு வீடு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மினுவாங்கொடை கொரோனா கொத்தணி பரவலுக்கான மூலத்தை கண்டறிய சுகாதார தரப்பினரும் பாதுகாப்புத் தரப்பினரும் விசாரணைகளைமுன்னெடுத்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## இந்தியா அல்லது... (03ஆம் பக்கத் தொடர்)

விமானங்கள் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பும் ஊழியர்கள் பற்றிய வினாக்கள் குறித்து, பின்வருமாறு உறுதிப்படுத்த முடியும். இந்தியாவில் பணிபுரியும் எங்கள் இலங்கை ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கைக்குத் திரும்பி பயணிப்பதற்கு இந்தியாவின் விசாகப்பட்டினத்திலிருந்து மூன்று விமானங்களை இயக்கினோம்.

கொவிட் 19 ஐ தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான இலங்கை அரசு நெறிமுறையை அவர்கள் தமது குடும்பங்களுடன் பின்பற்றினார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும். இந்நெறிமுறை, பி.சி.ஆர் சோதனை மற்றும் அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாள் கட்டாய தனிமைப்படுத்தல் மற்றும் தத்தமது பிரதேச பொது சுகாதார ஆய்வாளர்களின் (PHI) மேற்பார்வையின் கீழ் செய்யப்படும் 14 நாள் சுய தனிமைப்படுத்தப்படல் செயல்முறை ஆகியவையை கொண்டது.

இது தவிர, இந்த இலங்கையரோ அவர்களது குடும்ப உறுப்பினர்களோ யாரும் மினுவங்கொடையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு வருகை தரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கொரோனா பரவல்... (03ஆம் பக்கத் தொடர்)

பகுதிகளுக்கு சென்றுள்ளனர். கண்காட்சிகள், மாநாடுகள், கண்கட்சிகள் போன்ற அனைத்து பொதுக் கூட்டங்களையும் நடத்தக்கூடாது என்று அரசாங்கம் தெரிவித்த போதிலும், திருமணங்கள் போன்ற முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நிகழ்வுகளை கண்டிப்பான அவதானிப்பு மற்றும் அந்தந்த பொது சுகாதார ஆய்வாளர்களின் பரிந்துரைகளின் கீழ் நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திவுலபிட்டிய ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களுக்கிடையே கொரோனா தொற்று அதிகரித்து வருவதால், அவர்களுக்கு சிகிச்சையளிக்கப் போதிய வைத்தியசாலைகள் இல்லாததால் சிரமமான நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோய்த்தொற்றுகளுடன் தொடர்புபட்ட ஏராளமான மக்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளது. தொற்றாளர்களை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதிதாக 78,524... (03ஆம் பக்கத் தொடர்)

ஒரு இலட்சத்து 5ஆயிரத்து 526 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 58,27,705 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று மட்டும் 83, 011 பேர் குணமடைந்துள்ளனர். நேற்றும் புதிய நோய்த்தொற்று எண்ணிக்கையை விட அதிக நபர்கள் குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலுமுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 09 இலட்சத்து 02,425 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். உயிரிழப்பு 1.54 சதவீதமாகவும், குணமடைந்தோர் விகிதம் 85.25 சதவீதமாகவும் உள்ளது.


## ஜும்ஆ தொழுகைக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

மக்களுக்கு அறிவித்து வரவுள்ளோரின்தகவல்களைப் பதிவு செய்யுமாறும் "வக்பு" சபை கேட்டுள்ளது. இன்று ஜும்ஆத் தொழுகை'கு வரும் சகலரதும் உடல் நிலையைப் பரிசோதிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதையநிலைதணியும்வரை, இந்த நடைமுறைகளே பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 20 ஆவது திருத்தம்... (03ஆம் பக்கத் தொடர்)

உள்ளது. இந்த நிலையிலே 20 ஆவது திருத்தம் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அடுத்த பாராளுமன்ற அமர்வு 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (பா)

## மலைச்சாரல்



# தொடரும் புளூம்பீல்ட் தோட்ட தொழிலாளர்களின் போராட்டம்

**பூண்டுலோயா நிருபர்**



கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட புளூம்பீல்ட் தோட்டத் தொழிலாளர்கள் ஒருவருடத்துக்கு மேலாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தனியார் தோட்டமான இத்தோட்டத்தில் வேலை செய்த தோட்டத்தொழிலாளர்களுக்கு முறையாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படவில்லையென குற்றச்சாட்டை வைத்தே இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்கள் வருடமாக போராடியும் இதுவரை எவ்வித பதிலும் தோட்டமுதலாளிமார்களிடமிருந்து கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக தோட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த தோட்டமானது தனி ஒருவரின் தோட்டமாகும். இத்தோட்டத்தில் 30 வருடங்களுக்கு மேலாகியும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு குறைவான தொகையே பணம் கிடைக்கின்றது. ஒரு சிலர் அதை கண்ணில் பார்க்காமலேயே இறந்து விடுகின்றனர். இப்போராட்டம் தொடர்பாக மறைந்த ஆறுமுகன் தொண்டமானிடம் கூறி, அவர் பல தடவைகள் தோட்ட முதலாளியிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் எவ்வித தீர்வும் கிட்டவில்லை.

அதேவேளை வருமானத்திற்காக குடும்பத்தை விட்டு வெளி ஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டிய அவலத்தில் வாழ்க்கை நடாத்துகின்றோம்.

கொழும்பு போன்ற வெளி இடங்களுக்கு சென்று வருமானம் தேடுகின்றோம். தற்போது கொரோனா தலைதூக்கியுள்ளதால் வெளியிடங்களுக்கு வேலைக்கு செல்ல முடியாமல் வருமானத்திற்காக அலைமோதுகின்றோம். அதேபோல தோட்டங்களும் முழுமையாக காடாகிவிட்டன. இந்நிலை தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் அறிவித்துள்ளோம். விரைவில் தீர்வு கிடைக்குமென எதிர்ப்பார்ப்பதாக புளூம்பீல்ட் தோட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர்.



## வட்டகொடையில் சிறுத்தைகள் நடமாட்டம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டகொடை தோட்டத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் இருப்பதாக தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லும் போது கோழி இறகுகள் நாய்களின் தலைகள் காணப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர். சிறுத்தைகளின் அட்டகாசம் அதிகரிக்க முன்னர் இதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தோட்ட நிர்வாகத்திடம் வட்டகொடை மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கொரோனா பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை பின்பற்றுங்கள்

**பாரத் அருள்சாமி வேண்டுகோள்**



கொரோனா நோய்த்தொற்று காரணமாக மக்கள் அனைவரும் சுகாதார நடைமுறைக்கு அமைவாக முகக் கவசம், அணிதல் சமூக இடைவெளியை பேணுதல், கைகளைக் கழுவுதல் போன்ற சுகாதார பாதுகாப்பு பொறிமுறைகளை கடைப்பிடிக்குமாறு இ.தொ.காவின் உப செயலாளரும் சர்வதேச வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

மலையக மக்களை கொவிட் 19 தொற்று நோயிருந்து பாதுகாக்க இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடாக பல விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து தோட்டப்பகுதிகளுக்கும் வெளி பிரதேசங்களில் இருந்து வருகைதரும் அனைத்து மக்களின் விபரங்களை தோட்ட நிர்வாகம் மற்றும் தோட்ட சமூகநல உத்தியோகத்தர்கள் திரட்ட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை இரத்தினபுரி, கேகாலை ஆகிய பகுதியில் உள்ள அரசாங்க அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் மற்றும் அமைச்சின் ஊடாக சுகாதார நிலைமைகள் கண்காணிப்பதற்கு குழுவொன்றை அமைத்து ஒவ்வொரு பிரதேசங்களிலும் அதாவது நுவரெலியா, ஹற்றன், கண்டி, மாத்தளை, காலி, கேகாலை, இரத்தினபுரி பதுளை போன்ற எல்லா மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் கிளைப் பணிமனையில் உள்ள அதிகாரிகள் அப்பிரதேச சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் பணிப்புரைவிடுக்கபட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் லெவலன் பிரதேச மக்கள் சுயதனிமைபடுத்தப்பட்டுள்ளனர். இந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்வதற்கு அங்குள்ள தோட்ட நிர்வாகத்திடமும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

எனவே, மக்கள் சில போலியான தகவல்களை பரப்புவோரிடம் அச்சம் கொள்ளாமல் அரசாங்கம் வழங்கும் தகவல்களுக்கமைய செயற்படுவோமேயானால் கொரோனா தொற்று நோயை இல்லாமல் செய்யலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொகவந்தலாவை பகுதியில் கொரோனா விழிப்புணர்வு



**ஹற்றன் விசேட நிருபர்**

கொவிட் 19 அவதானம் காரணமாக பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 40 தோட்டங்களில் விழிப்புணர்வு வேலைத்திட்டமொன்றை பொகவந்தலாவை பொலிஸ் நிலையம் தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுத்துள்ளது,

கொவிட் 19 வைரஸ் பரவலினை கட்டுப்படுத்தும் நோக்காக கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக தோட்ட மக்கள் மிகவும் அவதானமற்று இருப்பதனால் பாரிய பின் விளைவுகள் ஏற்படலாம் என்பதனை கருத்திற் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனை போது முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளி பேணுவது, கைகழுவுவது, வெளியிலிருந்து வருபவர்கள், கொவிட் தொற்று ஏற்பட்ட பிரதேசங்களில் இருந்து வருபவர்கள், நோய் தொற்றின் அறிகுறிகள் போன்ற விடயங்கள் ஒலிபெருக்கியின் மூலமும் துண்டு பிரசுரங்கள் வழங்குவதன் மூலம் பொது மக்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன் போது பொகவந்தலாவை, டின்சின், கெட்பியன், லொயினோன் உள்ளிட்ட நகரங்களில் தோட்டங்களில் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை பொலிஸ் நிலையம் அதிகாரி சாந்த பண்டார கேட்டுக்கொண்டதற்கு அமைவாக பிரிடோ நிறுவன நிகழ்ச்சி திட்ட இயக்குனர் எஸ்.கே. சந்திரசேகரனின் ஆலோசனை உதவியுடன் 40 இற்கு அதிகமான தோட்டங்களில் வாழும் பொது மக்களை நேரடியாக சந்தித்து கொரோனா தொற்று தொடர்பாகவும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் பொலிஸ் உத்தியோகஸ்தர் எஸ் பேரின்பநாயகம் (பிரிடோ) நிறுவன உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## ஊவாவில் மேலதிக வகுப்பு நடத்த தடை

**பசறை நிருபர்**

கம்பஹா மாவட்டத்தில் வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஊவா மாகாணத்தில் மேலதிக வகுப்புக்களை உடன் தடை செய்யுமாறு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வகுப்புத் தடை மறு அறிவித்தல் வரை தொடருமென ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது. மாகாணத்தில் மேலதிக வகுப்புகள் நடத்துவது தொடர்பாக முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரம் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு கோரிக்கை

**மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்**


மஸ்கெலியா சாமிமலை பிரதான பாதையில் ஒரு புறம் ஆபத்தான நிலையில் உள்ளதாக வாகன சாரதிகள் தெரிவித்தனர்.

பாதையின் ஒரு பக்கத்தில் பாதுகாப்பு கம்பி அமைக்கப்படாமையால் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனால் கடந்த காலங்களில் பல வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாதையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ளமையால் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு பாதுகாப்பு கம்பியை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.







ஹற்றன் வலயத்தின் பெயார்லோன் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் பிரபாநாதனின் தலைமையின் கீழ் சர்வதேச மருத்துவநலஅமைப்பு மற்றும் இரட்ணம் அறக்கட்டளை நிறுவனங்களின் பூரண நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை, வலய கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரனினால் அண்மையில் மாணவர்களின் பாவனைக்கு உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## கந்தபொலையின் 5 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் தொழில்புரிந்த கந்தபொலை பகுதியை சேர்ந்த பெண்ணொருவர்கொரோனாதொற்றாளராக இனம்காணப்பட்டதை தொடர்ந்து அப்பகுதியை சேர்ந்த ஐந்து குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

ஆடை தொழிற்சாலையில் வேலை செய்த பெண் கடந்த மாதம் 19 ஆம் திகதி தனது வீட்டிற்கு வந்து சென்றிருப்பதனை உறுதி செய்ததையடுத்து அவர் பழகிய குடும்பங்கள் அவர் சென்று வந்த புடவை கடையை சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் பெருந்தோட்ட இணைப்பாளர் செந்தில் தொண்டமான் அவர்கள் சமீபத்தில் வார்விக் தோட்ட மக்களை சந்தித்து தொழிற்சங்க பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார். மேலும் முற்றிலும் சேதமடைந்த பாதையையும் பார்வையிட்டார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற் துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு

வடக்கு மாகாண சபை

# பெறுகை அறிவித்தல்

## 2021 ம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

**பெறுகை இல: NP/06/03/ Cleaning Service/2020**

தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக்குழு அவர்களினால் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்குட்பட்ட காரியாலயங்களுக்கான 2021 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்புச் சேவையை (Cleaning Service) பின்வரும் மாவட்டங்களில் வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சுத்திகரிப்புச் சேவை வழங்க வேண்டிய மாவட்டம் | எதிர்பார்க்கப்படும்/ தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 13 |
| 02 | வவுனியா | 03 |
| 03 | கிளிநொச்சி | 02 |
| 04 | மன்னார் | 03 |
| 05 | முல்லைத்தீவு | 02 |
| மொத்தம் | | 23 |

1) சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் பதிவு செய்யப்பட்ட தலைமைக் காரியாலயம் அல்லது பதிவு செய்யப்பட்ட கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் சேவையை வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3) தகுதி வாய்ந்த பெறுகைதாரர் கறுப்புப்பட்டியலில் இடப்பட்ட ஓர் சேவை வழங்குநராக இருத்தல் ஆகாது.
4) சேவை வழங்குநர்கள் பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை இல 04, புரூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அலுவலகத்தில் 09.10.2020 தொடக்கம் 02.11.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1,000.00 ஐ காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
5) பெறுகை ஆவணங்கள் 03.11.2020 ஆம் திகதி மு.ப 11 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு “தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக் குழு, மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், இல 04, புரூடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்”. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6) சகல கேள்விகளுடனும் ரூபா 115,000/- பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.
7) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**திருமதி ரூபனி வரதலிங்கம்**
**தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்,**
**04, புரூடி லேன், அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

திகதி :09.10.2020



இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

### மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2020 ஜூன் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2020 ஒக்டோபர் 23ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல மற்றும் நிட்டம்புவ. | 2020 ஜூன் 30ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல. 46/12, சயுறு செவன,
நவம் மாவத்தை, கொழும்பு-02.

பதிவு இலக்கம்: PB 917PQ

# 2030ஆம் ஆண்டில் நாடு மின்சாரத்தில் தன்னிறைவு அடையும்

## மின் சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும

**வெலிகம தினகரன் நிருபர்**



இலங்கையின் மின்சாரம், மின் விநியோக விஸ்தரிப்பு செயற் திட்டத்தின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் நாடு மின்சாரத்தில் 70 வீத தன்னிறைவு அடைய கூடிய வகையில் செயற்பட்டு வருகிறோம் என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை, திஹகொட பகுதியில் இடம்பெற்ற சூரிய சக்தி மின் கட்டமைப்பு திட்டத்தை மக்களுக்கு கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

இன்று மின் உற்பத்தியில் 30 சதவீதமான அளவு எரிபொருளை பயன்படுத்தியே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக பெரும் தொகைப் பணத்தை அரசாங்கம் செலவுசெய்ய வேண்டியுள்ளது. சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்திசெய்தால் அரசாங்கத்துக்கு செலவைக் குறைத்து நிதியை மீதப்படுத்த முடியும். இதனால் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மின் பாவனையாளர்கள் தனது மாத வருமானத்தில் பெருமளவு மின்சாரத்திற்கு செலவிடுகின்றனர்.

மாதாந்தம் 30 அளவுக்கு குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் 12 இலட்சம் குடும்பங்களே உள்ளன.ஒவ்வொரு மின்சார அலகுக்கும் இலங்கை மின்சார சபை 23 ரூபாய் செலவிடுகிறது.

சூரிய சக்தி மூலம் மக்களுக்கு மின்சாரம் வழங்கினால் இதைவிட இலாபத்தை அடையமுடியும். இம் முறையை நாடு முழுவதும் விஸ்தரிக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

தற்சமயம் கம்புருபிடிய மற்றும் திஹகொட பிரதேச சபைகளில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாதாந்தம் மின் கட்டணத்தை சேகரிக்க முடிந்துள்ளது.

மேலும் இச்சபைகளுக்கு அந்த நிதியைக் கொண்டு வருமானம் ஈட்டக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# பெறுகை அறிவித்தல்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)
(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

## குளியாப்பிட்டியில் (பன்னல) அமைந்துள்ள அஸ்போல்ட் கொங்கிறீட் உற்பத்தியகத்திற்குத் தேவையான கருங்கல் வகைகளைக் கொள்வனவு செய்தல்

இந்த அதிகார சபையின் பன்னலயில் அமைந்துள்ள அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கருங்கல்லை உடைத்து வழங்குபவர்களிடமிருந்து (Metal Crushers) விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்தப் பொருள் அளவை எதிர்வரும் 06 மாத காலத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இல. | விபரங்கள் | அளவு $m^3$ | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக்கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | பணமாக | வங்கி/காப்புறுதி உத்தரவாதம் மூலமாக |
| பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கு | | | | | |
| PRDA/WP/SUP/2020/46 | 0-05mm கற்தூள் வழங்குதல் | $7500m^3$ | ரூ. 2,000.00 (வெட் வரியின்றி) | ரூ. 185,000.00 | ரூ. 370,000.00 |
| | 05-12mm கற்தூள் வழங்குதல் | $5300m^3$ | | | |
| | 12-20mm கற்தூள் வழங்குதல் | $2000m^3$ | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2020-10-09ஆம் திகதியிலிருந்து 2020-10-22ஆம் திகதி மு.ப. 8.30 இலிருந்து பி.ப. 2.45 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.
03. இப்பெறுகைக்கான தகைமையைப் பெறுவதற்கு கேள்வித் தொகை 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சுமானால் கேள்விதாரரினால் 1987 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. 2020-10-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-567690**

## ஆடைதொழிற்சாலை கொரோனா தொற்று;

# எப்பாவள கோன்வெவ கிராமத்தில் எட்டுப் பேர் தனிமைபடுத்தலுக்கு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எப்பாவள பொலிஸ் பிரிவில் கோன்வெவ கிராமத்தில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சார்ந்த எட்டுப் பேர் உட்பட அதனை சூழ வசித்து வந்த சிலரும் 07 ஆம் திகதி எப்பாவள மக்கள் சுகாதார பரிசோதகர்களினால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எப்பாவள கோன்வெவ கிராமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவர் கம்பஹாவில் வசித்து வரும் தனது தாயை சந்திப்பதற்காக கடந்த 03 ம் திகதி சென்றுள்ளார்.இருந்தபோதும் அன்றய தினம் தனது தாய் வேலைக்கு சென்றிருந்ததனால் அவரை சந்திக்கவில்லையென தெரிவித்துள்ளார்.

தனது தாய் பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வருவதுடன் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதென கடந்த தினத்தில் உருதிப்படுத்தப்பட்டுள்ளதால் குறித்த இளைஞன் இவரது மனைவி உட்பட குடும்பத்தைச் சார்ந்த எட்டுப்பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக எப்பாவள மக்கள் பொது சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

இவர்கள் வசித்து வந்த வீட்டுத் தோட்டத்தில் நடாத்திச் சென்ற சிறு வியாபார நிலையத்தினை மறு அறிவித்தல் வரும் வரைக்கும் மூடுமாறும் சுகாதார பிரிவினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

குறித்த இளைஞனுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வந்த கோன்வெவ கிராமத்தவர்களின் தகல்களைப்பெற்று அவர்களையும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த எப்பாவள மக்கள் சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.


07.10.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை **641,973**
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை **29,768,770.00**
ரூ. 2,000,000.00 பரிசுகள் **02** ரூ. 1,000,000.00 பரிசுகள் **02** ரூ. 100,000.00 பரிசுகள் **34**
www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2563 சீட்டிழுப்பு திகதி 07.10.2020
ஆங்கில எழுத்து: T வெற்றி இலக்கங்கள்: 08 23 60 77

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 169 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 377 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9829 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6486 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 162248 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29580 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 208,698
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,593,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,356,522.40
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

**மஹஜன சம்பத** சீட்டிழுப்பு இலக்கம் : 4268 உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 07-10-2020
வெற்றி எழுத்து: V வெற்றி இலக்கங்கள்: 5 9 1 7 6 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 5 9 1 7 6 7 | ரூபா 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 9 1 7 6 7 | ரூபா 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 1 7 6 7 | ரூபா 10,000/- | 111 |
| 4ஆம் பரிசு | 7 6 7 | ரூபா 1,000/- | 1,119 |
| 5ஆம் பரிசு | 6 7 | ரூபா 100/- | 10,965 |
| 6ஆம் பரிசு | 7 | ரூபா 20/- | 109,172 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 5 9 1 7 6 | ரூபா 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 5 9 1 7 | ரூபா 1,000/- | 109 |
| 9ஆம் பரிசு | 5 9 1 | ரூபா 100/- | 1,100 |
| 10ஆம் பரிசு | 5 9 | ரூபா 50/- | 10,896 |
| 11ஆம் பரிசு | V | ரூபா 20/- | 43,708 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 10,446,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,491,900.00
வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

**செவண** உத்தியோகபூர்வ முடிவுகள் – உங்களுக்கு வீடு – கைகளில் காசு
திகதி 2020/10/07 சீட்டிழுப்பு இலக்கம் 302
ஆங்கில எழுத்து: T வெல்லப்பட்ட இலக்கங்கள்: 02 16 61 62

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- வீதம் | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- வீதம் | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- வீதம் | 90 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- வீதம் | 155 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- வீதம் | 3,697 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- வீதம் | 2,167 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 53,416 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- வீதம் | 8,126 |

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 14,000,000/-
இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,229,890/-
ரூ.500,000.00 மற்றும் அதற்குக் கூடிய பரிசுகள் அரச வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்படும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல.32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. இலங்கை தொ.பே: 011 460 7000, 011 460 7000, தொ.நகல்: 011 4669416 www.nlb.lk

**Mega POWER மெகா பவர்** சீட்டிழுப்பு இலக்கம்: 635 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 07/10/2020
ஆங்கில எழுத்து: A சுப்பர் இலக்கம்: 01 வெற்றி இலக்கங்கள்: 59 70 73 77

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 113 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 250 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 6,666 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4,350 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 109,160 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 20,045 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ .52,418,884.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.11,689,324.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.19,150,445.60
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 5,362,700.00
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

**ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA** உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு இலக்கம் 1061 திகதி 2020.10.07
ஆங்கில எழுத்து: R வெற்றி இலக்கங்கள்: 7 0 5 8 3 7

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 01 பரிசு | 7 0 5 8 3 7 | ரூ. 2,000,000.00 | 1 |
| 02 பரிசு | 0 5 8 3 7 | ரூ. 100,000.00 | 3 |
| 03 பரிசு | 5 8 3 7 | ரூ. 10,000.00 | 30 |
| 04 பரிசு | 8 3 7 | ரூ. 1,000.00 | 296 |
| 05 பரிசு | 3 7 | ரூ. 50.00 | 2,933 |
| 06 பரிசு | 7 | ரூ. 20.00 | 28,211 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 07 பரிசு | 7 0 5 8 3 | ரூ. 10,000.00 | 4 |
| 08 பரிசு | 7 0 5 8 | ரூ. 1,000.00 | 29 |
| 09 பரிசு | 7 0 5 | ரூ. 100.00 | 287 |
| 10 பரிசு | 7 0 | ரூ. 50.00 | 2,989 |
| 11 பரிசு | R | ரூ. 20.00 | 12,928 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 114 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 4,135,380.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 10,752,054.50
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416

# சுகாதார சேவைகள் திணைக்கள சாரதிகள் மாகாணம் தழுவிய சுகயீன போராட்டம்

**வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்**




வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் நேற்றும் இன்றும் மாகாணம் தழுவிய ரீதியில் சுகவீன விடுப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சுகாதார சேவைக்குள் கடைமையாற்றிவரும் சாரதிகளை சுகாதாரத் துறைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களிற்கு இடமாற்றம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த சுகயீன விடுப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா வைத்திய சாலைக்கு முன்பாக ஒன்றுகூடி சுகாதார சேவைகள் சாரதிகள், 'எட்டு மாகாணத்திலும் இல்லாத நடைமுறை வடமாகாணத்தில் மட்டும் ஏன்?, வடமாகாண சுகாதார சேவைகளின் சாரதியை இடமாற்றுவதை உடன் நிறுத்து, யுத்த காலத்தில் தேவைப்பட்ட நாம் இப்போது விலக்கப்படுவது ஏன்?, இலங்கைக்கு ஜனாதிபதி ஒருவர் வடமாகாணத்திற்கு ஏன் இப்படி' போன்றவாறான பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமது போராட்டம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் எப்பகுதியிலும் இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கடந்த 35 வருடங்களாக சுகாதார சேவைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களுக்கான இடமாற்றங்கள் எமக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது 35 வருடங்கள் கழித்து இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டில் 8 மாகாணங்களில் இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்தில் மாத்திரம் கொண்டுவரப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அனைத்து தரப்பிலும் எமது கோரிக்கையை முன்வைத்த நிலையில் எமக்கான சரியான தீர்வினை எவரும் வழங்கவில்லை என்றனர்.

## மன்னார் கடற்பரப்பில் மஞ்சள் பொதி மீட்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

மன்னார் தாழ்வுபாடு கடற்பகுதியில் 396 கிலோ மஞ்சள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. நேற்று அதிகாலை கடற்பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட மஞ்சள் பொதிகள் சுங்கத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிசாரால் மூடப்பட்ட வாகன விற்பனை சந்தை

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா மன்னார் வீதியில் கலைமகள் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த வாகன சந்தை வவுனியா பொலிசாரின் உத்தரவிற்கமைய மூடப்பட்டது.

கொவிட் 19 தொற்று காரணமாக நாடு முழுவதும் இம் மாதம் 31ம் திகதி வரை நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு அரசாங்கத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று வவுனியா மன்னார் வீதியில் கலைமகள் மைதானத்தில் தனியார் நிதி நிறுவனத்தினால் வாகன சந்தையொன்று திறக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் தடையுத்தரவினை மீறி திறக்கப்பட்ட வாகன சந்தை தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஆர் மானவடு பொலிசாருக்கு வழங்கிய உத்தரவின் பேரில் இது மூடப்பட்டது.

## கிளிநொச்சி, முல்லையில் தனிமைப்படுத்தல் முகாம்

**வவுனியா விசேட நிருபர்**

மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருந்த நிலையில் அவர்களில் ஒரு தொகுதியினர் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

குறித்த நபர்கள் நேற்று காலை 10.30 மணியளவில் வவுனியா ஊடாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு பேருந்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொரோனா தொற்று சந்தேகநபர்கள் 12 பேருந்துகளில் இராணுவ பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர். தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணியவர்களை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புங்குடுதீவு பெண்ணுடன் பேருந்தில் சென்றவர்கள் அறியத் தரவும்

யாழ்.அரச அதிபர்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**

கொரோனா தொற்று ஏற்படாதவாறு பாதுகாக்க, புங்குடுதீவு பெண் பயணித்த பேருந்தில் பயணித்தவர்களை அச்சமின்றி தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு தருமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச அதிபர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ் மாவட்டத்தில் புங்குடுதீவு பிரதேசத்தை வதிவிடமாக கொண்ட மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய யுவதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த 3ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து 4ஆம் திகதி அதிகாலை புங்குடுதீவை சென்றடையும் வரை பயணித்த பேருந்துகளின் இலக்கங்களும் குறிப்பிட்ட தரிப்பு நிலையத்தில் இருந்து அவை புறப்பட்ட நேரமும் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் ஏற்கனவே அறியத்தரப்பட்டுள்ளன.

எனவே குறிப்பிட்ட பேருந்துகளில் 3ஆம், 4ஆம் திகதிகளில் இவருடன் பயணித்தவர்கள் தமது விபரங்களை வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24மணிநேர அவசர அழைப்பிலுள்ள 0212226666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

பயணம் செய்தவர்களின் விபரங்களை அறிவிப்பதன் மூலம் உங்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா எனப் பரிசோதித்து அறியவும் உங்களது குடும்பங்களையும் அயலவர்களையும் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டிய அவசர சேவைகளை உடனடியாக வழங்குவதற்கும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந் நோய் எமது மாவட்டத்தில் பரவாதிருக்க பயணம் செய்தவர்கள் அச்சமின்றி உங்களின் தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## அரச காணியை சுவீகரிப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சியில் அரச காணியொன்றினை தனிநபர் ஒருவர் சுவீகரிக்க முயன்றமைக்கு எதிராக கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இயக்கச்சி முகாவில் கிராம சேவகர் பிரிவில் உள்ள பத்தாவல கிராமத்தில் உள்ள அரச காணி ஒன்றில் காடுகளை அழித்து தனிநபர் ஒருவர் சுவீகரிக்க முயன்றதாக பத்தாவல கிராம மக்கள் குறிப்பிட்டனர்.

இதற்கு எதிராக நேற்று காலை அப்பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் இதற்கான எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இச் சம்பவம் தொடர்பாக பளை பொலிசார் சம்பவ இடத்துக்கு சென்று பொது மக்களுடன் கலந்துரையாடினார்கள்.

இதன்போது இக் காணி விவகாரம் தொடர்பாக பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளருடன் கலந்துரையாடிய பின்பு குறித்த காணியை துப்பரவு செய்யுமாறு அந்நபருக்கு பொலிசார் அறிவித்தனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக அரசாங்க அதிபரை தொடர்பு கொண்டு வினவிய போது, தனிநபர்கள் அரச காணிகளை அடாத்தாக பிடிக்கும் செயற்பாடு என்பது சட்ட விரோதமான செயற்பாடாகும் என்றார்.

## யாழில் மீனவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

**கோப்பாய் நிருபர்**

யாழ்.வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் சுமார் 30 மீனவர்களுக்கு நேற்று காலை வல்வெட்டித்துறை ஆலடி கடற்கரையில் உள்ள உதய சூரியன் சனசமூக நிலையத்தில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் சுகாதார பரிசோதகர்களும் இராணுவத்தினரும் இணைந்து பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இந்திய மீனவர்களும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களும் அதிகமாக அட்டை பிடித்தலுக்காக இந்த இடத்திற்கு வருகை தரும் நிலையில் முன்னாயத்த ஏற்பாடாக குறித்த பகுதியில் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தொடர்ந்து பி.சி.ஆர் பரிசோதனை நடைபெறும் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## வவுனியா நகர சபை ஊழியரது பணித் தடையை இரத்து செய்க

### வட மாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் கோரிக்கை

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகரசபை சுகாதார ஊழியர் 04 பேரின் பணித்தடையை நீக்கக்கோரி இ.சித்திரன், ச.புவிதரன், ஜே.அன்ரனி, மு.மகேந்திரன் ஆகியோரால் வடமாகாண ஆளுநருக்கு மேன்முறையீட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வவுனியா நகரசபை சுகாதார ஊழியர்களாகிய நாம் கடந்த 07.09.2020 தொடக்கம் 10.09.2020 ஆம் தேதி வரை எம்முடன் சேவையாற்றும் சக ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு கோரி சாத்வீக போராட்டம் ஒன்றினை ஆரம்பித்திருந்தோம். எங்களது கோரிக்கை நியாயமானதாகவும் இருந்தது.

இருப்பினும் சிற்றூழியர்களாகிய எமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சம்பள அதிகரிப்பினை 2014ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படாமல் நகரசபை செயலாளர்களால் தொடர்ந்து தடுத்து வரப்படுவதுடன் எமது நியாயமான கோரிக்கையினை மறுத்து வருகின்றனர்.

இந்த வகையில் கடந்த சாத்வீக போராட்டத்தினை நேர்த்தியான முறையில் நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் எங்கள் மேல் பொருத்தமான எவ்விதமான குற்றச்சாட்டுக்களும் வைக்க முடியாத சந்தர்ப்பத்தில், போராட்டத்திற்கு அல்லது நகரசபையில் நிர்வாக செயல்களுக்காக சம்பந்தப்படாத சில சம்பவங்களையும் பொய்யாக எம்மீது சாட்சியாளர்களையும் இணைத்து குற்ற பத்திரிகை மற்றும் பணித்தடை செய்தும் கடிதங்கள் வழங்கியுள்ளனர். அம்மணி, இதுவரையில் எங்களை நியாயமாக விசாரிப்பார்கள் யாரும் இருப்பதாக தெரியவில்லை. எனவே தயவு கூர்ந்து 2020.10.01 முதல் பணித்தடை செய்யப்பட்டுள்ள நான்கு பேருக்கும் இப் பணித்தடையினை இரத்து செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டும் கொள்வதுடன் எமது நியாயமான கோரிக்கையினை தங்களது நேரடி பரிசீலனைக்கு எடுத்து விசாரிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

## பரீட்சை மேற்பார்வை ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு உடை வழங்க நடவடிக்கை

**கந்தர்மடம் நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கொரோனா அச்சம் காரணமாக தடை செய்யப்பட்ட புங்குடுதீவுப் பகுதியில் க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரீட்சை மேற்பார்வை ஆசிரியர்களிற்கு விசேட பாதுகாப்பு உடை வழங்கப்பட்டு பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் கொவிட் 19 ன் தொற்று அபாயம் என புங்குடுதீவில் தற்போது 3 ஆயிரத்து 915 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இப்பகுதியில் க.பொ.த உயர்தரம் எழுதும் 3 மாணவர்களும் தரம் 5 எழுதும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 7 மாணவர்களும் உள்ளதோடு கிளிநொச்சியில் கல்வி பயிலும் இரு மாணவர்களும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தை சேர்ந்த ஒரு மாணவரும் என தரம் 5 மாணவர்கள் 10 பேர் உள்ளனர்.

இந்த 13 மாணவர்களிற்குமான பரீட்சைகள் இப் பகுதியிலேயே நடத்த ஏற்பாடு செய்யப்படுவதோடு இவ்வாறு நடைபெறும் பரீட்சைக்கு செல்லும் மேற்பார்வை ஆசிரியர்களிற்கு தினமும் பாதுகாப்பு உடை வழங்க சுகாதாரத் திணைக்களம் ஊடாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் நடைபெறும் பரீட்சைகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

## புகையிரதத்தில் மோதி ஒருவர் மரணம்

**மன்னார் குறூப் நிருபர்**

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி சென்ற புகையிரதத்தில் மோதி நேற்று காலை நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மன்னார் சௌத்பார் புகையிரத நிலையத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் சுமார் 45 வயது மதிக்கத்தக்கவர் என தெரிய வருகின்றது. சடலம் அடையாளம் காணப்படவில்லை. சடலம் மீட்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்கொலை செய்து கொண்டாரா என்பது தொடர்பாக பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருந்து நிலையத்தில் கிருமி தொற்று விசிறல்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா பழைய பேருந்து நிலையம் போன்ற மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் பகுதிகளில் நேற்றுக் காலை படையினர் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அலை தற்போது பாரியளவில் படையெடுக்கத் தொடங்கியுள்ளதையடுத்து மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளான பேருந்து நிலையம், அரச திணைக்களங்களில் கிருமி தொற்று நீக்கி விசிறல் நடவடிக்கையினை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'கிளிநொச்சியில் தொற்று இல்லை'

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 57 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றுக்குள்ளான ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்பில் இருந்தவர்கள், அவர்களின் குடும்பங்கள், புங்குடுதீவு கொரோனா தொற்றுக்குள்ளான யுவதியின் குடும்பத்துடன் தொடர்புபட்டவர்கள், கம்பஹா மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழக மற்றும் ஆடைத் தொழிற்சாலைக்கு வந்தவர்கள் என பலரிடம் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டத்தில் இதுவரை எவருக்கும் தொற்று இல்லை என முடிவுகள் வெளிவந்துள்ளன.

இருப்பினும் பொது மக்கள் தேவையற்ற வகையில் ஒன்று கூடுவது, பொது போக்குவரத்துக்களை பயன்படுத்துவது, வெளிமாவட்டங்களுக்கு சென்று வருவது போன்றவற்றை தவிர்க்குமாறும், சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுமாறும் அதிகாரிகள் கோரியுள்ளனர்.

## வவுனியா வளாக மாணவி வைத்தியசாலையில்

**ஓமந்தை விஷேட நிருபர்**

யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கற்றுவரும் கம்பஹா பகுதியை சேர்ந்த மாணவி ஒருவர் காய்ச்சல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவிக்கு நேற்று முன்தினம் மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிளிநொச்சியில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி சென்ற ரயில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது. சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபரின் சடலத்தை புகையிரத ஊழியர்கள் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிசாரின் விசாரணைகள் நிறைவுற்ற நிலையில் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் தொடர்பான தகவல்கள் கிடைக்காத நிலையில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆடைத் தொழிற்சாலையில் 135 பேருக்கு பரிசோதனை

**ஓமந்தை விஷேட நிருபர்**

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தீவிரமடைந்ததையடுத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக வவுனியாவில் பல்வேறுபட்ட நபர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 135 பேருக்கு நேற்று முன்தினம் காலை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 5 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் பெறப்பட்ட மாதிரிகள் யாழ் மருத்துவ ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை உறுதிப்படுத்துக

### மன்னார் ரெலோ கிளை கோரிக்கை

**மன்னார் குறூப் நிருபர்**

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஒற்றுமை இல்லாவிட்டால் அரசை எதிர்த்து எவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும். எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை முதலில் உறுதிப்படுத்துங்கள் என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் மன்னார் மாவட்டக் கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரெலோ அமைப்பின் மன்னார் மாவட்ட கிளை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதம கொரடா மற்றும் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் போன்ற பதவிகள் வழங்குவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான ரெலோ மற்றும், புளொட் அமைப்புக்கு பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் பதவியை தமிழரசு கட்சியின் யாழ். பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரனுக்கு வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்மொழிய சாள்ஸ் நிர்மலநாதன் வழிமொழிந்துள்ளார்.

ஆனால் பிரதம கொரடா பதவி தொடர்பான இழுபறி நிலையில் முடிவெதுவும் எட்டப்படாமல் கூட்டம் குழம்பியுள்ளது. நாங்கள் பதவிக்காக ஆசைப்பட்டு இந்த விடயத்தை கூறவில்லை. கூட்டமைப்பில் உள்ள பங்காளி கட்சியினருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையே இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் இருவரும் நீண்டகால போராட்டம் மற்றும் பாராளுமன்ற அனுபவங்கள் கொண்டவர்கள்.

குறித்த இரண்டு பதவிகளுக்கும் இவ்விருவரும் பொருத்தமானவர்கள்.

தமிழ் மக்களின் உரிமை சார்ந்து செயற்படக்கூடிய இரண்டு பதவிகளை தமிழரசு கட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவது பங்காளி கட்சியினரை உதாசீனம் செய்வதாகவே நாங்கள் உணர்கின்றோம்.

## 100 சாராயப் போத்தல்களுடன் சாவகச்சேரியில் ஒருவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை மதியம் 100 சாராயப் போத்தல்களுடன் ஒருவர் சாவகச்சேரி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சாராயப் போத்தல்களை கொண்டு செல்வதாக சாவகச்சேரி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலினையடுத்து இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா அபாயநிலை காரணமாக நாட்டில் மக்கள் அத்தியாவசியப் பொருட்களுக்கு முண்டியடிக்கும் நிலையில் விற்பனை நோக்கோடு அளவுக்கு அதிகமான சாராயப் போத்தல்களைக் கொண்டு சென்ற நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளதாக பொலிசார் குறிப்பிட்டனர்.

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வு



**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து தனிநபர் ஒருவருடைய காணியில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றில் அனுமதி பெறப்பட்ட நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. எனினும் ஆயுதங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் அகழ்வு பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

## முல்லை மாவட்ட செயலக வரவேற்பு கருமபீடம் திறப்பு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதான நுழைவாயிலில் அமைக்கப்பட்ட வரவேற்பு கருமபீட அங்குரார்ப்பண நிகழ்வானது மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்றிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது அவருடைய பங்குபற்றுதலுடன் திறந்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத்தலைவர்கள் கலந்துகொண்டனர். கொவிட்19 சுகாதார நடைமுறைகள் காரணமாக மிக எளிமையான முறையில் இந்நிகழ்வானது நடைபெற்றது.

## யாழ்.மாதகல் பகுதியில் 32 கிலோ கஞ்சா மீட்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் 32 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக சங்கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே இக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

யாழ் மாவட்ட மதுவரி உதவி ஆணையாளர் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய சங்கானை மதுவரி நிலைய பொறுப்பதிகாரி சஞ்ச சிறிமன்ன தலைமையிலான மதுவரி நிலையத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகநபர் தப்பிச் சென்ற நிலையில் இக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

# தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதாக முறைப்பாடு

### மன்னார் பதில் அரச அதிபர்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட மக்கள் முகக்கவசம் அணிந்து உரிய சுகாதார நடை முறைகளுக்கு அமைவாக தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவை பிரதிநிதிகளுடன் நேற்று காலை நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா தொடர்பான விழிப்புணர்வு மிக முக்கியமாக காணப்படுகின்றது. கொரோனா தொற்று அதிகரித்து காணப்படுகின்ற சூழ்நிலையில் தற்போது போக்குவரத்தும் அதிகரித்துள்ளன.



இந்நிலையில் போக்குவரத்து சேவையினை மேற்கொள்ளுகின்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். சுகாதாரஅமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிகாட்டல்கள் போக்குவரத்து துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

பயணிகள் முகக்கவசம் அணிந்து சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பயணங்களை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகள் அனைத்திற்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மாவட்டத்தில் இயங்கிவரும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மறு அறிவித்தல் வரை மூடப்பட வேண்டும். பொது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நேர மாற்றம் தொடர்பாக மன்னார் மாவட்ட தனியார் மற்றும் இலங்கை அரச போக்குவரத்து சேவை பிரதி நிதிகளுடன் கடலந்துரையாடலை மேற்கொண்டோம் என்றார்.

## மன்னார் தபாலக கட்டடங்களின் புனரமைப்பு ஜனவரியில் ஆரம்பம்

### மன்னார் பிராந்திய தபால் அத்தியட்சகர்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் தலைமன்னார் தபாலகங்களும் மற்றும் மன்னார் பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலக கட்டடங்கள் புனரமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் எதிர்வரும் ஜனவரி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய தபால் அத்தியட்சகர் ரி.எம்.ஏ.ரட்நாயக்க தெரிவித்தார்.

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட தபால் திணைக்களத்தால் நடத்தப்பட்ட விளையாட்டு போட்டிகளின் பரிசளிப்பு நாளில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

நாம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி அஞ்சல் தினத்தைக் கொண்டாடி வருகின்றோம். இந்த உலக அஞ்சல் தினத்திலே நாம் அனைவரும் ஒரே குடும்பமாக ஒன்று கூடும் நிகழ்வாகவும் இருக்கின்றது.

உலக அஞ்சல் தினமானது இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலுள்ள 150 நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அஞ்சல் தினத்தை முன்னிட்டு வெறுமனே விளையாட்டுப் போட்டிகள் மட்டுமல்ல சிரமதானங்கள், மத வழிபாடுகள் மற்றும் இரத்ததானங்கள் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன என்றார்.

## வவுனியாவில் முதிரை மரக் குற்றிகளுடன் வாகனம் மீட்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 முதிரை மரக் குற்றிகளுடன் பட்டா ரக வாகனத்தினை பொலிசார் மீட்டெடுத்துள்ளனர்.

பாலமோட்டை காட்டுப் பகுதியில் சில நபர்களின் நடமாட்டம் காணப்படுவதாக ஓமந்தை பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந் தலைமையிலான பொலிசார் பாலமோட்டை ஓமந்தை வீதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கோவிற்குஞ்சுக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முதிரைக் குற்றிகளை ஏற்றி வந்த பட்டா ரக வாகனத்தினை பொலிசார் மறித்தனர். இதன்போது பட்டா ரக வாகனத்தில் பயணித்தவர்கள் வாகனத்தினை அவ்விடத்திலேயே விடுத்து தப்பித்துயோடியுள்ளனர்.

அதன் பின்னர் முதிரைக்குற்றிகளுடன் காணப்பட்ட வாகனத்தினை பொலிசார் ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்ததுடன் வாகனத்தின் உரிமையாளரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தை பொலிசார் 6 முதிரைக் குற்றிகளையும் பட்டாரக வாகனத்தினையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றனர்.

## படகுகளுக்கான வரி அறவீட்டுக்கு எதிராக போராடத் தீர்மானம்

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபை, மீன்பிடிப் படகுகளுக்கான வரி அறவீட்டினைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. இந் நிலையில் பிரதேச சபையில் குறித்த மீன்பிடிப் படகுகளுக்கான வரி அறவீடு தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினம் வட்டுவாகல் தொடக்கம் சிலாவத்தை வரையான ஒன்பது மீனவ சங்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமேளனத்திற்கும் கரைதுறைப்பற்று பிரதேச சபை கலந்துரையாடல் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருந்தது.

குறித்த கலந்துரையாடலில் மீனவர்கள் படகுகளுக்கு வரி அறவீடு செய்யவேண்டாம் என வலியுறுத்தியிருந்தனர். வரி வழங்க மறுத்தால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வரி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனபிரதேசசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து கலந்துரையாடலில் இருந்து வெளியேறிய மீனவர்கள், உரிய அதிகாரிகளுடன் இது தொடர்பில் பேசவுள்ளதாகவும், அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்களைத் திரட்டி கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு எதிராக பாரிய அளவில் போராட்டத்தில் ஈடுபடவும் தாம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

**விஜயரத்தினம் சரவணன்**

## யாழ். தொல்லியல் திணைக்களத்திலும் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றும் கம்பஹாவைச் சேர்ந்த பெண் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் கடமைபுரிந்த நூதனசாலையில் கிருமித் தொற்று நீக்கி விசிறப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபை பொதுச் சுகாதார பிரிவினரால், தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றும் பெண் ஒருவரின் தாய், மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிவரும் நிலையில், அவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் நூதனசாலையில் பணியாற்றும் பெண்ணுடன், யாழ்ப்பாணம் கோட்டையில் பணியாற்றும் அவரது நண்பரும் கடந்த சில நாட்களுக்கு முன்னரே கம்பஹாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த நிலையில், அவர்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலை மாணவரின் மந்த மாருதம்

**தினகரனது வடக்கின் உதயமானது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்களது ஆக்கங்களை தாங்கியவாறு வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

# பளபள கத்தரிக்காயும் சூத்தைக் கத்தரிக்காயும்..!

## ஓர் மார்க்கெட் சந்திப்பு



ஒரு மரக்கறிக் கடையில் கத்தரிக்காய்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அங்கு நல்ல கத்தரிக்காய்கள் ஒரு பக்கமும், பூச்சி குத்திய கத்தரிக்காய்கள் ஒரு பக்கமும் வைக்கப்பட்டிருந்தன. சந்தைக்கு வந்தவர்கள் அனைவரும் பூச்சியில்லாத நல்ல கத்தரிக்காய் போடுங்கள் எனக் கேட்டு வாங்கிச் சென்றனர். இதைப் பார்த்த கத்தரிக்காய்கள் பேசிக்கொண்டன.

**நல்ல கத்தரிக்காய் :** 'ஏய் சூத்த கத்தரிக்காய் என்னையும் என்னோட மவுசையும் பாத்தியோ, என்னை இன்னும் கொஞ்ச நேரத்தில வித்து முடிச்சிடுவினம், உன்ர பிழைப்பு நாறப்போகுது'

சூத்தைக் கத்தரிக்காய் முகம்வாடியது.

**நல்ல கத்தரிக்காய் :** 'ஏய் இப்பவே நீ வாடினா எப்படி? இனி வாறவங்களும் உன்னைத் தள்ளி விட்டிடுவினம், கொஞ்சம் சிரி'

**சூத்தைக் கத்தரிக்காய் :** 'ஏய் நல்ல கத்தரிக்காய், நான் இயற்கையில் உருவானவள். என்னோட பூச்சி புழு இருக்கு, நான் உன்னை மாதிரி செயற்கை இல்ல. என்னால நீண்ட நாள் வாழ முடியும், உன்னால வாழ முடியுமா? செயற்கை உள்ளீடுகளை நிறுத்தினால் உன்பாடு அதே கதிதான்'

**நல்ல கத்தரிக்காய் :** 'நீ பயப்படாத, நான் கட்டாயம் கன நாள் வாழுவன். எதிர்கால சந்ததி பற்றியோ செயற்கை உள்ளீடுகளால வாற பாதிப்பைப் பற்றியோ கவலைப்படாமல் என்னை உற்பத்தி செய்யிறவனும் என்னைக் கேட்டு கேட்டு வாங்கிறவனும் இருக்கும் மட்டும் நான் இருப்பேன்'

**சூத்தைக் கத்தரிக்காய் :** 'அப்படியா, என்னைத் தேடி தேடி வாங்கிற காலம் வெகு சீக்கிரம் வரும். அப்ப உன்னைக் கவனிக்கிறன்'

**நல்ல கத்தரிக்காய் :** 'அப்ப கவனிக்கிறது இருக்கட்டும் இப்ப உன்னை யாராச்சும் கவனிக்கிறாங்களோ எண்டு பார். ஒருத்தனும் உன்ன வாங்கமாட்டான். என்னத்தான் எல்லாரும் வாங்கு வாங்கெண்டு வாங்குவினம். அங்க பார் ஒரு பெரியவர் வாறார், எப்படி அவரும் என்னத்தான் பாக்குறார்'

**சூத்தைக் கத்தரிக்காய் :** 'ஐயோ! இதுகள வாங்காதீங்கோ, இவையெல்லாம் செயற்கை இரசாயனத்தில உற்பத்தியானவை. இவங்கள வாங்கிச் சாப்பிட்டா வருத்தந்தான் வரும். அழகென்றாலே எப்பவும் ஆபத்துதான். ஐயா பெரியவரே ! கொஞ்சம் கேளுங்கோ. அறிவுரை கூறவேண்டிய நீங்களே அறிவில்லாம வாங்கிட்டு போறீங்களே. பெரியவரே நீங்கமட்டும் நீண்டகாலம் வாழ்ந்தால் போதாது. உங்கட சந்ததியும் வாழ வேணும், கொஞ்சம் கேளுங்கோ, நான் ஆரோக்கியமான இயற்கை முறையில் விளைஞ்சவள். என்னைச் சாப்பிட்டால் நோய்கள் வராது'

**பெரியவர் :** 'சூத்த இல்லாம பாத்து நல்லதா போடப்பா'

**நல்ல கத்தரிக்காய் :** 'ஆ....ஆ..... ஏய் சூத்தைக் கத்தரிக்காய் பாத்தியா! பாத்தியா! நான் சொன்னன் தானே. அவங்கள் என்னைத்தான் வாங்குவாங்கள் எண்டு. அவங்கள் என்ர அழகில மயங்கிட்டாங்கள்'

**சூத்தைக் கத்தரிக்காய் :** 'ஓமோம், இவங்கள் இன்னும் கொஞ்ச நாளில நோயாளி ஆகிடுவாங்கள். என்ர அருமை தெரிஞ்சு இவங்கள் என்னைத் தேடி அலையிற காலம் வெகு கெதியா வரும் அப்ப நான் இவங்களுக்கு அருமருந்தாத் தெரிவன்'

**சில வருடங்களுக்குப் பின்னர்:**

**அதே மரக்கறிக்கடையில்..**

**பெரியவர் :** 'தம்பி, மருந்து அடிக்காத கத்தரிக்காய் குடப்பா, என்னப்பா கத்தரிக்காய் பளபளப்பா இருக்கு இது மருந்து அடிக்காததோ?'

**வியாபாரி :** 'ஓம் ஐயா! இது நல்ல மரக்கறிதான், போடவா?'

**பெரியவர் :** 'இது நல்ல காய்கறி இல்ல, நல்ல காய்கறி எண்டால் பூச்சி புழு இருக்கும். அத எங்கயப்பா வாங்கலாம்?'

**வியாபாரி :** 'இதுவும் நல்ல காய்கறிதான், ஐயா வாங்குங்களேன்'

**பெரியவர் :** 'ஐயோ தம்பி நான் கனக்க நாளா இந்த காய்கறியத்தான் வாங்கிச் சாப்பிட்டன். நேற்று என்ர பேரன் இந்தக் காய்கறி அவிச்ச தண்ணிய காகத்திற்கு வைச்சிருக்கான். அதக் குடிச்சிட்டு காகம் செத்துப் போய்ச்சப்பா. அந்த மரக்கறி அவிச்ச தண்ணியிலயே இந்தளவு விஷம் எண்டால், அந்த மரக்கறியச் சாப்பிட்டால் மனுசனின்ட மென்மையான வயிறு என்ன பாடுபடும்? என்னென்ன நோய்கள் வரும்? என்னை விட்டிடப்பா, எங்க அலைஞ்சாவது சூத்த குத்தின இயற்கை முறையில விளைஞ்ச கத்தரிக்காய பாத்து வாங்கிறன்'

**வியாபாரி :** 'என்னை மன்னிச்சிடுங்கோ ஐயா. நாங்க என்ன செய்யிறது? இப்படிக் காய்கறிதான் இப்ப வருது. நாங்க பிழைப்புக்காக விக்கிறம்'

**பெரியவர் :** 'பிழைப்புக்கா? இந்தப் பிழைப்ப பாத்தியெண்டால் உன்ர பிழைப்பு இல்லாம போயிடும். இத வாங்கிக் கொஞ்ச நாளில வாங்கிறதுக்கும் ஆளிருக்காது, விக்கிறதுக்கும் ஆளிருக்காது. எதிர்காலத்தில நோய் நிறைஞ்ச சமூகத்தான் நாங்கள் பாக்கவேணும்' நடையைக் கட்டுகிறார் பெரியவர். கும்பலாக குவிக்கப்பட்டிருந்த பளபள கத்தரிக்காய்களைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தது ஓர் ஓரமாய்த் தள்ளப்பட்டிருந்த சூத்தைக் கத்தரிக்காய் ஒன்று.





# மீண்டும் வருவேன்...

வணக்கம் நண்பர், நண்பிகளே உலக மக்கள் அனைவரின் பிதீக்கும் நானே காரணம். தினமும் அனைவர் வாய்ப் பேச்சும் நானே; கைபேசியில் தட்டுவதும் என்னைப் பற்றியே; பத்திரிகை, தொலைக் காட்சி, வானொலி, சமூகவலைத்தளங்கள் அனைத்திலும் என்னைப் பற்றிய செய்தியே; இன்று பலரின் கைப்பேசி ஸ்டேட்டசும் நானே.

இன்று பல உறவுகளின் பினைப்பிற்கும் நானே காரணம். என் வரவை தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அன்று காலையில் விடியும் முன் எழுந்து சமைத்து முடித்து பிள்ளைகளை எழுப்பி பாடசாலைக்கு தயார் செய்து தானும் வேலைக்குச் சென்று மீண்டும் வரும்போது பிள்ளைகள் மாலை வகுப்பிற்குச் சென்று இருப்பார்கள்.

மீண்டும் வேலை அனைத்தும் முடித்துவிட்டு இருக்கும்போது பிள்ளைகள் வருவார்கள். அவர்களை குளிக்கச் செய்து வீட்டுப் பாடம் செய்ய வைத்து தூங்க வைத்தல் என தினசரி வேலையை விடுத்து இன்று என் வருகையால் பலர் வீடுகளில் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் லாவகமாக பேசுகின்றார்கள்.

அன்றொருநாள் ஒரு வயது நிரம்பிய குழந்தையினை பாட்டியிடம் கொடுத்துவிட்டு அதற்கு தேவையான அனைத்தும் செய்து வைத்துவிட்டு குழந்தை தூக்கம் கலையும் முன் இருவரும் தொழிலுக்குச் சென்று மீண்டும் குழந்தை உறங்கிய பின்னே வீடு திரும்புவார்கள். அவ்வாறு இருந்த குழந்தைக்கு என் வருகையாலே பெற்றோர் முகம் நன்கு தெரிந்தது.

அயலவர் அறியாதவர்களுக்கு இன்று அயலவரை அறிமுகம் செய்தவனும் நானே. நவீன தொழில்நுட்ப பாவனையிலும் கணினி விளையாட்டுகளிலும் மூழ்கி இருந்தவர்களுக்கு விளையாட்டு மைதானத்தையும் பாரம்பரிய விளையாட்டுகளையும் ஊற்றெடுக்க செய்பவனும் நானே.

நானே கண் கலங்கினேன்...

யாரோ ஒருவன் (லைக்) விருப்பத்தை பெறுவதற்காக பரப்பிய வதந்தியை கண்டு பணம் உள்ளவன் பறந்து திரிந்து பொருட்களை வாங்கி அடுக்கினான்.

அந்தப் பத்து வயது சிறுமி "அப்பா எல்லாரும் தேவையான பொருட்கள் வாங்குறாங்க நீங்க வாங்கலையாப்பா" (அவன் தினமும் உழைத்து அந்தப் பணத்தில் வாழ்பவன்) தந்தை சட்டைப் பையை ஊதிப் பார்த்துவிட்டு இருந்த ஐம்பது ரூபாயை எடுத்து இரண்டு முக கவசம் வாங்கி மகளும் அவனும் போட்டுக் கொண்டு வீடு நோக்கி பயணம் தொடர்ந்தார்கள்.

இன்னும் சிலர் கஞ்சி குடிப்பதற்காவது அரிசி வாங்க பணம் இல்லையே என ஏக்கத்தோடு ஆழ்ந்த சிந்தனையில் சென்றனர்.

மனைவி பிள்ளைகளுடனே பேசுவதற்கு நேரமில்லாது திரிந்தவனுக்கு இன்று அளவுக்கு அதிகமான நேரம் கொடுத்தவனும் நானே. எதிர்காலத்தில் மனிதர்கள் இடையே பிளவு ஏற்படும் என்றும் பாரம்பரியம் அழிந்து போகும் என்றும் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை மீண்டும் உங்களுக்கு நினைவு கொள்ள செய்யத்தான் என்னை அனுப்பி வைத்து என் வருகையினை அன்றே கூறினார்கள் போலும்.

இயற்கையோடு இயல்பாக வாழும் மனிதர்களே கவலை வேண்டாம். பாரம்பரியத்தோடு நிலையான நீடித்த உறவு கொண்டு வாழ்ந்திடுங்கள்.

நீங்கள் இயற்கையினை சேதப்படுத்தி பாரம்பரியம் விடுத்து உறவுகளை சிதைத்து அயலவனை வெறுத்து பகைமை பெருகும் போது மீண்டும் நான் வருவேன்.



# பெற்றோர்

**சிறுவயதில் நான் பிரிந்தால் நீ**
**கவலையுறுவாய் என என் நிலையிலும்**
**உன்னுடன் இருந்தவள்;**
**இன்றும் உனக்காக**
**பிரிந்திருக்கின்றாள் உன் சந்தோசத்திற்காக**
**மறந்தும் கூட உனக்கு தீங்கு**
**நினைக்காத தெய்வங்கள்;**
**உங்கள் பெற்றோர்களே!**
**அவர்கள் உனக்கு சுமையல்ல;**
**அதிஷ்டம் அதை**
**நழுவ விட்டால்**
**அது எட்டாப் பழமாகி விடும்.**
**அன்று என்னை பிரிந்தால் நீ**
**கலங்கிடுவாய் என்று**
**நோயுற்ற நிலையிலும்**
**காத்திருந்தால் உன்னுடன்;**
**இன்றும் உனக்காக காத்திருக்கின்றாள்**
**அவளை அழைப்பாய் என.**
**இதுவும் உனக்காக,**
**காலம் இச் செயலை உனக்கு**
**உணர்த்த கூடாதென இதை**
**என் பிள்ளை தாங்க மாட்டான்.**
**மூன்று காலில் முட்டி மோதிய**
**நிலையிலும் தன்னலமற்ற**
**இவ் உள்ளங்களை சுமப்பதில் கர்வம்**
**கொள்கிறேன் நான்.**



ரா. அனுசி
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே நேசிக்கின்றான்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "எவரது உள்ளத்தில் கடுகளவு பெருமை இருந்ததோ அவர் சுவனம் செல்ல மாட்டார்." அப்போது ஒரு மனிதர் ஒருவர் தனது ஆடையும் பாதணியும் அழகாக இருக்க வேண்டும் என விரும்புகின்றார்.(அதுவும் பெருமையா?)" என வினவினார். அதற்கு நபியவர்கள் அல்லாஹ் அழகானவன். அவன் அழகை விரும்புகின்றான். பெருமை என்பது சத்தியத்தை மறுத்துரைப்பதும் மனிதர்களை இழிவாகக் கருதுவதுமாகும்" என விளக்கம் அளித்தார்கள். (ஆதாரம் ; ஸஹீஹ் முஸ்லிம்)

ஒருவர் சுவனப்பேற்றை இழப்பதற்குப் பின்புலமாக இருந்த பண்பியல்பே பெருமை. அணுவளவு பெருமை பேரிழப்பைச் சந்திப்பதற்குப் போதுமானது. அப்படியானால், இதயத்தைப் பெருமையால் நிரப்பி, அதனைக் கனதியாக மாற்றிக் கொண்டவனின் நிலைதான் என்ன? பெருமை குறித்த அண்ணலாரின் எச்சரிக்கை நபித்தோழர் ஒருவரது இதயத்தை ஆழமாகப் பாதித்து விட்டது போலும்.

எனவேதான், அவர் ஆடை அணிகலன்கள் அழகாக இருப்பது பெருமையின் விளைவா?" என வினாத் தொடுத்தார். ஆனாலும், நபி (ஸல்) அவர்கள் பெருமையை வரைவிலக்கணப்படுத்திய பாங்கு எம் சிந்தனைக்குரியது. அல்லாஹ் அழகானவன், அவன் அழகை விரும்புகின்றான். பெருமை என்பது சத்தியத்தை மறுப்பதும் மனிதர்களை இழிவுபடுத்துவதுமாகும்" என பதிலளித்தார்கள்.

இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் அல்லாஹ் அழகானவன். அவன் அழகை விரும்புகின்றான்" என்ற நபிகளாரின் வார்த்தை ஆடை அணிகலன்களின் அழகு குறித்து தொடுக்கப்பட்ட வினாவுக்கான விடையாக அமைவதுடன் அழகு பொதுமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்படுகிறது என விளக்கமளிக்கிறார்கள். அதாவது, அல்லாஹ் பொதுவாக எல்லா அழகையும் விரும்புகின்றான்.

இங்கு அல்லாஹ் அழகானவன்; அவன் அழகை விரும்புகின்றான்" என்ற பகுதிக்கான விளக்கத்தையே அழுத்திப் பதிவு செய்ய விரும்புகின்றோம். நாம் வாழுகின்ற காலப் பிரிவில் இஸ்லாம் பற்றிய அச்சம் திட்டமிட்டு பரப்புரை செய்யப்படுகின்றது. இஸ்லாமிய தீவிரவாதம், இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் ஆகிய சொற்பிரயோகங்கள் இஸ்லாத்தை வரண்ட ஒன்றாகவே காட்சிப்படுத்துகின்றன. இவ்வகையில் இஸ்லாத்தின் செழுமையை உலகறியச் செய்ய வேண்டிய கடப்பாடு நம் அனைவருக்கும் உள்ளது.

அல்லாஹ் அழகானவன்" என்ற அண்ணலாரின் அருள்வாக்கு அவன் பற்றிய நேர்மனப்பாங்கை எமக்குள் தோற்றுவிக்கின்றது. அதாவது, அல்லாஹ்வின் 'தாத்' (மெய்ப்பொருள்) அழகானது. அவனின் தாத்தை நாம் காணாவிட்டாலும் அவன் தன்னை அருள்மறையாம் திருமறையில் விளங்கப்படுத்தும் பாங்கு அவனது அழகை எமது அகக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. பொதுவாக ஒரு மனிதனின் முகமும் ஒன்றின் முகப்புத் தோற்றமும்தான் அழகைப் பறைசாற்றும் திறன் மிக்கவை. இவ்வகையில் அல்லாஹ் தன்னை இவ்வாறு அறிமுகம் செய்கின்றான்.



"பூமியில் உள்ள அனைத்தும் அழிந்தே போகும். மிக கண்ணியமும் மகோன்னதமும் மிக்க உங்களது இறைவனின் திருமுகம் மட்டும் (அழியாது) நிலைத்திருக்கும்." (சூரா அர்ரஹ்மான்: 26 , 27)

நபி (ஸல்) அவர்கள் தஜ்ஜால் பற்றிக் குறிப்பிடும்போது அவன் வலது கண் இல்லாத ஒற்றைக் கண்ணன். அல்லாஹ் ஒற்றைக் கண்ணன் அல்ல" என அல்லாஹ்வின் முழுமைத்துவத்தை உறுதிப்படுத்தி, அவனின் அழகை எமக்கு தெளிவுபடுத்தினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்) அல்லாஹ்வின் திருநாமங்களும் அவனது பண்புகளும் அழகானவை. அல்குர்ஆன் அவனது திருநாமங்கள் எனக் குறிப்பிடாமல் அழகிய திருநாமங்கள்" என தெளிவுபடுத்துகின்றது.

"அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் உண்டு. அவற்றைக் கொண்டு பிரார்த்தித்து அழையுங்கள்." (சூரா அல்அஃராப்: 180)

அவனது பெயர்கள் மட்டுமல்ல; அவனது பண்புகளும் அழகானவை. முழுநிறைவானவை. அவனது கருத்துக்களும் சிந்தனைகளும் வழிகாட்டுதல்களும் அவன் வகுத்த நியதிகளும் தீர்ப்புக்களும் சட்டங்களும் தண்டனை முறைகளும் முழு நிறைவானவை, அழகானவை.

இத்தகைய அல்லாஹ் அழகை நேசிக்கின்றான். அப்படியானால், அவன் அழகுணர்ச்சி மிக்கவன். அவனது பண்புகளில் அவனது அடியார்களிடம் பிரதிபலிக்க வேண்டிய பண்புதான் அழகுணர்ச்சி என்பது. அல்லாஹ் அருளாளன். அவனது அடியானும் படைப்பினங்களுக்கு அருளாக வாழ வேண்டும். அல்லாஹ் நிகரற்ற அன்பாளன். அவனது அடியானும் சக அடியார்களுடன் அன்பைப் பொழிந்து வாழ வேண்டும். அவன் பாவங்களை மன்னிக்கின்ற தவ்வாப். அவனது அடியானும் மனிதர்களை மன்னித்து வாழ வேண்டும். இவ்வாறே அல்லாஹ் அழகை வி ரு ம் பு கின் ற ான் எனில், அவனது அடியானும் அழகை நேசிக்க வேண்டும்.

ஒரு முஸ்லிம் தனி மனிதன் தனது உடலும் உடையும் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புவது அழகுணர்ச்சியின் விளைவாகும். இது மனித இயல்பாகும். தனது மானத்தை மறைத்து பிறர் முன் அழகாகக் காட்சி தர வேண்டும் என ஒரு மனிதனின் உள்ளுணர்வு தூண்டுகிறதென்றால், அது மனித நாகரிகத்தின் உயர்ந்த வளர்ச்சிக் கட்டமாகும்.

"ஆதமுடைய சந்ததிகளாகிய மனிதர்களே! உங்களது மானத்தை மறைக்கக் கூடிய, உங்களுக்கு அழகை அள்ளிக் கொட்டக் கூடிய ஆடையை உங்கள் மீது இறக்கியருளினோம். மேலும் தக்வா எனும் ஆடையே சிறந்ததாகும்." (சூரா அல்அஃராப்: 26)

மனிதனது அடிப்படைத் தேவைகளில் உறையுள் என்பது தவிர்ந்திருக்க முடியாத ஒன்றாகும். அது ஒரு சிங்கத்தின் குகையாக, பறவையின் கூடாக அமைய முடியாது. சிரேஷ்டமான படைப்பாகிய மனிதனது வாழ்விடம் பாதுகாப்பு நிறைந்ததாக, அழகானதாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஒரு முஸ்லிம் வசதியான ஒரு வீட்டை நிர்மாணித்து, அதனை அழகுபடுத்தி, அதனது நேர்த்தியைப் பராமரிப்பதானது அவனுக்குக் கிடைத்த அருளாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு விடயங்கள் அருள் பாக்கியங்களாகும். சிறந்த மனைவி, வசதியான வீடு, சிறந்த அயலவர், சிறந்த வாகனம்." (நூல்; அத்திர்மிதி) அல்லாஹ்வை நேசிக்கின்ற முஸ்லிம் அழகை நேசிப்பான். அவன் உணர்ச்சியற்ற, வரண்ட, ரசனையற்ற மனிதனாக வாழ மாட்டான்.

தனது இல்லம் விட்டு இறையில்லம் நோக்கிச் செல்கின்ற பாதையில் தனது வீட்டு வளாகத்தின் சுத்தத்தையும் அழகையும் நேர்த்தியையும் கண்ட முஸ்லிமின் பார்வை தனது கல்வி நிறுவனம், தான் தொழில் பார்க்கும் இடம், தான் ஸுஜூது செய்கின்ற மஸ்ஜித் வளாகம், தனது சுற்றுப்புறச் சுழல் என விரிவடையும். அவற்றின் அழகு குறித்தும் அவன் சிந்திப்பான். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் அவனுக்கு மஸ்ஜிதின் எல்லையை அகல் விரிவாக விளங்கப்படுத்தியுள்ளார்கள். இந்தப் பூமி எனக்கு மஸ்ஜிதாகவும் தூய்மையானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது." சுற்றுப்புறச் சுழலின் அழகை ரசிக்கத் தெரியாதவன் அல்லது அது குறித்து பிரக்ஞையற்றவன் அல்லாஹ்வை நேசிக்கத் தெரியாதவன்.

சுத்தம், தூய்மை, அழகு முதலானவை அல்லாஹ்வின் பண்புகளாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தூய்மையானவன்; அவன் தூய்மையை விரும்புகின்றான். அவன் பரிசுத்தமானவன்; அவன் பரிசுத்தத்தை விரும்புகின்றான். அவன் பரோபகாரி; பரோபகாரத்தை விரும்புகின்றான். அவன் கொடையாளி; கொடை கொடுப்பதை விரும்புகின்றான். எனவே, நீங்கள் உங்கள் வீட்டு வளாகத்தை சுத்தமாக வைத்திருங்கள்" ( நூல் ; திர்மிதி)

அழகை ரசிப்பது மனித இயல்பாகும். இதனை நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்துகின்றார்கள்: ஒரு பெண் சொத்து, செல்வம், அழகு, குடும்ப அந்தஸ்து, மார்க்கப்பற்று முதலான நான்கு விடயங்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகின்றாள். நீ மார்க்கப்பற்றுள்ள பெண்ணைத் தெரிவு செய்! இல்லா விட்டால் உனக்கு நாசம்தான்.

அஷ்ஷெய்க்
எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி

## ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி

aalamulislam.tkn@lakehouse.lk



# "குர்ஆன்: ஜெர்மனி விஞ்ஞானியின் கருத்து

– ஜெர்மன் விஞ்ஞானி

பலர் "இஸ்லாத்தைப் பற்றி ஒன்றுமே அறியாதவராகவும் மேலும் இஸ்லாத்தைப் பற்றிய எதிர் மறையான கருத்துக்களையே கொண்டிருந்த நீங்கள் இஸ்லாம் தான் உண்மையான மார்க்கம் என்று அறிந்தவுடன் எப்படி செயல்பட்டீர்கள்? உடனே முஸ்லிம் ஆக விரும்பினீர்களா? அல்லது வேறு ஏதாவது எண்ணினீர்களா?" என கேட்கப்பட்டது. அதற்கு அவர்,

"எனக்கு இஸ்லாத்தை விட்டால் வேறு மாற்று வழி இல்லை. ஏனென்றால், நான் பிறந்த போது குழந்தையாக இருந்தேன். அதனால் அப்போது நான் என் தாயிலிருந்து வேறுபட்டவனாக உணரமுடியவில்லை. கொஞ்சம் நாள் கழித்த பிறகு நான் உணர்ந்தேன் "நான் ஒரு சிறுவன் என்பதை. ஆனால் அப்போது யாரும் என்னிடம் கேட்கவில்லை நீ சிறுவனாக விரும்பினாயா? என்று. ஏனென்றால், இது கடவுளின் விருப்பம், நமக்கு வேறு வழியில்லை என்பது தெரியும்.

இறைவனின் அருளால் எனக்கு சிறந்த மனைவி, மக்கள் இருக்கிறார்கள். ஆனால் இவைகள் அனைத்தையும் விட இறைவனின் மிக மிக சிறந்த அருளாக நான் கருதுவது அவன் எனக்கு காட்டிய இஸ்லாம் என்னும் நேர்வழியே ஆகும்.

மேலும் அவர் கூறுகையில், நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்யும் போது 'என்னை இறை நம்பிக்கையாளனாகவே மரணிக்கச் செய், மீண்டும் நான் இறை நிராகரிப்பாளனாக மாற விடாதே' என பிரார்த்தனை செய்யக்கூடியவனாக தான் இருக்கிறேன் என அவர் தெரிவித்தார்.

அபூ அம்மார்,
கஹடோவிட்ட.

## இறைவன் விரும்பும் நற்செயல்கள்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள், நான் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! நற்செயல்களில் சிறந்தது எது?' என்று கேட்டேன். அவர்கள், 'தொழுகையை அதற்குரிய வேளையில் தொழுவது" என்று கூறினார்கள். 'பிறகு எது (சிறந்தது?)" என்று கேட்டேன் அவர்கள், 'பிறகு தாய், தந்தையருக்கு நன்மை செய்வது" என்று பதிலளித்தார்கள். நான், 'பிறகு எது (சிறந்தது?)" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'இறைவழியில் அறப்போரிடுவதாகும்" என்று பதில் சொன்னார்கள். நான் அல்லாஹ்வின் தூதரிடம் வேறெதுவும் கேட்காமல் மௌனமாகி விட்டேன். நான் இன்னும் கேட்டிருந்தால் அவர்கள் இன்னும் பதிலளித்திருப்பார்கள். **[ஆதாரம்; ஸஹீஹுல் புஹாரி ]**

## ஜனாஸா அடக்கத்தின் பின்னர்.....

உஸ்மான் இப்னு அஃப்பான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்; நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மய்யித்தை அடக்கம் செய்தபின் அங்கு நின்று கூறுவார்கள்,

"உங்கள் சகோதரருக்காக பாவமன்னிப்பு கோருங்கள். அவர் உறுதியுடன் இருப்பதற்கு அல்லாஹ்விடம் கேளுங்கள். நிச்சயமாக அவர் இப்போது விசாரிக்கப்பட இருக்கிறார்." (ஆதாரம்: அபூதாவூத்)

நாம் மய்யித்தை அடக்கம் செய்தவுடன், உடனே அங்கேயிருந்து புறப்படத்தான் பார்ப்போம். அல்லது ஹஸ்ரத் துஆச் செய்வார். எல்லோரும் வழக்கமாக ஆமீன் கூறுவோம். அந்த மய்யித்துக்காக நாம் யாராவது ஒருவர் சிறிது நேரம் இருந்து உருக்கமாக அல்லாஹ்விடம் துஆச் செய்வோமா..?

### ஒரு ஹதீஸ்...

அம்ரு இப்னுல் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்; "நீங்கள் என்னை அடக்கம் செய்தால் ஒரு ஆட்டை அறுத்து அதன் இறைச்சியை பங்கீடு செய்யும் நேரம்வரை எனது கப்ரைச் சுற்றி நில்லுங்கள்.

உங்களைக் கொண்டு நான் ஆறுதல் அடையவும், எனது இரட்சகனின் தூதருக்கு எதைக் கூறவேண்டும் என்பதை நான் அறிந்து கொள்வதற்காகவும் (கப்ரைச் சுற்றி நில்லுங்கள்) எனக் கூறினார்கள்.

# சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கு இஸ்லாமிய இல்லற வாழ்வின் தேவை



ஏற்றுக் கொள்ளல், அடிபணிதல் மூலமே ஒருவர் முஸ்லிமாக முடியும். நேற்று வரை இஸ்லாத்தில் இல்லாமலிருந்து, இன்று அல்லாஹ், ரசூலின் வழிகளை ஏற்றுக் கொண்டோர் இஸ்லாமாகிவிடுகின்றனர்.

மக்களின் கற்பனைகள் கலந்தவை அனைத்தும் தூய்மை இழந்த வழிமுறையே. இந்த வழியில்தான், குடும்ப வாழ்வையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. மனித இனப் பெருக்கத்துக்கான அடிப்படை அம்சம்

ஆண்,பெண் உடலுறவில் ஏற்படுகிறது. இந்த நியதியில்தான் திருமணத்தையும் இஸ்லாம் ஊக்குவிக்கிறது. இல்லறமே நல்லறம் எனப் போதிக்கும் இஸ்லாம் துறவறத்தை விரும்பவில்லை.

இறை தூதர்களில் ஈஸா (அலை) அவர்களைத் தவிர, அனைவரும் குடும்ப வாழ்வில் இணைந்து, பிள்ளைப் பேறுகளை ஊக்கு வித்தது மாத்திரமன்றி, சிறந்த சமுதாயத் தோற்றப்பாட்டுக்கும் வித்திட்டுள்ளனர்.

இந்த இனப்பெருக்கம்தான், முஸ்லிம் திருமணச் சட்டங்களில் சிலரை அச்சமடைய வைத்துள்ளது. முஸ்லிம்கள் பல்கிப் பெருகி நாட்டைச் சொந்தமாக்கி விடுவார்களோ? என்ற

மனநிலைகளே சிலருக்கு இந்த அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஆனால்,ஆட்சி அதிகாரம், ஆயுள்,வாழ்க்கை அனைத்தையும் தீர்மானிப்பவன் இறைவன் என்ற இறை கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ள எவரும் இதில் அச்சமடைய முடியாதென்பதே உண்மையாகும்.குடும்பத்தைப் பராமரிக்கும் வசதி உள்ளோர் திருமணம் செய்வது நபி வழியானாலும் ஒரேயொரு திருமணமே பொது விதியாகும். உடலியல் தேவையும் பொருளாதார வசதிகளும் இருந்தால், நான்கு திருமணங்களுக்கு அனுமதித்து சில நிபந்தனைகளையும் விதித்துள்ளது இஸ்லாம்.

வயது வந்தவர்கள் அனைவரும் திருமணம் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆனால் திருமணம் தேவைப்படும் ஆண்,பெண் எவரும் பருவமடைந்தவர்களாக இருப்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது.நபியவர்களின் 11 திருமணங்களில் முதலாவது திருமணத்தில், நாற்பது வயது விதவையைக் கரம்பிடித்தார்.

இந்த இல்லற வாழ்க்கை முதல் மனைவி கதீஜா நாயகி இறக்கும் வரைக்கும் வேறு திருமணங்களைச் செய்யாது மிகப் பெரிய படிப்பினைகளைப் போதித்துக் காட்டினார். 25 வயதில் முதலாவது திருமணம் முடித்த நபியவர்கள், 51 வயது வரை,வேறு யாரையும் திருமணம் செய்யவில்லை.ஏனைய மனைவியர்களில் அன்னை ஆயிஷா நாயகி அவர்களைத் தவிர, ஏனைய அனைவரும் 36 தொடக்கம் 50 வயதிற்கிடைப்பட்டோரே.இதில் பலர், விதவைகளாவர்.

நபியவர்களை அடியோடு பின்பற்றிய அவர்களது தோழர்களும் விதவைகளுக்கு வாழ்வளிக்க வேண்டும்,சமூகத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு இனமாக விதவைகள் இருக்கக் கூடாதென்பதையே இஸ்லாம் இத்திருமணங்கள் மூலம் போதிக்கின்றது.

ஆயிஷா நாயகியை ஒன்பது வயதில் திருமணம் முடித்தாலும் அந்நார் பருவமடைந்த பின்னர் 14 வயதிலே, நபியவர்களுடன் குடும்ப வாழ்வில் இணைக்கப்பட்டார். பிழையான கண்ணோட்டம் செய்வதற்காக,சிலர் இஸ்லாத்தின் இந்த,தத்துவங்களைக் கண்டு கொள்ளாமல் விமர்சிப்பதுதான் மத நல்லிணக்கத்தை தூரப்படுத்துகின்றது. இதில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். இந்தப் பதினொரு திருமணங்களில் எவற்றையும் நபியவர்கள் தேடிச் சென்று செய்யவில்லை.


பெண் வீட்டாரின் விருப்பம்,நபியர்களின் நம்பிக்கையில் ஏற்பட்ட பிடிப்பு,இன்னும் போர்ச் சூழல் ஏற்படுத்திய புறக்காரணிகளும் நபியவர்களின் திருமணங்களில் பங்களிப்புச் செலுத்தியிருந்தன.

பாலியல் சீரழிவுகளைத் தடுப்பதற்கான பிரதான நடைமுறைகளாகவே திருமணத்தை இஸ்லாம் கருதுகிறது.ஒரு வேளை அவ்வாறு அபூர்வமாக இச்சீரழிவு இடம்பெற்றால், இஸ்லாமிய குற்றவியல் சட்டங்களின் பிரகாரம் தண்டனை வழங்கினால், நூறு வீதம் குற்றங்களை ஒழிக்க முடியும்.

அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சட்டங்களால்தான், நீதி, நெறியுள்ள மனித சமுதாயத்தை தோற்றுவிக்க முடியும்.

(பன்னூலாசிரியர் ரபியுத்தீன் ஜமாலி)

## மலைச்சாரல்





# நோயாளர்களை சூழ்ந்துள்ள ஆபத்து!

## உயிர் அச்சம் நிறைந்த இடமாக மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலை

**ஆளணி பற்றாக்குறை, முறையான பராமரிப்பு இன்றி, சுற்றுப்புற சூழல் காடுகள் அடர்ந்து, இரவு வேளைகளில் பன்றிகள் மற்றும் சிறுத்தைகள் நடமாடும் பிரதேசமாகவும் இவ்வைத்தியசாலை மாறி வருவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். சில விடுதிகள் பற்றைக் காடுகளால் மூடப்பட்டுள்ளன.**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா நகருக்கு சமீபமாக சுமார் 56 தோட்டங்களைச் சேர்ந்த 80 ஆயிரம் மக்கள் பயன்படுத்தும் பிரதான வைத்தியசாலையாக மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையாக விளங்குகிறது. மூன்று மாடி கட்டடத்தில் மகப்பேற்று வாட்டு,சிறுவர் வாட்டு உட்பட ஆறு வாட்டுகளுடன் ஆண்கள், பெண்கள் என வகைப்படுத்தக்கூடிய சுமார் 200 கட்டில்களுடன் கூடிய மிகப்பெரிய வைத்தியசாலையாகும்.குறித்த வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறை காரணமாக கவனிப்பாரற்று காணப்படுகிறது.

மஸ்கெலியா நகரை சுற்றியுள்ள சுமார் 56 க்கும் அதிகமான தோட்டங்களில் வாழும் மக்களின் நோய்களுக்கு இந்த வைத்தியசாலையே உள்ளது. அத்தோடு சிவனொளி பாதமலை பருவகாலத்தில் சுமார் ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வருகை தரும் போது அவர்களின் திடீர் சுகவீனங்களுக்கும் இவ் வைத்தியசாலையே இருக்கிறது. ஆனால் போதியளவு வைத்தியர்களும் தாதியர்களும் இல்லாததன் காரணமாக இங்கு வரும் நோயாளர்கள் உடனடியாக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர்.

இதனால் வறுமை கோட்டின் கீழ் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வைத்தியசாலை போதியளவு இடவசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் கூட இங்கு காணப்படுகின்றன. மிகவும் இரம்மியமான சூழலில் அமைந்துள்ளதுடன் வைத்தியர்கள், தாதியர்கள் தங்குவதற்கான விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆளணி இல்லாததனாலும், முறையான பராமரிப்பு இன்றி, சுற்றுப்புற சூழல் காடாகி இரவு வேளைகளில் பன்றிகள் மற்றும் சிறுத்தைகள் நடமாடும் பிரதேசமாகவும் மாறி வருவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.சில விடுதிகள் பற்றை காடுகளால் மூடப்பட்டுள்ளன.

கட்டடத்தில் பல இடங்களில் மழை நீர் கசிந்து சுவரில் கரைபடிந்து பாசனம் வளர்ந்துள்ளன.

மாடிக்கட்டடத்தில் பல இடங்களில் ஜன்னல்களுக்கு அருகாமையில் பாரிய குளவி கூடுகள் காணப்படுகின்றன.இதனால் இந்த வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு மறுக்கின்றனர்.

ஜன்னல் திறக்கும் போது இந்த குளவி கூடுகளில் பட்டால் பாரிய ஆபத்து ஏற்படும் நிலை ஏற்படலாம்.ஒரு சில அறைகள் குருவிகளின் எச்சங்களால் நிறைந்து காணப்படுகின்றன.

இன்று சில வாட்டுக்கள் மின்சார ஒழுக்கு காரணமாக மூடப் பட்டுள்ளன. மின் உயர்த்தி கடந்த பல வருட காலமாக பழுதடைந்த நிலையில் தற்போது புதிதாக ஒரு மின் உயர்த்தியும் பொறுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்கு தேவையான அளவு கட்டட மற்றும் தளபாட வசதிகள் இருந்தும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள்,சிற்றூழியர்கள் இல்லாததன் காரணமாகவே இந்த வைத்தியசாலை இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக இங்கு சிகிச்சை பெறுபவர்கள் தெரிவிக்கின்றனர்.இது இவ்வாறு இருக்க மாதாந்த கிளினிக் மற்றும் குளவி கொட்டுக்குள்ளாகியும் ஏனைய பல நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக மாதாந்தம் சுமார் 1500க்கும் அதிகமான மக்கள் வந்து செல்லுகின்றனர்.

வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் சுமார் 05 பேருக்கு வெவ்வேறு துறைகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் மூன்று பேர் மாத்திரமே சேவையில் இருக்கின்றனர். அதுவும் புதிதாக நியமனம் பெற்றவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. தாதியர்கள் சுமார் 15 பேர் தேவைப்படும் நிலையில் ஏழு பேர் மாத்திரமே சேவையில் உள்ளனர்.சிற்றூழியர்கள் தேவையான 30 பேரில் 15 பேரே உள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் பல குறைபாடுகள் நிலவுவதன் காரணமாக அதிகமான மக்கள் கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கே செல்கின்றனர்.இதனால் நாளாந்த கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்கு வரும் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றன.இதனால் அங்கு உரிய அளவு சேவையினை பெற்றுக்கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளன.

தோட்டத் தொழிலாளர்கள் கிளங்கன் சென்று சிகிச்சை பெறுவதற்கு அதிக பணமும் அதிக நேரமும் செலவிட வேண்டியுள்ளது. வயோதிபர்கள், சிறுவர்கள் இதனால் பல பாதிப்புக்களை சந்திக்கின்றனர்.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமையால் அவதியுறும் தோட்ட மக்களின் துயர் போக்க இவ்வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தி தேவையான ஆளணி மற்றும் நவீன உபகரணங்களை பெற்றுக் கொடுத்து மக்களின் சுகாதார தேவைகளை நிவர்த்திக்கு மாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

**கே.சுந்தரலிங்கம்**
(ஹற்றன் விசேட நிருபர்)







**கட்டடத்தின் பல இடங்களில் மழைநீர் கசிந்து சுவரில் கறைபடிந்து பாசிகள் வளர்ந்துள்ளன. மாடிக் கட்டடத்தின் பல இடங்களில் ஜன்னல்களுக்கு அருகாமையில் பாரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. இதனால் இந்த வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கு மறுக்கின்றனர். ஜன்னலை திறக்கும் போது இந்தக் குளவி கூடுகள் கலைந்தால் பாரிய ஆபத்து நிலை ஏற்படலாம். ஒரு சில அறைகள் குருவிகளின் எச்சங்களால் நிறைந்து காணப்படுகின்றன.**









**1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை போதியளவு இடவசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் கூட இங்கு காணப்படுகின்றன. மிகவும் இரம்மியமான சூழலில் அமைந்துள்ளதுடன் வைத்தியர்கள், தாதியர்கள் தங்குவதற்கான விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.**

# கிழக்கின் குரல்



## தட்டுத்தாவாரம் நூல் வெளியீடு ஒத்திவைப்பு

மூத்த ஊடகவியலாளரும் எழுத்தாளருமான எம்.ஏ.எம் நிலாம் எழுதிய தட்டுத்தாவாரம் நூல் வெளியீட்டு விழா வேறொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விழா இன்று கொழும்பு பதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்ட திடீர் கொரேனா வைரஸின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நிலைமை கருதியே இப்புத்தக விழா ஒத்திவைக்கப்பட்டதாக நூலாசிரியர் நிலாம் தெரிவித்தார்.

இவ்விழா நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் மிக நீண்ட காலம் பணியாற்றிய ஊடகவியலாளர் எம்.ஏ.எம் நிலாம் கவிதை இக்கியத்துறைகளிலும் சாதனை படைத்தவர். இவரது 'ஈழத்துநூன்' எழுத்துக்களே இலக்கியத்தில் இவருக்கு புகழ் சேர்த்தது.

## கமநல அமைப்பிலுள்ள விவசாயிகள் சகலருக்கும் உரம் கிடைக்க வேண்டும்

**மண்டூர் குறூப் நிருபர்**

கமநல அமைப்பிலுள்ள சகல விவசாயிகளும் உரத்தை பெற்றுக்கொள்வதற்கான வசதியை விவசாய அமைப்புகளும் கமநல சேவைகள் நிலையமும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

2020/2021 பெரும்போக உரமானிய திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான இலவச உரம் வழங்கல் நிகழ்வு, வெல்லாவெளி கமநல நிலையத்தின் ஏற்பாட்டில், நேற்றுமுன்தினம் (07) புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கமநல அமைப்பு கூட்டங்களின்போது, உரம் பெறுவதற்கான படிவங்கள் சிபார்சு செய்யப் படவில்லை. உரம் எடுப்பதற்கான நடவடிக்கையை இந்த அமைப்புக்கள் ஏற்படுத்தி தரவில்லை. இது தொடர்பாக வறுமையிலுள்ள விவசாயிகள் என்னிடம் முறைப்பாடு செய்திருந்தனர். விவசாய அமைப்பின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள்,

சகலரும் உரத்தை பெறும் ஏற்பாடுகளை அமைப்புக்களே செய்ய வேண்டும்.

மாவட்டச் செயலகத்தினால் எடுக்கப்படும் பெரும்போக பயிர்ச் செய்கை கூட்ட தீர்மான முடிவை மாற்றி முன்னதாகவே சிலர், விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் தகவல் கிடைக்கின்றது.

ஆகவே செயலகத்தின் நிர்ணய காலத்தை மீறி விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு எதிர்வரும் காலத்தில் உரம் கிடைப்பதற்கான வாய்புக்கள் நிறுத்தப்படலாம். இது தொடர்பாக விவசாய அமைப்புகள் கடமைப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நாட்டில் எவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டாலும் விவசாய செய்கைக்கான தடைகள் ஏற்படாது. ஒவ்வொரு விவசாயிகளும் முறையாக செய்கையில் ஈடுபட்டு அமோக விளைச்சலை பெற இறைவனை பிராத்திக்கின்றேன் என்றார்.

## அறுகம்பைக்கு வரும் உல்லாச பயணிகளை பதிவு செய்ய முடிவு

### கொரோனா வைரஸை தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள்

**காரைதீவு குறூப், அட்டாளைச் சேனை குறூப் நிருபர்கள்**

நாட்டின் உல்லாசபுரியாக விளங்கும் அறுகம்பைஉல்லைக்கு வரும் அனைத்து உல்லாசப் பயணிகளின் விபரங்கள் பதியப்படவேண்டும். அங்கு விடுதிகளில் வீடுகளில் தங்குவோர் விபரமும் பதியப்படவேண்டும் என்று பொத்துவில் பிரதேச கொரோனா தடுப்புச் செயலணிக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பரவிவரும் கொவிட்19 தாக்கத்தை தடுப்பதற்காக பிரதேச செயலக ரீதியாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.இது தொடர்பான கூட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் இராசரெத்தினம் திரவியராஜ் தலைமையில் பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது .

இக்கூட்டத்தில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.எம்.வாஸித், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இராணுவ முகாம் கட்டளைத் தளபதி, பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எ.சமட், அறுகம்பை சுற்றுலாச் சங்க நிருவாகிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

பொத்துவில் கடற்கரைப் பரப்பில் கப்பல் அல்லது இயந்திரப் படகுகள் சந்தேகத்திற்கிடமான முறையில் நீண்டநேரம் தரித்து நின்றால் அருகிலுள்ள இராணுவ முகாம் அல்லது பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் அறிவிக்க வேண்டும்.

வெளியிடங்களிலிருந்து பொத்துவில் பிரதேசத்திற்கு வரும் நபர்கள் உடனடியாக கிராமசேவை அலுவலரிடம் பதியவேண்டும். அதேபோல் பல தேவைகளின் நிமித்தம் இங்குவரும் வாகனங்கள் அனைத்தும் பதியப்படவேண்டும்.

வீட்டில் இருந்து வெளியேறும் போது முகக்கவசம் அணிதல், மக்கள் கூட்டமாக நிற்பதை தவிர்த்தல், மற்றும் வெளிச்சூழலில் இருந்து வீட்டுக்கு சென்றவுடன் கைகளை சவர்க்காரம் அல்லது கையை சுத்தசெய்யும் பதார்த்தங்களை இட்டு கைகளை கழுவுதல், வெளியில் வருவதை தடுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவசியம் ஏற்படின் பொது இடங்களில் தொற்று நீக்கவும் அவசியமான உணவுப் பொருட்களை விநியோகம் செய்யவும் முப்படையினர் சுகாதார வைத்திய பணிமனையினர் பிரதேச சபையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சகலதீர்மானங்களும் ஒலிபெருக்கிவாயிலாக பொதுமக்களுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் தாக்கம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது.

மக்களை விழிப்பூட்டல், சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் அறிவூட்டல் வெளியூர்களில் இருந்து வருவோரை மருத்து பரிசோதனைக்குட்படுத்தல் போன்ற விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் அரச நிறுவனங்கள் என்பன கவனம் எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார ஒழுக்கினால் ஏற்பட்ட தீயில் தொழிற்சாலை சேதம்

**கல்குடா தினகரன் நிருபர்**

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மாவடிச்சேனை அகமது கிராஸ் வீதியில், அமைந்துள்ள மரத் தளபாடம் செய்யும் தொழிற்சாலை திடீரென ஏற்பட்ட தீயினால் முற்றாக எரிந்து சேதடைந்தது.

புதன்கிழமை இரவு இத்தீ ஏற்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜன பெரமுன தெரிவித்தார்.மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீயினாலே இத்தொழிற்சாலை தீப்பற்றியது.

இந்த தீ பரவலால் மரத்தினால் செய்யப்பட்ட அலுமாரி, கட்டில், ஜன்னல் மற்றும் இயந்திரங்கள் என்பன முற்றாக சேதமடைந்தன. இதன் பெறுமதி பத்து இலட்சம் ரூபா என்றும் தொழிற்சாலை உரிமையாளர் எம்.எச்.எம்.சமீம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜன பெரமுன தெரிவித்தார். தீ மேலும் பரவாமல் தடுப்பதற்கு ஓட்டமாவடி பிரதேச சபை, வாழைச்சேனை பொலிசார் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கடுமையாக முயற்சி செய்தனர்.

இக்கூட்டு முயற்சியின் காரணமாக தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

## மாத்தறையில் அபிவிருத்தி

**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்ட கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் மக்களின் பங்களிப்புடன் 2073 கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டமான 'சுபிரிகம' அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


## பிரசித்த ஏல விற்பனை

ஜீன் மாதம் 9ம் 10ம் மற்றும் ஜீலை மாதம் 13ம் 14ம் மற்றும் ஆகஸ்ட் மாதம் 11ம் 12ம் திகதிகளில் தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல் பீ பினான்ஸ் பி எல் சி இன் தங்க நகை பாதுகாப்புகளில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் 2020 ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் ஏலவிற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன் பட்டோருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, கனேமுல்லை, பொலன்னறுவை, நுவரெலியா, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகன்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, மினுவங்கொட, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி | 20 ஒக்டோபர் 2020 |
| ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசெல்வத்தை - பாணந்துறை, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பிறீமியர் கொழும்பு 07, தெமடகொட, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான. | 21 ஒக்டோபர் 2020 |
| மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிரான்ட்பாஸ் ஸ்டேடியம் கொழும்பு 14, கிரான்ட்பாஸ், வெள்ளவத்தை, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாலபே, புத்தளம், சிலாபம், கொச்சிக்கடை- நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, திவுலபிடிய, மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ. | 22 ஒக்டோபர் 2020 |
| கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம், களுத்துறை, பேருவளை, அளுத்கம, ஹங்வெல்ல, எஹெலியகொட, அவிசாவளை, இரத்தினபுரி, பலாங்கொடை, தம்புத்தேகம, மதவாச்சி, அனுராதபுரம், அனுராதபுரம் நகர கிளை, கெக்கிராவ, தம்புள்ளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, மஸ்கெலியா, ஹட்டன், கொஹுவல, செட்டியார் தெரு, மாளிகாவத்த, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, கம்பளை நகர கிளை, கம்பளை, புசல்லாவை, பண்டாரவளை, பதுளை, பதுளை நகர கிளை, தங்காலை, காலி, கராபிட்டிய, அம்பலாங்கொட, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை | 23 ஒக்டோபர் 2020 |
| செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, காத்தான்குடி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி | 24 ஒக்டோபர் 2020 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

LB FINANCE

சிரேஷ்ட முகாமையாளர் - தங்க கடன் பிரிவு எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி
275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, (OPA கட்டடம்) கொழும்பு 07.


## கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பு: மட்டக்களப்பு மாவட்த்தில் துண்டுப்பிரசுரம்



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

கொரோனா வைரஸிடமிருந்து பாதுகாப்பாக இருப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் , இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை மாவட்டம் பூராகவும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதனை முன்னிட்டு வியாழக்கிழமை(08) மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மத்திய பஸ் தரிப்பிடம், பொதுச்சந்தை, வைத்திய சாலை அமைந்துள்ள பகுதி, வர்த்தக நிலையங்கள், வியாபாரிகள், பிரயாணிகள், ஏனைய பொதுமக்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

முடிந்தளவு வீட்டில் தங்கியிருங்கள், கைகளை சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கழுவுங்கள், தொடுகையற்ற வரவேற்பு வாழ்த்து முறைகளை பழகிக் கொள்ளுங்கள், குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணல், முகக் கவசத்தை சரியான முறையில் அணிதல்,முகம், மூக்கு, வாய் என்பவற்றைத் தொடுவதைத் தவிர்த்தல், இருமும்போதும், தும்மும்போதும், முழங்கையை மடித்து முகத்தை மூடுதல் உள்ளிட்ட பல வாசகங்கள் துண்டுப்பிரசுரங்களில் அடங்கியிருந்தன.

கொரோனா வைரஸிடமிருந்து பாதுகாப்பு பெற மக்களை அறிவுறுத்தும், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மாவட்டம் பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை தலைவர் தம்பிப்போடி வசந்தராசா இதன்போது தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்டத்தில் மண் அகழ்வுக்கு அனுமதி

### மாபியாக் கும்பலை ஒழிக்கவும் நடவடிக்கை

**(மாளிகைக்காடு குறூப் நிருபர் )**

அம்பாறை மாவட்டத்தில் மண் வியாபாரத்திற்காக வழங்கப்படும் அனுமதி பத்திரங்களை ஒரு குடும்பத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் ஏனையோருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு.டீ. வீரசிங்க தெரிவித்தார். அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏ.ஐ.விக்ரம மண்டபத்தில் இடம்பெற்றது.இதில மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் மண் அகழ்வு குறித்தும் கவனமெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஆற்று மண் மற்றும் ஏனைய மண் அகழ்வு வேலைகளில் பாரி மாபியா வேலைகள் இடம்பெற்றுள்ளன. மண் அகழ்வில் ஈடுபடுவோர் கிராமப்புறங்களில் மண்ணை அகழ்ந்து இடைநடுவில் விட்டுச் செல்கின்றனர். இதனால் அந்த இடங்கள் பள்ளமும் குழியாகவும் காணப்படுகின்றன. ஒரு தனி நபருக்கு அவரின் குடும்பத்தைச் சேர்ந்த 25 பேரின் பெயர்களில் அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் பெருமளவில் பணம் சம்பாதித்துள்ளனர்.இந்த நிலமை மாற்றப்பட்டு தொழில் செய்யக்கூடிய அனைவருக்கும் மண் ஏற்றும் அனுமதி பத்திரங்கள் பகர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் இக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. பொத்துவில் லாஹுகல பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்நோக்கும் நீர்ப்பாசன பிரச்சினை, ஹெடஓயா ஊடாக பாலம் அமைத்தல், கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுத்தல், அம்பாறை குளத்திற்கு அருகிலுள்ள தொல்பொருள் பிரதேசத்தை வனபரிபாலன திணைக்களத்திடமிருந்து விடுவித்தல், ஆலையடிவேம்பு மாவட்ட வைத்தியசாலை மற்றும் பொத்துவில் கோமாரி வைத்தியசாலைகளில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினையை தீர்த்து வைத்தல், தீகவாபி கிராமிய வைத்தியசாலைக்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் போன்ற விடயங்களும் இதில் ஆராயப்பட்டன. இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநரும் அம்பாறை மாவட்ட அபிவருத்திக் குழு இணைத் தலைவருமான அனுராதா யஹம்பத், மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் திணைக்களத்தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மாநகர , நகர மற்றும் பிரதேச சபைத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க திட்டம்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கீர்த்தி சிறீ கமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிருவாகிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கலந்துரையாடல் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேர்பா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கீர்த்தி சிறீ கமகே, உப தலைவர் எம். வஹாப், பொருளாளர் பாசுல் அன்வர் மற்றும் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் எம். ரவி, செயலாளர் எம்.ஐ.எம்.அக்வர் உட்பட அதன் நிருவாக உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.



இதன் போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நலன் சார்ந்து தொழிற் சங்க ரீதியாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கம் என்பன பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

ஓய்வூதியத்துக்கு செலுத்த வேண்டிய மிகுதிக் கொடுப்பனவு, தரம் ஒன்றுக்கான முன்னேற்றப் பரீட்சை, சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பட்ட விடயங்களை அரசாங்கத்துடன் பேசி அவைகளை தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைளை மேற் கொண்டு வருகின்றோம்.

இந்த நிலையில் சமுர்த்தி உத்தியோகத்தர்களாகிய நாம் அரசாங்கத்தின் கொள்கைகள், அதன் வேலைத் திட்டங்களை சமுர்த்தி வேலைத்திட்டங்களூடாக சரியாக நடைமுறைப்படுத்தல் வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# உலக சைகை மொழி தினம்; தமிழில் 'மொழி' பாடல் வெளியீடு

சர்வதேச சைகை மொழி தினத்தையொட்டி இலங்கைக் கலைஞர்கள் இணைந்து உருவாக்கிய 'மொழி' பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

தகவல் பரிமாற்றத்துக்கும் ஒருவருடன் ஒருவர் தொடர்பில் இருப்பதற்கும் மொழி எந்தளவு முக்கியமானது என்பது உலகறிந்த விடயம் என்பதுடன் இலங்கையில் பிரதானமாக மூன்று மொழிகள் புழக்கத்தில் உள்ளன. பேசும் மொழியில் உரையாட முடியாதவர்களுக்கு தமது தொடர்பாடல்களை மேற்கொள்வதற்காக சைகை மொழி உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படுகின்றது.

இலங்கையில் முதன் முறையாக சைகை மொழி தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் *Working Ants Studio* மற்றும் *SRSA* திறன் நிர்வாக அமைப்பு ஆகியன இணைந்து இந்த 'மொழி' இசை வீடியோவை தயாரித்து வெளியிட்டுள்ளன.

உரைவிளக்குநர்களுக்கு சமர்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ள இந்த பாடலின் வரிகளை வருண் துஷ்யந்தன் எழுதியுள்ளதுடன் சிவ பத்மயன் மற்றும் குழுவினர் இசை வழங்கியுள்ளனர்.

இந்த வீடியோ தயாரிப்பு தொடர்பில் அதன் தயாரிப்பாளர்களில் ஒருவரான லங்ஸ்டன் கொஸ்தா கருத்துத் தெரிவிக்கையில், 'உலகளாவிய ரீதியில் சைகை மொழிக்கு பெரும் மதிப்பு காணப்படுகின்றது. முன்னுரிமையும் வழங்கப்படுகின்றது. ஆனாலும் இலங்கையில் பெருமளவு வரவேற்பில்லை என்பதுடன் இந்த சைகை மொழியை பயில்வதிலும் பலர் ஆர்வம் காண்பிப்பதில்லை. பிறந்த குழந்தைக்கு பசித்தால் அதற்கு பால் வேண்டும் என சொல்லத் தெரியாது. அழுவதன் மூலம் நாம் உணர்வோம் பிள்ளைக்கு பசிக்கின்றது என. அது படிப்படியாக வளரும் போது தான் தாய் மொழியை அதாவது பேசும் மொழியை பயில்கின்றது.

அது போலவே இந்த சைகை மொழியும் இலங்கையில் பரந்தளவில் கற்பிக்கப்பட்ட போதிலும் அதனை தொடர குறைந்தளவானோர் மத்தியில் மாத்திரம் ஆர்வம் காணப்படுகின்றது. எனவே இந்த சைகை மொழியின் முக்கியத்துவம் தொடர்பில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த பாடலை நாம் தயாரித்திருந்தோம் என்றார்.

மற்றுமொரு இணை தயாரிப்பாளரான ஷகீர் மொஹமட் கருத்துத் தெரிவிக்கையில்,...

இந்த பாடல் வீடியோவை நாம் மிகவும் குறுகிய காலப்பகுதியில் தயாரித்து முடித்திருந்தோம். பாடல் வீடியோ வெளியிடப்பட்டது முதல் எமக்கு பெரும் வரவேற்பு பல தரப்பினரிடமிருந்தும் கிடைத்திருந்தது. பலர் எமது முயற்சிகளை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்த வண்ணமுள்ளனர். இந்த வீடியோவில் நாட்டிய நர்த்தனங்களில் ஈடுபடுவோரைத் தவிர ஏனைய அனைவரும் பேச்சுத்திறன் அற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பாடல் வீடியோவை வெற்றிகரமாக தயாரித்து வழங்க எமக்கு உதவிகளையும் பங்களிப்பையும் வழங்கிய அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

வீடியோ நாட்டியத்தில் ஈடுபடும் கலைஞர்கள் கலாசூரி திவ்யா சுஜேன், அபிநயக்சேத்திரா நாட்டிய கல்லூரியின் மாணவியும் NB போய்ஸ் நாட்டிய கலையகத்தின் நரேஷ் நாகேந்திரனின் மாணவர்களுமாவர்.

தயாரிப்பு குழுவில் ராஜ் ஜொசுவா, ஹபி ரொபர்ட், க்ளிங்டன் கொஸ்தா, ஷகீர் மொஹமட் மற்றும் லங்ஸ்டன் கொஸ்தா ஆகியோர் அடங்கியுள்ளனர்.

இந்தப் பாடலை *https://www.youtube.com/watch?v=InDHmkRTQY* எனும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.


## கொழும்பு மாநகர சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் உருப்படிகள் மற்றும் சேவைகளின் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| | குறிப்பீட்டிலக்கம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | CPD/20/1880/2019 | உடற் பயிற்சி/ பாரம் தூக்கல் உபகரணம் ஆகியவற்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல். |

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணமாக 5400 ரூபாவை (வரிகள் அடங்கலாக) செலுத்திய பின்னர், 2020 ஒக்ரோபர் 28 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-07, கொழும்பு மாநகர சபையின் மத்திய பெறுகைத் திணைக்கள பெறுகைக்கான பிரதான கணக்காளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். 2020 ஒக்ரோபர் 28 ஆம் திகதி பி.ப. 3 மணிக்குப் பின்னர் விலைமனுக்கோரல் ஆவணம் வழங்கப்படமாட்டாது. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் இரு பிரதிகளில் 2020 ஒக்ரோபர் 29 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, நகர மண்டபம், மாநகர செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் 2020 ஒக்ரோபர் 29 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

011 2686389 மற்றும் 011 2673173 ஆகிய தொலைபேசி எண்களினூடாக பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் (ஏதுமிருப்பின்) பெற்றுக் கொள்ளலாம்.

**ரொஷானி திசாநாயக்க – சட்டத்தரணி,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## கங்க இஹலகோரளே பிரதேச சபை

## 2021 வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல்

2021 வருடத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கும் வழங்குநர்களாக கீழேயுள்ள தகவுத்திறன் கீழாக பதிவு செய்து கொள்ளப்படுவதற்கும் உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்து 2020.12.15 வரை என்னால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

1. **(அ) வழங்கல்கள்**
   - 01. நிர்மாணிப்புப் பொருள் வழங்குநர்கள்
   - 02. மின்சார உபகரணங்கள் மற்றும் துணையுறுப்புக்கள்
   - 03. இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் துணையுறுப்புக்கள்
   - 04. அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (மரத்தினாலானவை மற்றும் உலோகத்தினாலானவை)
   - 05. அலுவலக காகிதாதிகள்
   - 06. நீர்க்குழாய் மற்றும் துணையுறுப்புக்கள்
   - 07. சுகாதார உபகரணங்கள், துணையுறுப்புக்கள் மற்றும் சுகாதார பாதுகாப்புப் பொருட்கள்
   - 08. வாகனங்களைப் பழுதுபார்த்தல் (அரசாங்க பதிவைக் கொண்டுள்ளவை.)
   - 09. வாகனங்களை பெயின்ற் பண்ணல் மற்றும் டின்கரிங்
   - 10. வாகனங்களைப் புதுப்பித்தல்/ வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்.
   - 11. திரீவீல் பழுதுபார்ப்பு/ நவீனமயப்படுத்தல்/ புதுப்பித்தல்
   - 12. சைக்கிள்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
   - 13. பிட்டுமன், இமல்ஷன் வழங்குநர்கள்
   - 14. நிர்மாணிப்பு உபகரணங்கள் மற்றும் வாகனம், இயந்திராதிகளை வழங்கல்.
   - 15. முன் தயாரிப்புகள், கொங்கிறீட் குழாய்கள், இன்டர்லொக்கல், பூங்கா அலங்கரிப்பு உபகரணங்கள், மதகு குழாய்கள்.
   - 16. உத்தியோக துணி வகைகள் மற்றும் திரைச்சீலை
   - 17. டிஜிட்டல்/ மாதிரிப்பத்திரங்கள்/ புத்தகம் அச்சிடல் போன்ற அச்சக வேலைகள்
   - 18. பெயர்ப்பலகை மற்றும் அறிவித்தல் பலகை வழங்குநர்கள்.
   - 19. பலகை வகைகளை வழங்குவோர்
   - 20. நிறப்பூச்சி வகைகள்
   - 21. இறப்பர் தொடர்பான தயாரிப்புகள் (டயர், டியூப், கார்பட்)
   - 22. உராய்வு நீக்கி பொருட்கள்
   - 23. அளக்கும் உபகரணங்கள்
   - 24. காணி மற்றும் கட்டிடங்களை அளவிடல்
   - 25. தும்புச் சோறை வழங்கல்.
   - 26. கட்டிடப் பொருட்கள்.
2. **(ஆ) சேவைகள்**
   - 27. தட்டச்சு, ரோணியோ இயந்திரம், போட்டோக் கொப்பி இயந்திரம் உள்ளிட்ட அலுவலக இயந்திரங்களைப் பழுது பார்த்தல்.
   - 28. கணனி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரத்தை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
   - 29. விளையாட்டு உபகரணங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

**பொருட்களை வழங்கும் தகவுத் திறன்**

01. உயர்தரத்திலான வணிக உரிமைப் பெயர்கொண்ட பண்டங்களை மாத்திரம் வழங்கல்.
02. விலைமாற்றங்கள் ஏற்படும் போது வழங்கப்படும் பொருட்களில் விலைமாற்றங்களை செய்யாதிருத்தல்.
03. குறித்த காலத்தில் குறித்த நேரத்திற்கு பொருட்கள் வழங்கல்.
04. பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்காக காசோலைகள் மூலம் மாத்திரம் கொடுப்பனவு செய்ய இணங்க வேண்டும்.
05. கட்டளைகளுக்கேற்ப உரித்தான வணிக உரிமை பெயர்களுடன் கூடிய பண்டங்களை மாத்திரம் வழங்கல்.

**வழங்குநர்களைப் பதிவு செய்யும் நிபந்தனைகள்**

01. பதிவு செய்துகொண்டுள்ள வழங்குநர்களுக்கு மேலதிகமாக தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வேறு விலைமனுக்களையும் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்த சபைக்கு உரியதாகும்.
02. உங்கள் விபரத்தை உள்ளடக்கிய விண்ணப்பமொன்றையும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. ஒவ்வொரு உருப்படி தொடர்பாகவும் ரூ. 1500.00 கட்டணமொன்றைச் செலுத்தி பதிவு செய்துகொள்ள வேண்டும்.
04. பொருட்களை வழங்கிய தினம் தொடக்கம் ஆகக் குறைந்தது 45 நாள் கடன் வசதியொன்றை வழங்குநர்கள் பெற்றுத்தர வேண்டும்.
05. வழங்குநர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட மாட்டாது.
06. பதிவுக் கட்டணத்தை காசோலை மூலம் செலுத்துவதனால் 'செயலாளர், கங்க இஹலகோரளே பிரதேச சபை' பெயரில் அனுப்பப்பட வேண்டும்.

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

சீடா நிறுவனத்தில் பதிவு (பிரதேச மற்றும் நாடளாவிய ரீதியில்) பிரதேச சங்கங்கள், ஆட்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்.

01. வியாபார பதிவு மற்றும் இயலுமையை உறுதி செய்தல் பிரதேச செயலாளர் அலுவலகம்.
02. கடந்த 03 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான விபரம்
03. பதவி நிலையின மற்றும் உபகரணங்கள் தொடர்பான விபரம்.

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் நிபந்தனைகள்.**

I. ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் இயலுமையைக் கொண்டிருப்பதற்கான வருமான அறிவிப்பு.
II. பதிவு செய்து கொண்டுள்ள சுங்கங்கள், ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் இயலுமையைக் கொண்டிருப்பது தொடர்பாக, நிதியியல் அறிக்கையொன்றை நிறுவனத் தலைவரின் அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
iii. ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சங்கங்கள் ரூ. 2500.00 செலுத்தி கங்கஇஹல கோரளே பிரதேச சபையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**தலைவர்,**
**கங்க இஹல கோரளே பிரதேச சபை**
**குருந்துவத்த - கடவீதிய**
**2020.09.29**

## பாணந்துறை நகர சபை

## வழங்குநர்கள் – ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல் – 2021

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் / சேவைகள் வழங்குவதற்காக விரும்பும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2020.10.29ஆம் திகதி வரை கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 2020.10.29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், பாணந்துறை நகர சபை' பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் - ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல் - 2021' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். பணமாகச் செலுத்தும் போது அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை இந்த அலுவலகத்திற்குச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளல் அல்லது செயலாளர், பாணந்துறை நகர சபை பெயரில் காசோலையை மட்டும் அனுப்பிச் செலுத்த முடியும். காசோலை தீர்வானதன் பின்னரே பதிவு செல்லுபடியாகும். மேலதிக விபரங்கள் அலுவலகத்திற்கு வந்து அல்லது தொலைபேசி இலக்கம் 038 - 2249953 (கணக்குப் பிரிவு) 038 - 2232275, நீடிப்பு 222 (கணக்குப் பிரிவு) ஊடாக விசாரித்துக்கொள்ளலாம். 2021ஆம் வருடத்தில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை www.panadura.uc.gov.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| தொடர் இலக்கம் | பொருட்கள் வழங்கல் | ரூபா சதம் |
|---|---|---|
| 01. | கணனி அச்சுப்பொறி மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரத்திற்கான டோனர், ரிபன் ஆகியன. | 1200.00 |
| 02. | கணனி ரோனியோ இயந்திரம், டுப்ளோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் உட்பட்டதான துணைப்பாகங்கள். | 1200.00 |
| 03. | ஒலி பெருக்கிச் சாதனம் | 1200.00 |
| 04. | சீமெந்து, கட்டிடப் பொருட்கள், ஜீ.ஐ. குழாய், பீ.வி.ஸீ. குழாய் ஆகியன. (கனரக உபகரணங்கள்) | 1200.00 |
| 05. | மண், கருங்கல், மணல், சரளை, செங்கல், போன்ற நிர்மாணிப்புப் பொருட்கள் மற்றும் இறப்பர் விறகு | 1200.00 |
| 06. | கொங்கிரீட் தூண், முன் வார்ப்பு கொங்கிரீட் வரம்பு கற்கள், நிலத்தில் பதிக்கும் கற்கள், கொங்கிரீட் உருப்படிகள் ஆகியன. | 1200.00 |
| 07. | இமல்சன் தார், கோளாஸ். | 1200.00 |
| 08. | கட்டிடங்களுக்குப் பூசும் நிறப்பூச்சு வகைகள் மற்றும் அது சார்ந்த பொருட்கள் | 1200.00 |
| 09 | அரிந்த மரம் மற்றும் அனைத்து வகையான மரங்கள். | 1200.00 |
| 10 | கிருமி நாசினிகள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சுகாதாரம் சார்ந்த உற்பத்திகள் (விளக்குமாறு, தும்புத் தடி, தூரிகை, கால் துடைப்பான், பிரம்புக் கூடை, பிளாஸ்திக் குப்பைக் கூடை, விம், சவர்க்கார வகைகள், பைனோல், கையுறை, மற்றும் பொலித்தீன் பைகள் ஆகியன) | 1200.00 |
| 11 | புல் பற்றைகள் மற்றும் தும்புச் சோறு, பசளை, பூக்கன்று, சாடிகள் உட்பட்ட பூந்தோட்ட அலங்கரிப்புக்குத் தேவையான பொருட்கள். | 1200.00 |
| 12 | களை நாசினி மற்றும் பீடை நாசினி | 1200.00 |
| 13 | சீருடைத் துணிகள் மற்றும் பாதணி, சப்பாத்து, காலுறைகள் | 1200.00 |
| 14 | மழை அங்கி, கம் பூட்ஸ், உத்தியோகபூர்வ இலச்சினை, தோற் பட்டி மற்றும் அலுவலக பைகள் ஆகியன. | 1200.00 |
| 15 | திரைச் சீலை, ரெக்ஸின் வகைகள், கம்பளங்கள், ரேலிங்ஸ், கொக்கி துணைப் பாகங்கள் ஆகியன. | 1200.00 |
| 16 | கொடி வகைகள், கொடிப் பதாகைகள். | 1200.00 |
| 17 | மின்சார துணைப் பாகங்கள் (வீதி விளக்கு மற்றும் வீடுகள்) | 1200.00 |
| 18 | அலுவலக மின்சார உபகரணம் (மின் விசிறி, கேத்தல் ஆகியன) | 1200.00 |
| 19 | நாரிழைப் பொருட்கள் | 1200.00 |
| 20 | உராய்வுநீக்கி எண்ணெய் | 1200.00 |
| 21 | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் (போடோன் வகை வாகனம் உட்பட ஏனைய கெப், டிராக்டர், முச்சக்கர வண்டி உட்பட அனைத்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்.) | 1200.00 |
| 22 | டயர், ரியுப் மற்றும் வாகன பெட்டறி | 1200.00 |
| 23 | அச்சு வேலைகள் மற்றும் அச்சிடப்பட்ட மாதிரிப் படிவங்கள் | 1200.00 |
| 24 | புத்தகங்கள், சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்தல் | 1200.00 |
| 25 | காகிதாதிகள் | 1200.00 |
| 26 | முன் பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் உட்பட விளையாட்டுப் பொருட்கள் | 1200.00 |
| 27 | நீச்சல் தடாக துணைப்பாகங்கள், நீச்சல் துணைப் பாகங்கள் மற்றும் நீர் சுத்தம் செய்யும் இரசாயனப் பொருட்கள். | 1200.00 |
| 28 | முன் கலவை கொங்கிரீட் | 1200.00 |
| 29 | உருக்கு மற்றும் மர அலுவலக தளபாடங்கள் (மேசை, கதிரை, கோவை கெபினட், உருக்கு கபர்ட், இரும்புப் பெட்டகம் என்பன) | 1200.00 |
| 30 | நில அளவை மற்றும் வரைபட உபகரணங்கள். | 1200.00 |
| 31 | திகதி முத்திரை மற்றும் இறப்பர் முத்திரைகள் | 1200.00 |
| 32 | புல் வெட்டும் இயந்திரம் / மின் பிறப்பாக்கி இயந்திரம் ஆகிய உபகரணங்கள் | 1200.00 |
| 33 | எல் பீ. எரிவாயு | 1200.00 |
| 34 | தகனச்சாலை திருத்தவேலைகள் | 1200.00 |
| 35 | தீயணைப்பு உபகரண தொகுதி, எரிவாயு | 1200.00 |
| 36 | விரல் ரேகை பதிவு இயந்திரம் மற்றும் C.C.T.V. இயந்திரம் வழங்கல் மற்றும் சேவை செய்தல் | 1200.00 |
| 37 | வளிச்சீராக்கி இயந்திரம் வழங்கல் | 1200.00 |
| 38 | இடிதாங்கி | 1200.00 |

**சேவைகள்**

| | | |
|---|---|---|
| 01. | கணனி / நீர்க் குழாய் முறைமை மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல். | 1200.00 |
| 02. | வாகன மின்சார திருத்தவேலைகள் / காற்றுச் சீராக்கி திருத்தவேலைகள் | 1200.00 |
| 03. | வாகனங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் மற்றும் தகர வேலைகள் செய்தல் | 1200.00 |
| 04. | ஹைட்ரோலிக் ஹோஸ் மற்றும் கேபல்களின் முன் திட்டமிடல் மற்றும் திருத்தவேலைகள் | 1200.00 |
| 05. | நீச்சல் தடாகம் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் | 1200.00 |
| 06. | இலக்கத் தகடுகளை முன் தயாரிக்கத் திட்டமிடல் | 1200.00 |
| 07. | டிஜிடல் பெயர்ப் பலகை, பெனர் வர்ணம் தீட்டுதல் மற்றும் சைன் ரைட்ஸ். | 1200.00 |
| 08. | அலுவலக கட்டிடத்திற்கு நிறப்பூச்சு பூசுதல் | 1200.00 |
| 09. | பாவித்த டயர்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் | 1200.00 |
| 10. | கதிரை பின்னுதல் மற்றும் குஷன் வேலைகள் செய்தல் | 1200.00 |
| 11. | டயர் மற்றும் ரியுப் மீள் நிரப்புதல் | 1200.00 |
| 12. | சுருளும் கதவுகள் வழங்கல் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் பொருத்துதல் | 1200.00 |
| 13. | மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள் | 1200.00 |
| 14. | வாகனங்களின் இலகுவான உறைகள் / காபர்ட் தைத்தல் மற்றும் உயர்த்துதல் | 1200.00 |
| 15. | வாகனங்கள் காற்றுச் சீராக்கம் செய்தல் மற்றும் பராமரித்தல் | 1200.00 |
| 16. | வாகன பொடி பார்ட்ஸ் (நாரிழை) இட்டு வாகன திருத்தவேலைகள் செய்தல் | 1200.00 |
| 17. | வாகன ரேடியேட்டர் பராமரிப்பு | 1200.00 |
| 18. | வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் | 1200.00 |
| 19. | வாகனங்கள் மின்சார முறைமை மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் | 1200.00 |
| 20. | வாகனங்கள் சேவை செய்தல் | 1200.00 |
| 21. | வாகன பெட்டறி ரிசார்ஜ் செய்தல் | 1200.00 |
| 22. | டயர்களுக்கு பெச் ஒட்டுதல் | 1200.00 |
| 23. | கிளச் பிளேட், பிரஷர் பிளேட், லைனர்களை மீளமைத்தல் | 1200.00 |
| 24. | நீர்ப் பம்பிகளை வாடகைக்கு அமர்த்துதல் | 1200.00 |
| 25. | பளஞ்சி செட் வாடகைக்கு அமர்த்துதல் | 1200.00 |
| 26. | பலகை அரிதல் மற்றும் சீராக்கல் | 1200.00 |
| 27. | வீதி அழுத்தும் கருவி, JCB, டிப்பர் வாடகைக்கு அமர்த்துதல் | 1200.00 |
| 28. | நினைவுச் சின்னம் உட்பட்டதாக கல் செதுக்கல்கள் | 1200.00 |
| 29. | சட்ட அறிவுரைகள் மற்றும் சட்டத்தரணி உதவி பெற்றுக்கொள்ளல். | 1200.00 |
| 30. | நில அளவை சேவைகள் பெற்றுக்கொள்ளல். | 1200.00 |
| 31. | வகைப்படுத்திய கழிவுப் பொருட்களைக் (பிளாஸ்திக், கார்ட்போர்ட், கண்ணாடி ஆகியவை) கொள்வனவு செய்தல் | 1200.00 |
| 32. | மரம் வெட்டுதல், கிளைகளை அகற்றுதல் | 1200.00 |
| 33. | வெல்டிங் வேலைகள் / இரும்பு வெட்டுதல் / தகடு வெட்டுதல் மற்றும் வளைத்தல். | 1200.00 |
| 34. | உக்கிப் போகாத திண்ம கழிவுப் பொருள் சேகரித்தல் | 1200.00 |
| 35. | அலுமினியப் பொருத்தல்கள் மற்றும் பராமரிப்பு வேலைகள் | 1200.00 |
| 36. | மொழி பெயர்ப்பாளர் (தமிழ் / ஆங்கிலம்) | 1200.00 |
| 37. | வாகனங்கள் வழங்கல் / இயந்திரங்கள் வழங்கல் | 1200.00 |
| 38. | உணவு பானங்கள் வழங்குதல் | 1200.00 |
| 39. | பூந்தோட்ட அலங்கரிப்பு | 1200.00 |
| 40. | கடைசல் பட்டறை / பட்டறைகள் | 1200.00 |
| 41. | ஆயுர்வேத மருந்து நிலையங்களுக்கு மருந்து வழங்கல் | 1200.00 |
| 42. | புகைப்படம் தயாரித்தல் மற்றும் அடையாள அட்டை தயாரித்தல் | 1200.00 |
| 43. | எலிகள், கறையான் மற்றும் கொறிக்கும் விலங்குக் கட்டுப்பாடுகள் (Pest Control) | 1200.00 |
| 44. | பத்திரிகை அறிவித்தல்களைப் பிரசுரித்தல் | 1200.00 |
| 45. | தகனச்சாலை திருத்தவேலைகள் | |

**ஒப்பந்தக்காரர்கள்:**

ICTAD பதிவு உள்ள கட்டிட மற்றும் வீதி ஒப்பந்தக்காரர்கள் 4000.00

**நிபந்தனைகள்:**

1) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்காக வெவ்வேறாகக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
2) 2021ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொதுவாக விலை மனுக்கள் கோரப்படுவதுடன், சமர்ப்பிக்கப்படும் விலைகளை பொதுவாக ஒரு வருட (12 மாத) காலத்திற்கு மாற்றம் செய்யாமல் நிலையாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.
3) பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொதுவாக விலை மனுக்கள் கோரப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் அதற்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சபைக்கு உரித்துடையதாகும்.
4) பல்வேறு வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படும் போது நிராகரிப்பதற்கான காரணம் காட்டாமல் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யும் உரிமை சபைக்கு உரித்துடையதாகும்.
5) கோரப்படும் போது விலை மனுக்கள் சமர்ப்பிப்பவர்களும் உரிய நியமக் குறியீடுகளின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு முடியாமல் போகின்றவர்களும் வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
6) வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் உரித்துடைய நியமக் குறியீடுகளின் பிரகாரம் உள்ளதென உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மட்டுமே கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
7) சபைக்கு வழங்கல் செய்வதற்கு முற்பணம் கோருகின்ற வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்படமாட்டாது. ஆகக் குறைந்தது 60 நாட்கள் காலப் பகுதிக்கு சபைக்கு கடன் வசதிகள் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். வெட் வரிக்கு பதிவு இருப்பின் பதிவுச் சான்றிழ் பிரதியொன்று சமர்ப்பித்தல் வேண்டும். பாணந்துறை நகர சபையின் வெட் வரி பதிவு இலக்கம் 409120890-7000 ஆகும். வழங்கல் நடவடிக்கைகள் செய்யும் போது நகர சபை கட்டளைச் சட்டம், நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாகவும், அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படுகின்ற சுற்றறிக்கை, அறிவுரைகளின் பிரகாரம் நகர சபையினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.
8) நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் கட்டளையிடப்பட்ட தொகையை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.

**பாணந்துறை நகர சபையில் பதிவு செய்யும் வழங்குநர்களுக்கு இருக்க வேண்டிய மூலப் பிரமாணங்கள்.**

01. கூட்டுத்தாபனமொன்றாயின் கூட்டுத்தாபனமொன்றாக சட்டரீதியாக்கப்பட்டதற்காக வழங்கும் சான்றிதழ்.
02. தனி நபர் வியாபாரமொன்றாயின் பதிவுச் சான்றிதழ்
03. கம்பனியொன்றாயின் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்
04. இதற்கு முன்னர் ஐந்து அரசாங்க நிறுவனங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கியிருத்தல் வேண்டும்.
05. வாகன திருத்தவேலைகள் சம்பந்தமாக மேல் மாகாண சபையில் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் கராஜ் ஒன்றாக இருத்தல் விசேட தகுதியாகும் என்பதுடன், ஐந்து (05) அரசாங்க நிறுவனங்களுக்காவது சேவை வழங்கியுள்ள அனுபவமுள்ள நிறுவனமொன்றாக இருத்தல்.
06. உத்தரவாதமுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான உத்தரவாத காலத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. வேறு விசேட தகைமைகள் இருப்பின் குறிப்பிடவும்.

**தலைவர்**

**பாணந்துறை நகர சபை.**
**பாணந்துறை நகர சபை அலுவலகத்தில்.**

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# பெறுகை அறிவித்தல்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# செயலக உணவுக்கூடத்தை நடாத்திச் செல்வதற்காக சேவை வழங்குனர் ஒருவரின் பெறுகை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உணவுக்கூடத்தை ஒரு (01) வருடத்திற்கு நடாத்திச் செல்வதற்கான சேவை வழங்குனர் ஒருவரின் பெறுகைக்காக பொருத்தமான சேவை வழங்குனர்களிடமிருந்து 2020 ஒக்ரோபர் 22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். மதிய உணவானது buffet style/ counter type வகையில் பரிமாறப்படல் வேண்டும்.

கொழும்பு-07, வோட் பிளேஸ், 20 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயலகத்தின் புதிய சபை அறையில் 2020 ஒக்ரோபர் 22 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

2020 ஒக்ரோபர் 08 ஆம் திகதியிலிருந்து 2020 ஒக்ரோபர் 22 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவைச் (ஓராயிரம் ரூபா) பணக்கொடுப்பனவாக செலுத்தியமைக்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்கான பிரதி செயலாளர் நாயகத்திடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

விலைமனுப்பிணையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் 20,000 ரூபா (இருபதினாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்தப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணைக்காக செலுத்தப்பட்ட பணக்கொடுப்பனவிற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2020 ஒக்ரோபர் 22 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''உணவுக்கூடத்திற்கான சேவை வழங்குனர் ஒருவரின் பெறுகை'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல.: 20, வோட் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-07, வோட் பிளேஸ், 20 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிருவாகத்திற்கான பிரதி செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக விலைமனுதாரர்களினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு, 011-2685183 என்ற தொலைபேசி எண்ணினூடாக பொது நிர்வாகத்திற்கான பிரதி செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல.: 20, வோட் பிளேஸ்,**
**கொழும்பு-07.**
**2020 ஒக்ரோபர் 08 ஆம் திகதியன்று.**

# இலங்கை வங்கி

## ஏல விலை கூறல்கள் கோரல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்குறிப்பேடுகளை அச்சிட்டு வழங்க இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அச்சகதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை கூறல்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திர இல | P/PROC/2020/159 |
| பண்டம் / சேவைகள் விபரம் | 2021ஆம் ஆண்டுக்கான இலங்கை வங்கிக்குரிய 100,000 குறிப்பேடுகளை வழங்கல் |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா. 8,100/= (ரூ. 7,500/- + ரூ. 600/- VAT) |
| சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா. 150,000/= |
| கேள்விப்பத்திர ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2020.10.22 1500 மணி வரை |
| கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியும் நேரமும் | 2020.10.23 1000 மணி வரை |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2020.10.16 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகம் 14ஆம் தளம் |

1. **ஏல விலைகூறலை மதிப்பிடுவதற்கு கவனத்திற்கொள்ளும் பொருட்டு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**

   i) இலங்கையில் அலுவலகக் குறிப்பேடுகள் / நாட்குறிப்பேடுகளை அச்சிட்டு வழங்குவதில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

   ii) கடந்த 02 வருடங்களில் இலங்கையில் அங்கீகாரம்பெற்ற நிறுவனம் ஒன்றிற்கு நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 40,000 அலுவலகக் குறிப்பேடுகள் / நாட்குறிப் / பேடுகளை ஒரே கொள்வனவு ஆணையில் வழங்கியிருத்தல்

2. விலைகூறல்களைத் தெரிவிக்க ஆர்வமுடையோர் விலைகோரல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. 8,100/- மாத்திரம் செலுத்தி எந்தவொரு வேலை நாளிலும் 0900 மணி முதல் 1500 மணிவரை இலங்கை வங்கி 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.

3. முத்திரையிட்ட விலைகூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து மேற்குறிப்பிட்ட பெறுமதிக்கு பெறப்பட்டதும் 23.10.2020 இலிருந்து 19.02.2021 வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்துடன் / பிணை முறியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விலை முறிக்குப் பதிலாக பண வைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2204261, 2204270, 2430268

# நுவரெலியா மாநகர சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் 2021

2021ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நுவரெலியா மாநகர சபையில் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் ஒப்பந்தக்காரர்கள்/ உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள், முகவர்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு நபர்களிடமிருந்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்களை 2020-12-31ஆம் திகதிக்கு முன்னர் மாநகர ஆணையாளர் மாநகர சபை நுவரெலியா என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம். அல்லது நேரில் கொண்டு வந்து மாநகர சபையின் வழங்கல் பிரிவிற்கு ஒப்படைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2021ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' என குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்)

02. பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா (அரச வரிகளுடன்) மீளளிக்கப்படாத கட்டணத்தை மாநகர சபை காசாளருக்குச் செலுத்துவதன் பேரில், மாநகர ஆணையாளர் நுவரெலியா என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை, காசுக் கட்டளை மூலம் அல்லது மக்கள் வங்கியில் மாநகர சபையின் 134-1002-400-17-534 சேகரிப்புக் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்துப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தொகை மீளளிக்கப்பட மாட்டாது.

03. நுவரெலியா மாநகர சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னர் நுவரெலியா மாநகர சபையின் வழங்குநராக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

04. வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய தரத்துக்கு மற்றும் மாதிரிகளுக்கு அமைய இருத்தல் வேண்டும். மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்ளாத மற்றும் மூன்று முறை விலை கோரலுக்கு பதிலளிக்காதிருக்கின்ற வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

05. மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

    05.1 வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்

    - பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக தேவையான வேளைகளில் ஏனைய விலைக்கோரல்களின் மூலம் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்தச் சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.
    - தேவைப்படும் வேளைகளில் மாதிரிகளை (சாம்பல்) சமர்ப்பிக்காத மற்றும் கட்டளையின் பிரகாரம் உரிய வேளையில், தரமான, உயர்ந்த குணவியல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படலாம்.
    - பொருட்கள் வழங்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 45 நாட்கள் கடன் வசதி வழங்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.
    - வழங்குநர்களுக்கு முற்பணம் வழங்கப்படமாட்டாது.

**விடய இலக்கம் 01**
**அலுவலக உபகரணங்கள் வழங்குதல்**

01. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் (மரம், இரும்பு மற்றும் பிளாஸ்திக்)
02. கணனி மற்றும் கணனி அச்சுப் பொறி, புகைப்படப் பிரதி இயந்திரம் தட்டச்சு ரோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் ஸ்கேனர் இயந்திரம்
03. நேரக் பதிவு இயந்திரம் விரல் ரேகை அடையாள இயந்திரம் வழங்குதல்
04. கெமரா, புரொஜெக்டர் மற்றும் வீடியோ உபகரணங்கள் (தொலைக்காட்சி, சீ.டீ/டீ.வீ.டீ. பிளேயர் சீ.டீ/டீ.வீ.டீ ரெக்கோடர் போன்றன வழங்குதல்)

**விடய இலக்கம் 02**
**அலுவலக பாவனைப் பொருட்கள் வழங்குதல்**

05. காகிதாதிகள், கணனி அச்சிடல் பொருட்கள் மற்றும் கணனி பாவனைப் பொருட்கள் என்பன வழங்குதல்
06. அலுவலக அச்சு வேலைகள் படங்கள் சட்டமிடல் மற்றும் விளம்பரப்பலகை வரைதல்
07. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர் பலகை, பதக்கங்கள் மற்றும் விருதுகள், சின்னம், நினைவுப்படிகம் மற்றும் எழுத்தாக்கங்கள் வழங்குதல்
08. சீருடைக்கான சீருடைத்துணி, அலுவலக மேசைத்துணி மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல்
09. நூல் நிலையப் புத்தகங்கள் மற்றும் கிரந்தங்கள் வழங்கல்
10. தைக்கப்பட்ட விளையாட்டு உடைகள் வழங்குதல்
11. விளையாட்டுப் பொருட்கள் / மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்

**விடய இலக்கம் 03**
**அலுவலக பாவனைப் பொருள் சேவைகளை வழங்குதல்**

12. கணனி மற்றும் புகைப்படப்பிரதி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல்
13. கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்குதல்
14. பாதுகாப்பு சேவை வழங்குதல்
15. வாடகை அடிப்படையில் போக்குவரத்து சேவை மற்றும் நிலப் பாவனை வாகனங்கள் (Land Vehicle) வழங்குதல்
16. அலுவலக உபகரண திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள்
17. சுத்திகரிப்புச் சேவை மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல்
18. உள்ளக தொலைபேசி சேவை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
19. பயிற்சி பெற்ற, பயிற்சி பெறாத மனிதவலு வழங்குதல் (மேசன், தச்சர், தொழிலாளர் போன்றன)
20. வீடியோ பதிவு செய்தல் மற்றும் புகைப்படம் அச்சிடல்
21. ஒலிபெருக்கி முறைமைகளை வாடகைக்கு வழங்குதல்
22. மின்சார உபகரணங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள்
23. உருக்கியொட்டும் வேலைகள்
24. மின்சார தொழில்நுட்ப சேவை
25. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (டிராக்டர்/ பயணிகள் வாகனம்/ டிப்பர்/ கொம்பக்டர்/ மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
26. இயந்திரம் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்

**விடய இலக்கம் - 04**
**உணவுப் பொருட்கள் வழங்குதல்**

27. சிற்றுண்டிகள், பான வகைகள் குடிநீர் மற்றும் உணவுப்பான சேவைகள் வழங்குதல்

**விடய இலக்கம் - 05**
**துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் வழங்குதல்**

28. மேல்நாட்டு மருந்து வகைகள் வழங்குதல்
29. ஆயுர்வேத மருந்து வகை (உலர்ந்த மருந்து, உற்பத்தி செய்யப்பட்ட மருந்து, பச்சை மூலிகைகள், எண்ணெய் வகை வழங்குதல்)
30. மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்
31. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சலவை செய்பவை (சவர்க்கார வகை, துப்புரவேற்பாட்டுத் திரவ வகைகள், சுத்தம் செய்யும் திரவ வகைகள், சலவை தூள் வகைகள், நறுமண வகைகள், பீலீச்சின் தூள் (குளோரின்) மற்றும் சோடா வழங்குதல்

**விடய இலக்கம் - 06**
**விவசாயம் மற்றும் பூங்கா அலங்காரப் பொருட்கள் வழங்குதல்**

32. விவசாய நடுகைப் பொருட்கள் (கன்று வகை மற்றும் விதை வகை)
33. விவசாய இரசாயன பொருட்கள் வழங்குதல் (மருந்துகள், உரம், கிருமிநாசினி போன்றன)
34. செயற்கை இரசாயன பூக்களினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள்
35. புற்றரை மற்றும் தரை அலங்காரப் பொருட்கள்
36. கொம்போஸ்ட் உரம், சாணி உரம், இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிப் பொருட்கள்

**விடய இலக்கம் - 07**
**கைத்தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல்**

37. நீர்க்குழாய் வேலைகளுக்கான உபகரணங்கள் (பி.வி.சி. துணையுறுப்புக்கள், HDPE நீர்க் குழாய் மற்றும் துணைப்பாகங்கள், ஜீ.ஐ, டீ.ஐ/ காஸ்ட் அயன் மற்றும் பித்தளை குழாய் துணைப்பாகங்கள்)
38. வீதி விளக்குகளுக்குத் தேவையான உபகரணங்கள் (டியுப் லயிட், சோக் (மின்சார வயர்கள் சகிதம்), மேர்க்கியூரி பல்ப், சோடியம் பல்ப், ஆர்ம் சகிதம் அடி 4 – 40W டியூப் லைட் சோக் சகிதம், அடி 2 – 20W டியூப் லைட் சோக் சகிதம், மின்சார சோக் 40W வயர் சகிதம் போன்ற துணையுறுப்புக்கள்)
39. இலகு பொறியியலாளர் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
40. அரிந்த மரங்கள் வழங்கல் (மர வகைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்)
41. சீலர், வூட்பினிஷ், தினர், பூச்சு வகைகள் வழங்குதல்
42. பாதுகாப்பு உடைகள், தலைக்கவசம் மற்றும் பாதணிகள்
43. பிணைச்சல் இரும்புத்தகடுகள் வழங்குதல்
44. அலுமினியம் இரும்பு சார்ந்த உற்பத்திகள் வழங்குதல்
45. ஹியூம் குழாய்கள்/ கொங்கிறீட் தூண்கள்/ எல்லைக் கற்கள்/ சீமெந்து/ புளொக் கல்/ கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் மற்றும் கொங்கிறீட் கலவைகள்

**விடய இலக்கம் - 08**
**கட்டிடப் பொருட்கள் வழங்குதல்**

46. கட்டிட உபகரணங்கள், நிர்மாணப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருத்தும் உபகரணங்கள் வழங்குதல்
47. நிறப் பூச்சு வகைகள் வார்னிசு மற்றும் பூசுவதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்
48. மின்சார இணைப்பு உபகரணங்கள் வழங்கல்
49. நிர்மாணத்துக்காக தேவையான இரும்பு, உருக்கு மற்றும் அலுமினியம்
50. சீமெந்து

**விடைய இலக்கம் 09**
**வீதி அபிவிருத்தி மற்றும் திருத்தவேலைகளுக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்**

51. கருங்கல், ஏ.பீ.சி, மெடல் மற்றும் மணல் வழங்குதல்
52. சீமெந்து வழங்குதல்
53. தார் மற்றும் திரவத்தார் (சீ.ஆர்.எஸ். மற்றும் சீ.எஸ்.எஸ்.) வழங்குதல்
54. வீதிக் குறியீடு பூச்சு வழங்குதல்
55. கொங்கிரீட் உற்பத்திகள் மற்றும் இன்டர்லொக் கற்கள்

**விடய இலக்கம் 10**
**கண்காட்சிகளை நடாத்துவதற்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல்**

56. காட்சி கூடங்கள் மற்றும் மேடைகள்
57. மின்சார அலங்கார வேலைகள்
58. ஒலிபெருக்கி முறைமை
59. கதிரை மேசை மற்றும் உற்சவப் பொருட்கள்

**விடய இலக்கம் 11**
**குப்பை போக்குவரத்து உபகரணங்கள் வழங்குதல்**

60. குப்பை போக்குவரத்து டிராக்டர் மற்றும் டிரேலர் வழங்குதல்
61. குப்பை போக்குவரத்து கைவண்டிகள் வழங்குதல்
62. குப்பை சேகரிப்பதற்காக பிளாஸ்திக் பொருட்கள் வழங்குதல்
63. குப்பைகளை சேகரித்தல் மற்றும் போக்குவரத்து சேவை அடங்கலான துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் திருத்தவேலைகள்

**விடய இலக்கம் 12**
**போக்குவரத்து பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்**

64. டயர், டியூப் மற்றும் பட்டறிகள் வழங்குதல்
65. வாகன உதிரிப்பாகங்கள் (வான், மோட்டார் சைக்கிள்கள், டிராக்டர், கல் உருளைகள் உட்பட அனைத்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்)
66. தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல் (பொருத்துதல் உட்பட)
67. வாகனத் திருத்தவேலைகளைச் செய்தல்
68. வாகனங்களை சேர்விஸ் செய்தல்

**விடய இலக்கம் 13**
**நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத தொழிலாளர் சேவைகளை வழங்குதல்**

- (ஒப்பந்தக்காரர்கள், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு அடிப்படையாகக் கொள்ளப்படும்)

மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களை மாநகர கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல. (052-2222275/052-2222183)

**எஸ்.பி.கே. போதிமான்ன,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நுவரெலியா.**

## 2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் நிறுவனத்தின் பெயர்:..........................................
2. நிறுவனத்தின் முகவரி:..........................................................
3. தொலைபேசி இலக்கம் நிலையானது: ........... கையடக்கம்...........
4. மின்னஞ்சல் முகவரி: ..........................................................
5. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடய இலக்கம்:........................

| விடய இலக்கம் | தொடர் இலக்கத்துடன் மற்றும் பொருள் / சேவை |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |

6. வழங்க இயலுமான வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளதாயின் அது தொடர்பான விபரங்கள்:..................................
   ..............................................................................
7. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:......................................
8. வெட் (VAT) வரி இலக்கம்:..........................................................
   (சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி: ...........................................................................
   (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளின் கீழ் குறித்த பொருள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு கட்டுப்படுகிறேன் என உறுதி கூறுகிறேன்.

**கையொப்பம்:**.......................................................
**பெயர்:** .......................................................
**இறப்பர் முத்திரை:**...............................................

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

107
**டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

19-4102 Toyota starlet, 1992, Car. கூடிய விலைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 542958, 0714515236. 062198

117

**வேன்கள் விற்பனைக்கு**

51-2771 Toyota hiace, 1990, கூடிய விலைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958, 0714515236. 062172

118

**ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

WP PQ-5645 Toyota hilux cab, 2010, கூடிய விலைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542958, 0714515236. 062201

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

NW BII-9507 TVS apache 160, motor cycle. கூடிய விலைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210810. 062200

## காணி/தோட்டம்

612

**கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்**

கொழும்பு 14, கிறேண்ட்பாஸ், ஸ்டேஸ் வீதி, இல. 71 இலுள்ள பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு காணி தரை மட்டமாக்கப்படுகிறது. தளத்தை பரீட்சிப்பதற்காக, 0727744244 என்ற மொபைல் இலக்கம் மூலம் சிராஸ் அல்லது திரு. ஃபியாஸ் 0722587587 அவர்களை அழைத்து ஒரு appointment ஐ ஒதுக்கிக் கொள்ளுங்கள் (hassans@sltnet.lk) 061942


# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)**
**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## பன்னல மற்றும் வகவத்த அஸ்போல்ட் பொறித்தொகுதிக்கு காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரல் — 2020/2021

இந்த அதிகார சபைக்குச் சொந்தமான பன்னல மற்றும் வகவத்த அஸ்போல்ட் பொறித்தொகுதிக்கு காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் (IRCSL) பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி சேவை வழங்குநர்கள், அவர்களின் முகவர்கள்/ தரகர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2020-10-08ஆம் திகதியிலிருந்து 2020-10-19ஆம் திகதி மு.ப. 8.30 இலிருந்து பி.ப. 2.45 மணி வரை 1000.00 + VAT ரூபா மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2020-10-20ஆம் திகதி பி.ப. 2.00 மணி என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

04. இந்நிகழ்வில் காப்புறுதி சேவை வழங்குநர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கூட்டுத் திட்டத்தை மேம்படுத்துவதற்கு கூறுவிலைக்கான கோரல்

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி(முகவரிகள்) பின்வருமாறு:

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைக் குழு,**
**வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை,**
**இரட்டைபெரியகுளம்,**
**வவுனியா.**
**தொலைநகல் இல.: 024-2221427.**

# பொதுமக்களின் கருத்துரைகளுக்கான
# இலங்கை கட்டளைகள் வரைவு

**1) இறால் குஞ்சு உற்பத்திக்கான நீர் உயிரின வளர்ப்பு சிறந்த நடைமுறைகளுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு. (DSLS: ............ : ............ )**

**2) நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான நடைமுறை குறிப்பீட்டிற்கான இலங்கை கட்டளைகள் வரைவு (முதலாம் திருத்த) (DSLS 686 : ...............)**

மேலேயுள்ள வரைவு கட்டளைகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்தும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்தும் கருத்துரைகளை இலங்கை கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்த வரைவு கட்டளைகள் இறுதி வடிவம் பெற முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துரைகள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான குழுவினால் பரிசீலிக்கப்படும்.

மேலேயுள்ள வரைவு கட்டளைகளின்/ திருத்தங்களின் பிரதிகள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் விஞ்ஞான நியமமாக்கல் பிரிவிலிருந்து அல்லது தகவல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

2020-12.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் என்னை வந்தடைதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**
**இல. 17, விக்டோரியா இடம்**
**எல்விட்டிகல மாவத்தை**
**கொழும்பு - 08.**

**தொலைபேசி : 011-2671567 – 72**
**தொலைநகல் : 011-2671579**
**மின்னஞ்சல் : dg@slsi.lk**

## இலங்கை கட்டளைகள் நிறுவனம்
## வர்த்தக அமைச்சு

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6122(MP) | Spares for Cummins QSX 15 Engines Fitted with Sumitomo Transfer Cranes | 80,000.00 | 1,000.00 | 05-11-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6118(EL) | LED Light Fittings for STS Cranes at JCT | 500,000.00 | 12,500.00 | 05-11-2020 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6121(MP) | Wire Ropes for IHI Traveling JIB Crane | 20,000.00 | 1,000.00 | 05-11-2020 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/20/PT/16/020 | Supply, Installation and Commissioning of Gyro Compass for the Grab Dredger Diyakowulla | 35,000.00 | 1,000.00 | 22-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/20/003 | 02 Nos. Led Type Port Entrance Light for Colombo Port | 40,000.00 | 1,000.00 | 22-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/08/008C | 09 Nos. Dot Matrix Printer - 132 Column | 18,000.00 | 1,000.00 | 23-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/19/PT/04/063 | Gold Coins - 22 KT with SLPA Logo | 487,000.00 | 3,500.00 | 23-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/16/030 | 39 Nos Non - Inverter Air Conditioner Split Type | 43,000.00 | 1,000.00 | 26-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/01/012 | 01 No. Engine Driven Screw Type Air Compressor | 25,000.00 | 1,000.00 | 26-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/09/053 | Spares for Tadano 10 Ton Mobile Crane CR 30-TR-100 M - 1 | 40,000.00 | 1,000.00 | 26-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/056 | 120 Nos. of 600X9 10 -12 PR Tyres for 2.5T Fork Lift Trucks | 65,000.00 | 1,000.00 | 27-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/16/053 | Spares for Toyota KDH Vans | 30,000.00 | 1,000.00 | 27-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/14/054 | Supply of CU-XLPE/SW/A/PVC Cable 4X95 SQMM, 600/1000V | 20,000.00 | 1,000.00 | 28-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/19/PT/20/056 | 100 Nos. Sealed Type Battery 12V 200 AMPH (Semi- Maint. Free) | 45,130.00 | 1,000.00 | 28-10-2020 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/20/PT/16/051 | 10 Nos Roller Chain Supper 160 102L for Gantry Travel | 15,000.00 | 1,000.00 | 29-10-2020 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும் படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2020 ஒக்டோபர் 09ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2482638, 2483024**
**தொலைநகல் இல. 2381652, 2370443**

# ரம்புக்கனை பிரதேச சபை

## 2021ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2021ஆம் வருடத்திற்கு ரம்புக்கனைப் பிரதேச சபைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விருப்பம் உள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2020.11.20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் **'தவிசாளர், ரம்புக்கனை பிரதேச சபை, ரம்புக்கனை'** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தை இடுகின்ற காகித உறையின் இடப்பக்க மேல் மூலையில் **'2021ஆம் வருடத்திற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொருட்கள் மற்றும் சரக்குகள்**

| வகை இலக்கம் | வழங்க வேண்டிய பொருட்கள்/ சரக்குகள் |
|---|---|
| 1 | அனைத்து காகிதாதிகள் (CR புத்தகம், பேனைகள், பென்சில், காகித வகைகள், கோவைகள், கணனி (Calculator) ஆகியன உள்ளடங்கலாக) |
| 2 | அலுவலகத் தளபாடங்கள் (மரம்/ பிளாஸ்டிக்/ உருக்கு) |
| 3 | வீதி வெளிச்சமூட்டும் நடவடிக்கைகளுக்குத் தேவையான வீதி விளக்குகள் உட்பட அனைத்து மின் துணைப்பொருட்கள் |
| 4 | மின் உபகரணங்கள் (மின் விசிறிகள், மின் கேத்தல், குளிர்சாதனப் பெட்டி) |
| 5 | அச்சு இயந்திரங்கள் (நிழற் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம், டுப்ளோ இயந்திரம் என்பவை உள்ளடங்கலாக) |
| 6 | அனைத்து வகையான அச்சு இயந்திரங்களுக்குமான டோனர், உதிரிப்பாகங்கள் மற்றும் காட்ரிஜ் |
| 7 | கணனி இயந்திரங்கள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (கணனி வன்பொருள், கணனி மென்பொருள் உள்ளடங்கலாக) |
| 8 | அனைத்து கட்டட நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாணங்களிற்குத் தேவையான பொருட்கள் (செங்கல், சீமெந்து, ஆற்று மணல், மெட்டல், கருங்கல், எஸ்பெஸ்டஸ் தகடுகள், ஓடு, சீமெந்துக் கற்கள், சரளைக்கல் என்பன உள்ளடங்கலாக) |
| 9 | வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான பொருட்கள் (தார் மற்றும் பிறீ மிக்ஸ்) |
| 10 | மரங்கள் (பலகை, சட்டரின் பலகை, தளக்குறுக்குக் கட்டை பரால) அடங்கலாக |
| 11 | பாதணிகள், சப்பாத்துக்கள் தோற் பொருட்கள் மற்றும் அலுவலக தோற் பைகள் |
| 12 | மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் (தடுப்பூசிகள், சிறிஞ்சர், அளவைச் சாடி, ஆயுர்வேத மருந்துகள் என்பன உள்ளடங்கலாக) |
| 13 | இரும்புக் கடைப் பொருட்கள் மற்றும் வர்ணப் பொருட்கள் |
| 14 | இலக்கத் தகடுகள் மற்றும் பட்டி வகைகள் (ஆதனவரி, மிதி வண்டி, மிருகங்கள்) |
| 15 | வீதிப் பராமரிப்பிற்குத் தேவையான உபகரணங்கள் (நீளமான கத்திகள், கத்தி, மண்வெட்டி, முள் கரண்டி, வாரிகள், அரிவாள் என்பன உள்ளடங்கலாக) |
| 16 | வீதிச் சுகாதார தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் (மழைக் கவசம், கையுறைகள், முகக்கவசங்கள், தலைக் கவசம், பிளாஸ்டிக் கண்ணாடி என்பன உள்ளடங்கலாக) |
| 17 | சுகாதார மற்றும் துப்புரவாக்கல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், (தும்புத்தடி, கூட்டுமாறு, சவர்க்காரம், மலசலகூடத் தூரிகைகள், துடைப்பான், தொற்று நீக்கிகள், தூய்மைப்படுத்தும் மருந்துகள், நறுமணத் திரவியங்கள் என்பவை உள்ளடங்கலாக) |
| 18 | PVC பொருத்துக்கலங்கள், DI குழாய் பொருத்துக் கலங்கள், GI குழாய் பொருத்துக் கலங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, குப்பைத் தொட்டிகள், கொம்போஸ்ட் தொட்டிகள் |
| 19 | தரை ஓட்டு வகைகள், மலசலகூட, சிறுநீர் கழிக்குமிட கொமட் ஆகியன உட்பட அனைத்து பீங்கான்/ மட்பாண்ட/ மட்பாண்ட உற்பத்திகள் |
| 20 | விழாக்களிற்காக உணவு வகைகள் (பகல் உணவு/ சிறு உணவுகள்) |
| 21 | சங்கீத உபகரணங்கள், முன் பள்ளி உபகரணங்கள், முன் பள்ளி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதான உபகரணங்கள் |
| 22 | குளிரூட்டல் இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கி |
| 23 | அனைத்து வலுப்படுத்தப்பட்ட குழாய்கள் உட்பட கொங்கிரீட் உற்பத்திகள் |
| 24 | பூச்சி கொல்லிகள், கிருமி நாசினிகள் உட்பட அனைத்து இரசாயன உற்பத்திகள் |
| 25 | சீருடைகளுக்கான புடைவை, சாரிகள் மற்றும் திரைச் சேலை வகைகள் |
| 26 | தோட்ட அலங்கார நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் (அழகுபடுத்தக்கூடிய தாவரங்கள், உர வகைகள் உட்பட) |
| 27 | உரப் பைகள் மற்றும் பொலித்தீன் பைகள் |
| 28 | வாசிகசாலை புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்தித் தாள்கள் |
| 29 | ஹட் வகைகள் (கெனப்பி, தகர ஹட்) |
| 30 | கற் பெயர்ப் பலகைகள் மற்றும் ஞாபகார்த்த பெயர்ப் பலகைகள் |
| 31 | கண்ணாடி உற்பத்திகள் மற்றும் கண்ணாடி தகடுகள் |
| 32 | தொலைபேசி முறைமை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், ஒலி ஒளிப் பதிவு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புப் புகைப்படக் கருவி முறைமைகள், விரல் அடையாள இயந்திரங்கள் |
| 33 | தீயணைப்பு உபகரணத் தொகுதிகள் மற்றும் பாதுகாப்பு அங்கிகள் |
| 34 | அலுவலக உள்ளக தொலைபேசி முறைமைகள் |
| 35 | (கெப் வண்டி, உழவு இயந்திரம், கை உழவு இயந்திரம், முச்சக்கர வண்டி, குரூ கெப் வண்டி, பெகோ இயந்திரம், டிப்பர் இயந்திரம்) உட்பட அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர், டியூப், பற்றரி உட்பட அனைத்து உதிரிப்பாகங்களும்) |

**சேவைகள்**

| வகை இலக்கம் | வழங்கக்கூடிய சேவைகள் |
|---|---|
| 36 | ஆவணங்கள், பத்திரங்களின் அச்சு நடவடிக்கைகள் |
| 37 | பொலித்தீன் பைகள், உரப் பைகள் அச்சு நடவடிக்கைகள் |
| 38 | டிஜிட்டல் பதாகைகள், அறிவித்தல் பலகைகள், பெயர்ப் பலகைகள், கட்அவுட் பதாகைகள், ஸ்டிகர் போன்றவை உள்ளடங்கலான அச்சு நடவடிக்கைகள் |
| 39 | நில அளவை சேவைகள் |
| 40 | வழக்கறிஞர் சேவைகள் |
| 41 | திறமை பெற்ற திறமை பெறாத தொழிலாளர்களை வழங்குதல் |
| 42 | அலுவலகத் தளபாடங்களை திருத்தம் செய்தல் மற்றும் பிரம்பினால் கதிரைகளை முடைதல் |
| 43 | அனைத்து வகையான குஷன் வேலைகள் மற்றும் அலுவலகத்திற்கு திரைச் சேலை வழங்குதல் |
| 44 | திரைச் சேலைகள் கழுவும் நடவடிக்கைகள் மற்றும் சலவைச் சேவைகள் |
| 45 | கட்டடத் திருத்தம் மற்றும் வண்ணம் பூசுதல் |
| 46 | மொழி பெயர்ப்பு நடவடிக்கைகள் |
| 47 | கணனி, நிழற் பிரதி இயந்திரம், அச்சு இயந்திரம் உட்பட அலுவலக இயந்திரங்கள், உபகரணங்களை திருத்தம் செய்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் |
| 48 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல், (பெகோ இயந்திரம், சாலை உருளை, மழைத்தாங்கி, அளவை இயந்திரம், கொம்பெக்டர் உள்ளடங்கலாக) |
| 49 | உள்ளக தொலைபேசி மற்றும் தொலைபேசிப் பிணைப்புத் திருத்தம் மற்றும் உள்ளக உரையாடல் முறைமை, ஒலிபெருக்கி முறைமைகளின் பராமரிப்பு |
| 50 | ஒட்டு வேலைகள், கட்டுமான வேலைகள், மர வேலை, குழாய்ப் பணியாளர் தொழில்நுட்ப சேவைகள் |
| 51 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் திருத்தம் |
| 52 | அனைத்து வாகனங்களையும் பழுதுபார்த்தல் |
| 53 | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 54 | புகைப்படம் எடுத்தல் |
| 55 | குப்பைகளை கொட்டுவதற்காக காணிகளை குத்தகைக்கு வழங்குதல் |
| 56 | பதாகைகள் மற்றும் பெயர்ப் பலகைகளை வரைதல் |
| 57 | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் |
| 58 | டயர்களை மீள நிரப்புதல், வொல்கனைஸ் வேலை, டியுப்களை ஒட்டுதல் |
| 59 | வெற்றுப் போத்தல்கள், பழைய இரும்பு, உக்கிப்போகாத குப்பைகள், பழைய செய்தித் தாள்கள் உட்பட பழுதடைந்த பொருட்களின் கொள்வனவு |
| 60 | தகனச் சாலையின் திருத்தம் மற்றும் பராமரிப்பு |
| 61 | ஒலி பெருக்கி இயந்திரங்கள் மற்றும் விழாக்களிற்காக மேடைக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் |
| 62 | அலுமினியம் பொருத்துக் கலங்களின் உபயோகத்தோடு ஜன்னல் கதவுகளை தயாரித்தல், நிர்மாணம் மற்றும் தடுப்புச் சுவர் வேலைகள் செய்தல். |

**ஒப்பந்தங்கள்**

| வகை இலக்கம் | ஒப்பந்த வகை |
|---|---|
| 63 | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் |
| 64 | வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள். |

### ரம்புக்கனை பிரதேச சபை
### 2021ஆம் வருடத்திற்காக வழங்குநர் ஒருவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரியின் பெயர்:
02. விண்ணப்பதாரியின் முகவரி:
03. வியாபாரத்தின் பெயர்:
04. வியாபாரத்தின் முகவரி:
05. தேசிய அடையாள அட்டை இலக்கம் (தே.அ. அட்டையின் பிரதி ஒன்றையும் இதனுடன் இணைக்கவும்)
06. வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழ் இலக்கம்:
    (பிரதியை கட்டாயம் இணைக்கவும்)
07. வியாபாரத்தின் தன்மை:
08. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற வகை இலக்கம்:
09. செலுத்திய தொகை:
10. காசோலை இலக்கம்:
11. சொத்துக்களின் விபரம் (வழங்குநர்களுக்கு தொடர்புடையதல்ல):
12. சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம்:
13. தொலைபேசி இலக்கம்:
14. தொலைநகல் இலக்கம்:
15. பெறுமதி சேர்ப்பு வரி (VAT) பதிவு இலக்கம்:
16. கடன் வசதி வழங்கக் கூடிய கால எல்லை:
17. போக்குவரத்து வசதிகள் வழங்க முடியுமா என்பது பற்றி:
18. ஏனைய தகுதிகள்:

**விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை**

**பொது நிபந்தனைகள்**

01. பதிவு செய்யப்படுகின்ற அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பப் படிவம் சமாப்பிக்கப்பட வேண்டியதுடன், அதனுடன் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வகைக்கு பதிவு செய்து கொள்வதற்கு ரூபா 1000.00 கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.
02. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் **'தவிசாளர், ரம்புக்கனை பிரதேச சபை'** எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையொன்றின் மூலம் மாத்திரம் செலுத்தலாம். காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
03. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரலாம் என்பதுடன் அதற்குப் புறம்பான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் பிறிதொரு பெறுகை முறையை நடைமுறைப்படுத்தும் உரிமையும் சபைக்கு உரியது.
04. இச்சபையினால் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநர் ஒருவர் குறித்த திகதிக்கு உரிய நேரத்திற்கு முன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் பட்சத்தில் மறு அறிவித்தலின்றி இச்சபை ஏற்றுக்கொண்ட அடுத்த வழங்குநருக்கு குறித்தொதுக்கப்படும் என்பதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.
05. உரிய நேரத்திற்கு விலைமனுக்களை சமர்ப்பிக்காத மற்றும் குறித்த நேரத்திற்கு தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட பெயர் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டு கறுப்புப் பட்டியல் படுத்தப்படும்.
06. எவையேனும் பொருட்கள், சேவைகள் அல்லது ஒப்பந்தங்களை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர் ஒருவருக்கு முற்பணக் கொடுப்பனவொன்று செலுத்தப்படாததுடன் பொருட்கள் சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து குறைந்த பட்சம் **45 நாள்** சலுகைக் கால கடன் வசதி வழங்குநர்களினால் வழங்கப்படுதல் வேண்டும்.
07. சேவை ஒப்பந்தங்களை வழங்குவதற்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தொகையொன்றை முறியாக/ பிணையாக வைப்புச் செய்தல் வேண்டும். ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததன் பின் இவ்வைப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொள்ளலாம். உங்களால் வழங்கப்படுகின்ற சேவையில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால் நட்டத்தினை வைப்புத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
08. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் குறித்த விலைகளுக்கு ஏற்ப குறைந்த பட்சம் 06 மாத காலத்திற்காவது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட விலைகளில் மாற்றங்கள் ஏற்படும்போது ஒரு மாதத்திற்கு முன் அது விடயமாக ரம்புக்கனை பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்
09. உரிய முறையில் தகவல்களை வழங்காத பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் 2020.11.20ஆம் திகதிக்குப் பின் கிடைக்கின்ற அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பதாரரிற்காக இருக்க வேண்டிய அளவுகோல்கள்**

1. கூட்டுத்தாபனமொன்றெனின் கூட்டுத்தாபனமொன்றாக இணைக்கப்பட்டதற்காக வழங்கப்படுகின்ற சான்றிதழ்.
2. தனி நபர் வியாபாரமொன்றின் பதிவுச் சான்றிதழ்
3. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் படியான பதிவுச் சான்றிதழ்
4. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி (ICTAD) சான்றிதழ் மற்றும் புத்தகம் (தேவைக்கேற்றவாறு சமர்ப்பித்தல் வேண்டும்)
5. இதற்கு முன் ஐந்து அரச நிறுவனங்களிற்காவது பண்டங்கள் சேவைகளை வழங்கியிருப்பது ஒரு விஷேட தகுதியாகும்.
6. வாகனத் திருத்தங்கள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகனத் திருத்துமிடமொன்றாக இருத்தல் மற்றும் ஐந்து அரச நிறுவனங்களிற்காவது சேவைகளை வழங்கிய அனுபவமுள்ள நிறுவனமாகக் காணப்படுதல் ஒரு விஷேட தகுதியாகும்.
7. உத்தரவாதக் காலம் வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளிற்கான உத்தரவாதக் காலம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு மேலதிகமாக விஷேட தகுதிகள் இருப்பின் விண்ணப்பப்படிவத்தில் ஏனைய விடயங்கள் எனும் பகுதியின் கீழ் குறிப்பிடவும்.

**ஈ.எம்.ஏ.என்.பீ. ஹதகம**
**தவிசாளர்**
**ரம்புக்கனை பிரதேச சபை**

2020.09.29ஆம் திகதி **ரம்புக்கனை பிரதேச சபையில்**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**குமாமொட்டோ லங்கா (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்:
**பிவீ 73174**

கூட்டிணைக்கப்பட்ட திகதி : **2010.07.13**

பதிவு முகவரி:
**இல.746/A/4, சுதவில வீதி, ரணால**

**கம்பனி செயலாளர்**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**வின்கார்ட் செகியுரிடி சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்:
**பிவீ 118659**

பதிவு முகவரி:
**இல.16/4-டீ, பொல்கொட்டுவ வீதி, ராவதாவத்த, மொறட்டுவ.**

**ஏ.ஜீ.ஐ.அநுராத**
**பணிப்பாளர்**

## அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, நாவின்ன, சமகி மாவத்தை, 31/பீ இலக்கத்தில் வதியும் விஜேசிங்க முஹம்திரம்லாகே தோன சந்திரா விஜேசேகர (தே.அ.அ.இல. 376530728V) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு ஈ.டி. பலிஹபிட்டிய அவர்களினால் 2020-07-17ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1497ஆம் இலக்க அட்டோர்ணி அதிகார பத்திரத்தின் மூலம் நியமித்துக் கொண்ட அட்டோர்ணி அதிகாரப்பத்திரதாரரான மஹரகம, நாவின்ன, சமகி மாவத்தை, 31/பீ இலக்கத்தில் வதியும் புலத்சிங்ஹல ஆரச்சிலாகே தோன தெல்மா தீபானி விஜேசேக்கர (தே.அ.அ.இல. 196555302056) அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுவதாகவும் இதன் பின் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டோர்ணி நாயகம்.**

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

தன்சானியா, தார் எஸ் சலாம், தபால் பெட்டி, இல. 409, மசாசனி, ப்லொட் 954, எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற ஹாத்திம் அமீர் கரிம்ஜி என்பவரின் இறுதி விருப்பாவணத்துடன் மரண சொத்து நிர்வாகம் தொடர்பாக

**(காலஞ்சென்றவர்)**

| | | |
|---|---|---|
| வழக்கு இல | : | DTS 150/2020 |
| தன்மை | : | சொத்து |
| பெறுமதி | : | ரூ. 255,458,703/- |
| வழக்கு நடைமுறை | : | சுருக்கம் |

இந்த விண்ணப்பமானது வெளிநாட்டு தத்துவ வங்குரோத்து கட்டளை / வங்குரோத்து சொத்து நிர்வாகம் தொடர்பாக சிவில் குடியியல் நடபடிமுறைக்கோவை பிரிவு 554U, அதிகாரம் XXXVII B வெளிநாட்டு உயில்கள் மீள் முத்திரையிடுகின்ற சட்டப்பிரிவுக்கு அமைவானது.

1. ராஸியா ஹாத்திம் கரிம்ஜி
   ப்லொட் இல. 954, மசாசனி,
   தபால் பெட்டி இல. 409, தார்
   எஸ் சலாம், தன்சானியா.
2. யூசுப் அலி கரிம்ஜி
   63, யசீர் அரபாத் வீதி, ஹில் ரோட்,
   போஸ்ட் பொக்ஸ் 9060, தூர் எஸ் சலாம்,
   தன்சானியா.

இருவரும் அவர்களுடைய அற்றோணித் தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்கள் மொஹமட் அதமலி இல. 61, டீ.எஸ். போன்சேகா வீதி, கொழும்பு-05.

**(மனுதாரர்கள்)**

குறித்த இந்த அறிவித்தலை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர், 2019 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி, 2019 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கம் கொண்ட ப்ரொபேட் வழக்கெழுக்காரணியின் கீழ் கோவையிடப்பட்ட சொத்து நிர்வாக வழக்கின் கீழ் தன்சானியா, தார் எஸ் சலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள தன்சானியா மேல் நீதிமன்றத்தினால் தன்சானியா, தார் எஸ் சலாம், தபால் பெட்டி, இல. 409, மசாசனி, ப்லொட் 954, எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற ஹாத்திம் அமீர் கரிம்ஜி என்பவரின் இறுதி விருப்பாவணத்துடன் மரண சொத்து நிர்வாகம் தொடர்பாக வழங்கப்பட்ட வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் திருத்தப்பட்ட குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 554U, பாகம் XXXVII B குடியியல் நடபடி முறைக்கோவை வெளிநாட்டு உயில்கள் மீள் முத்திரையிடுகின்ற சட்டக் கோவையின் கீழ் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி

**கையொப்பமிட்டது**
**மொஹமட் அதமலி**
**இல. 61, டீ.எஸ். போன்சேகா வீதி, கொழும்பு-05.**

காலஞ்சென்ற ஹாத்திம் அமீர் கரிம்ஜி என்பவரின் சொத்து நிர்வாகத்தின் வாரிசுகள் மற்றும் உரித்துகாரர்களாகிய ராஸியா ஹாத்திம் கரிம்ஜி மற்றும் யூசுப் அலி கரிம்ஜி ஆகியோரின் அற்றோணித் தத்துவகாரர்.

**ஷான்யா விக்கிரமரத்ன**
**சட்டத்தரணி இல. 631/5, காலி வீதி,**
**ஹொரேதுடுவ, மொறட்டுவை.**




www.adz.lk
it's what you want

NSB
National Savings Bank

# தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2020/16**

## Supply & Installation of Collaboration Solution for Setting Up Video Conferencing Facility For the National Savings Bank

மேற்குறிப்பிடப்பட்ட கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | Supply & Installation of Collaboration Solution for Setting Up Video Conferencing Facility |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 5,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 80,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2020-11-03 பி.ப. 2.30 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2020-11-04 மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2020-10-09ஆம் திகதியிலிருந்து 2020-11-03ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கல்கள் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**நிறுவனப் பெறுகைக் குழு - சிறிய அளவு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**

---

## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்பு பணியகம்)**

**பொது கேள்வி 4347 T**

**SUPPLY OF ANGLE IRON**

மேலே குறிப்பிட்டுள்ள உருப்படிக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை விலைமனுக்கோரல் ஆவணங்களின் கீழான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒத்திசைவாக உள்ளூர் முகவர்களிடமிருந்து இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன சுத்திகரிப்புப் பணியக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார்.

விலைமனுவைச் சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும், மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாக 25,000 ரூபாவையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவையும் 2020 நவம்பர் 09 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையக 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனையின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

கேள்விகளின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புகளடங்கிய விலைமனுக்கோரல் ஆவணங்களை **www.ceypetco.gov.lk** மற்றும் **www.dgmarket.com** என்ற இணையதளங்களில் பார்வையிடலாம்.

மாற்றுவழியாக, விலைமனு ஆவணங்களை கீழே குறிப்பிட்டுள்ள முகவரியிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2020 நவம்பர் 11 ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்புப் பணியகத்தின் மாநாட்டு அறையில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பண்டங்கள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணியகம்,**
**சப்புகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**
**தொலைபேசி : 00-94-11-2400110**
**மின்னஞ்சல் : ref.materials@ceypetco.gov.lk**

---

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

**பெருந்தெருக்கள் அமைச்சு**

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் அறிவித்தல்

**பலாங்கொடை அஸ்போல்ட் நிலையத்திற்கு (ASPHALT PLANT) தேவையான மூலப் பொருட்களை (AGGREGATE MATERIAL) வழங்குதல்**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக (ஆர்.டி.ஏ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்முதல் குழுவின் தலைவர் "பலாங்கொடை அஸ்போல்ட் நிலையத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குதல்" தொடர்பில் மூடிய விலைமனுக்களை தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து கோரியுள்ளார்.
2. செயற்படுத்தும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகும்.
3. மனுகோரல்கள் "தேசிய போட்டி மனுகோரல்" நடைமுறைக்கமைய இடம்பெறும்.
4. எழுத்துபூர்வ விண்ணபத்தை ஆர்வமுள்ள மனுதாரர்கள் பணிப்பாளர் (கொள்முதல்), 4வது மாடி, "மகனெகும மஹாமெதுர", 216, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லையில் சமர்ப்பித்து ஏல ஆவணங்களை 09.10.2020 முதல் 29.10.2020 வரை காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை திருப்பிச்செலுத்த முடியாத மனுக் கட்டணமான ரூ. 21,600.00 இனை (வற் வரியுடன்) செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
5. முகவர் மற்றும் மனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ், கம்பனிகள் பதிவு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

| ஒப்பந்த இல | விபரம் | மூலப்பெருட்களின் (Aggregate) அளவு | மொத்த அளவு (மெ.தொ) | மனுப் பாதுகாப்பு பிணை (ரூ) |
|---|---|---|---|---|
| RDA/DPR/BAG/2020/113 | பலாங்கொடை அஸ்போல்ட் நிலையத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குதல் | 19 mm | 15,000 | 1,100,000.00 |
| | | 12.5 mm | 20,000 | |
| | | 0-5 mm | 25,000 | |

6. மனுப்பத்திரங்களை இலவசமாக, கொள்முதல் பணிப்பாளர், கொள்முதல் பிரிவு, 4ஆம் மாடி, "மகனெகும மஹாமெதுர", கொஸ்வத்த, பத்தரமுல்லவில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.
7. மனு முடிவடைந்த திகதியிலிருந்து 91 கலண்டர் நாட்கள் வரை மனு செல்லுபடியாகும். மேலே குறிப்பிடப்பட்ட தொகைக்கு மனு பாதுகாப்புப் பிணையுடன் (01/03/2021 வரை செல்லுபடியாகும்) செலுத்தப்பட வேண்டும். மனு பாதுகாப்புப் பிணை இல்லாத எந்த மனுவும் நிராகரிக்கப்படும்.
8. தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் "பலாங்கொடை அஸ்போல்ட் நிலையத்திற்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குதல்" என குறிப்பிடப்பட வேண்டும்.
9. மனுக்கள் அவற்றின் பிரதிகளோடு, தலைவர், RDA கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாம் மாடி, "மகனெகும மஹாமெதுர", இல 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை, எனும் முகவரிக்கு 02.11.2020, பி.ப 2.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். மனுக்கள் மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து பணிப்பாளர் கொள்முதல், RDA தொலைபேசி: **011-2046481/ 011-2884790** மின்னஞ்சல்: **procurement@rda.gov.lk** மூலம் தொடர்புகொள்ளவும்.

**தலைவர் - கொள்முதல் குழு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**1 வது மாடி, 'மகனெகும மஹாமெதுர',**
**216, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல.**

---

# 2021 வருடத்திற்காக பெறுகை சேவை மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்துகொள்ளல்.

## நிக்கவரட்டிய பிரதேசசபை

2021ஆம் வருடத்திற்காக இந்த சபைக்குத் தேவைப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவுசெய்துகொள்ள விரும்பும், தகுதியுள்ள, உற்பத்தியாளர்கள், வழங்குர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்வது 2020.12.31 வரை மேற்கொள்ளப்படும்.

பதிவுசெய்து கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்தை (A4 அளவில் தயாரிக்கப்பட்ட) உபயோகிக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரத்துடன் பதிவுச்சான்றிதழின் போட்டோ பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வழங்குநர்களாக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வழங்கல் தொடர்பாகவும் மீளளிக்கப்படாத ரூ.1000/- தொகையொன்றை பதிவுக்கட்டணமாக செலுத்த வேண்டும். அது செலுத்தப்படும் அலுவலகம் நிக்கவரட்டிய எனக் குறிப்பிட்டு, காசுக்கட்டளை மூலம் அல்லது காசோலை மூலம் செலுத்தலாம். காசோலை அல்லது காசுக்கட்டளை "செயலாளர், பிரதேச சபை, நிக்கவரட்டிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்த ஒப்படைக்கவோ வேண்டும். விண்ணபங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "2021 வருடத்திற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்து கொள்ளல்" எனக் குறிப்பிட வேண்டும். அலுவலக நேரங்களில் (பி.ப.3.00 மணிக்கு முன்னர்) ரொக்கப்பணமாக கட்டணம் செலுத்தப்படலாம்.

**பண்டங்கள் மற்றும் சேவைகள்**

01) மின்சார சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்
02) காகிதாதிகளை வழங்கல்
3) அச்சிடும் வேலைகள்
04) தட்டச்சு/ரோணியோ பிரதிபண்ணும் இயந்திரம்/வளிச்சீராக்கிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்
05) அலுவலக உபகரணங்களை வழங்கல் (போட்டோக்கொப்பி இயந்திரம்/ரோணியோ/பெக்ஸ்/வளிச்சீராக்கி
06) அலுவலக மரத்தளபாடங்களை வழங்கல்
07) கணனி/CCTV/கமிரா மற்றும் துணையுறுப்புக்களை வழங்கல், பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.
08) உலோக பயில் கெபினற்/கபர்ட்/கதிரை மற்றும் பெட்டகங்களை வழங்கல் மற்றும் பழுது பார்த்தல்.
09) நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகளை வழங்கல்.
10) இறப்பர் சீல்களை தயாரித்து வழங்கல்
11) சீருடைகளை தைத்து வழங்கல்
12) காணி அளத்தல் மற்றும் மதிப்பீட்டு சேவைகளை வழங்கல்
13) சுகாதார உபகரணங்கள்(கையுறை/முகக்கவசம்/குப்பை வண்டி/தும்புத்தடி/கூட்டுமாறு/பிரம்புக்கூடை/வீல்பரோ/கழிவறை தூரிகை
14) வாகனம் பழுது பார்த்தல்
15) வாகனம் புதுப்பித்தல்
16) டயர் மற்றும் டியூப் வழங்கல்/டயர்களை மீள் நிரப்பல்/வாகனங்களுக்கான பற்றரிகளை வழங்கல்
17) மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை வழங்கல்
18) வாகன சீட் குஷன் பண்ணல்
19) பீவீசீ குழாய்கள் மற்றும் துணையுறுப்புக்களை வழங்கல்/நீர்க்குழாய்களை புதுப்பித்தல்
20) நிர்மாணிப்புப் பொருட்கள்(சீமெந்து/நிறப்பூச்சு வகைகள்/இரும்பு போன்ற பொருட்கள்)
21) நிர்மாணிப்பு (கருங்கள்/ஆற்றுமணல்/இரும்பு/சீமெந்து/பிளொக்கல்/செங்கல்/பலகை வகைகள்/சரளைக் கல்/மண்/கல்தூள்/சிப்ஸ்/பீவீசீ1", 1 1/2",2",3" கட்டிகல் போன்றவற்றை நிக்கவரட்டிய பிரதேச சபை அதிகாரத்திட்குற்பட்ட பிரதேசத்தில் பெயரிடப்படும் இடங்களுக்கு வழங்கல்)
22) இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல்(டோஸர், ஜே.சீ.பீ/மோட்டார் கிறேம்/பாதையை தட்டும் உபகரணங்கள்/கொங்கிறீட் கலவை)
23) கொங்கிறீட் பொருட்கள் (ஹியும் குழாய்கள்/கம்பித்தூண்கள்/எல்லைகற்கள்/கட்டிகல்)
24) போக்குவரத்து சேவையை வழங்கல் (மோட்டார் வண்டி/லொறி/ட்ரக்டர்/வேன்/த்ரீவீல்)
25) ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்கல்
26) தகனசாலை நிர்மாணிப்பு மற்றும் பழுதுபார்த்தல்
27) வெற்றுபெரல்/பழைய பத்திரிகைகள்/சிதைவடைந்த பொருட்கள்/பிளாஸ்டிக்/கடதாசி/பொலித்தினைக் கொள்வனவு செய்தல்.
28) மண் வெட்டுபவர்கள் மற்றும் பாதைகளில் மரங்களை வெட்டும் சேவையை வழங்குபவர்கள்
29) அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
30) நிர்மாணிப்பு தொடர்பான ஒப்பந்தக்காரர்கள்
21) தகடு ஹட்/கெணபி ஹட் போன்றவற்றை தயாரித்தல் மற்றும் கெணபி துணியை தயார் செய்தல்.
32) தார் மற்றும் கோலாஸ் வழங்கல்
33) வேல்டின் வேலைகள்
34) குடிநீரை வழங்கல்
35) ரெடிமிக்ஸ் (கொங்கிறீட்)
36) ஷட்டரின் பலகைகளை வழங்கல்
37) பட்டறை வேலைகள்
38) உரம் உறைகள்/தும்பு கயிறு
39) தகனசாலைகளுக்கு கேஸ் வழங்கல்

**பொதுவான நிபந்தனைகள்**

01. விண்ணப்பிக்கும் அனைத்து பண்டங்களையும் நிக்கவரட்டிய பிரதேச சபை களஞ்சியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டியதுடன் சேவைகளையும் பிரதேச சபை அலுவலகத்திற்கு வந்து மேற்கொள்ள வேண்டும்.
02. உங்களின் நிறுவனத்தால் பெற்றுத்தர முடியுமான பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக விலைமனு விபரங்களை விண்ணபத்துடன் அனுப்பிவைக்க வேண்டும்.
03. வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக பதிவுசெய்துகொண்டுள்ள வழங்குநர்கள் மற்றும் பதிவுசெய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விலைமனு கோரப்படுவதுடன் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வெளியேயுள்ள ஆட்களிடமிருந்தும் விலைமனுக்கோரும் உரிமையை சபை கொண்டுள்ளது.
04. பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், மேற்படி விலைமனுக்கள் பிரகாரம் ஆகக்குறைந்தது 06 மாத காலத்திற்கேனும் பெருட்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும். இதற்கு புறம்பாக, விலைகளில் மாற்றங்களைச் செய்யும் போது ஒரு மாதத்திற்கு முன்பாக, அது தொடர்பில் நிக்கவரெட்டிய பிரதேச சபைக்கு எழுத்து மூலமும் அறிவிக்க வேண்டும்.
05. பலவிதமான பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உரித்தான வகையில் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமை சபைக்குரியதாகும்.
06. விண்ணபத்துடன் பதிவுச்சான்றிதழுடன் பிரதியொன்றையும் பெற்றுத்தருவது கட்டாயமாகும். அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
07. விண்ணப்பிக்கும் போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் கட்டளைகள் வழங்கப்படும்போது பொருட்களை வழங்கத்தவறும் வழங்குநர்களினதும் குறித்த தரத்திற்கமைவாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களினதும் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படும்
08. ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக வியாபார பதிவுச்சான்றிதழ் மற்றும் நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) செல்லுபடி சான்றிதழ் கட்டாயமானதாகும்.
09. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவையெனில், 037-2260125/275 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம். உரிய முறையில் தகவல்களை வழங்கத் தவறும்/தேவைப்படும் ஆவணங்களை வழங்கத்தவறும்/பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் 2020.12.31 தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் இரத்துச் செய்யப்படும்.

**தலைவர், எம்.பி.பி.பத்திரன,**
**பிரதேச சபை - நிக்கவரெட்டிய.**

### மாதிரி விண்ணப்பப்படிவம்

## நிக்கவரட்டிய பிரதேச சபை

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவுசெய்து கொள்வதற்கான விண்ணப்பம்**

01. வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களின் பெயர் : ....................................
(அவசியமற்ற சொற்களை அகற்றிக்கொள்ளுங்கள்)
02. முகவரி: ....................................
03. தொலைபேசி இலக்கம்: ....................................
பெக்ஸ்: ....................................
04. வழங்கல் செய்யப்படும் சேவை/பண்டம் மற்றும் உருப்படி இலக்கம் : ....................................
(உதா:1)
05. சீடா(CIDA)பதிவிலக்கம்/வியாபார பதிவிலக்கம்/அடையாள அட்டை இலக்கம்: ....................................
06. பதிவுக்கட்டணம்: ....................................
07. பற்றுச்சீட்டு இலக்கம்:. ....................................
08. காசோலை இலக்கம்/காசுக்கட்டளை இலக்கம்: ....................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும், உரித்தான பதிவுச்சான்றிதழை இதனுடன் இணைத்துள்ளதாகவும், இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும் வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களை பதிவுசெய்து கொள்வது தொடர்பான நிபந்தனைகளுக்கும் உடன்படுகின்றேன்.

.................................... ....................................
திகதி கையொப்பம்

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# 2020 சிநேக பூர்வ கிரிக்கெட் ; மட்டு. பாட்டாளிபுர மைதானத்தில் சமர்




**புளியந்தீவு குறுப் நிருபர்**

மட்டக்களப்பு பாட்டாளிபுர மைதானத்தில் 2020 சிநேக பூர்வ கிரிக்கெட் சமரின் இறுதிப் போட்டியில் அமிர்தகழி கிற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும், அமிர்தகழி விறாஸ்ஸஸ் விளையாட்டுக் கழகமும் மோதியதில் அமிர்தகழி கிற்றர்ஸ் வியாட்டுக் கழகம் இரண்டு ஓட்டங்களால் வெற்றியீட்டிய சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

போட்டில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். சிறந்த துடுப்பாட்ட வீரனாக கிற்றர்ஸ் விளையாட்டுக் கழக வீரர் முகுந்தனும்,சிறந்த பந்து வீச்சாளராக ஆர். ரமணனும், ஆட்ட நாயகனாக விறாஸ்ஸஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். புஸ்பா தேர்ந்தெடுக்கப்பட்டார்.




# 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் உலக சாதனை படைத்த உகாண்டா வீரர்

ஸ்பெயினில் நடந்த தடகள போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் உகாண்டா வீரர் உலக சாதனை படைத்துள்ளார்.

ஸ்பெயினின் வேலன்சியா நகரில் துரியா ஸ்டேடியத்தில் நடந்த தடகள போட்டியில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறைந்த அளவிலான நபர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவற்றில் விளம்பரதாரர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 400 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்த தடகள போட்டியின் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் உகாண்டா நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் ஜோசுவா செப்டெகி (வயது 24) கலந்து கொண்டு 26 நிமிடங்கள் 11.02 வினாடிகளில் பந்தய இலக்கை கடந்துள்ளார்.

கடந்த 2005ம் ஆண்டு எத்தியோப்பியா நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் கெனெனிசா பெகெலே 26 நிமிடங்கள் 17.53 வினாடிகளில் பந்தய இலக்கை கடந்திருந்தது உலக சாதனையாக இருந்தது. இதனை ஜோசுவா முறியடித்து உள்ளார்.

அவர் கடந்த ஆண்டு தோஹாவில் நடந்த உலக சம்பியன்சிப் போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் கலந்து கொண்டு தங்க பதக்கம் வென்றார். கடந்த ஆகஸ்டில் மொனாக்கோ நகரில் நடந்த டயமண்ட் லீக் போட்டியில் 5 ஆயிரம் மீற்றர் பிரிவில் பங்கேற்று சாதனை படைத்துள்ளார். இவை தவிர்த்து, கடந்த டிசம்பரில் வேலன்சியா நகரில் நடந்த 10 கிலோ மீற்றர் ரேசிங் பிரிவில் கலந்து கொண்டு இலக்கை அடைந்து, 6 வினாடிகள் வித்தியாசத்தில் 10 ஆண்டு கால சாதனையை ஜோசுவா முறியடித்திருக்கிறார். இதேபோன்று மகளிர் பிரிவு 5 ஆயிரம் மீற்றர் தடகள போட்டியில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த தடகள வீராங்கனை லெடிசென்பெட் கிடி (வயது 22) பந்தய தொலைவை 14 நிமிடங்கள் 6.62 வினாடிகளில் கடந்து உலக சாதனையை படைத்துள்ளார்.

SINCE 1978 42nd
OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ..............................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ..............................

வாக்களித்தவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500

3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-10 இல. 31




# குத்துச்சண்டையில் சாதனை படைத்த கைக்குழந்தையின் தாயார்



**கோவில்குளம் குறுப் நிருபர்**

வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் நடைபெற்ற மாகாண மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த தாயார் ஒருவர் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

மாவட்டங்களுக் கிடையில் நடைபெற்ற 13 வது வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் ஐந்து மாவட்டங்கள் கலந்துகொண்டிருந்தன, அந்தவகையில் வவுனியாவை பிரதிபலித்து கலந்துகொண்ட வீராங்களைகளில் ஒரு கைக்குழந்தையின் தாயாராகிய கரோன் சுலக்சி கலந்துகொண்டு வவுனியாவிற்கு ஒரு வெண்கலப்பதகத்தை வென்றுள்ளார்.

வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புகலை சங்கத்தின் வடக்கு மாகாண குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளராகிய எஸ்.நந்தகுமார் தலைமையில் பயிற்சி பெற்ற குறித்த பெண்மணி இச்சாதனையை புரிந்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த பயிற்றுவிப்பாளர் எஸ்.நத்தகுமார், வடக்கு மாகாண குத்துச்சண்டை போட்டியில் பல வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்தாலும் தேசிய ரீதியில் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை பெற்ற வீராங்கனைகளுடன் மோதி குறித்த தாயார் வெற்றி பெற்றிருந்தமை பாராட்டிற்குரியது என குறிப்பிட்டார்.

# அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்டம் காரைதீவு இராமகிருஷ்ணா அணி சம்பியன்




**காரைதீவு குறுப் நிருபர்**

அம்பாறை மாவட்ட இளைஞர்கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டிகள் காரைதீவு விபுலாநந்தா மைதான கூடைப் பந்தாட்டதிடலில் நடைபெற்றது. பிரதேச செயலக அணிகள் பல கலந்துகொண்ட போட்டித்தொடரில் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலகம் சார்பாக போட்டியிட்ட இராமகிருஷ்ணா இளைஞர் கழக அணியினர் வெற்றிவாகை சூடினர். அவர்கள் தேசியப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# விளையாட்டுத்துறை சம்பந்தமான படைப்புகள் அடங்கிய நூல் ஆளுநரிடம் கையளிப்பு!

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாண பாடசாலை மட்டத்திலான விளையாட்டுத் துறை சம்பந்தமான படைப்புகள் அடங்கிய நூல் ஒன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ விடம் (22) கையளிப்பட்டது.

சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் விளையாட்டுத் துறைக்கான உதவி பணிப்பாளர் உபசார அலககோன் மேற்படி சப்ரகமுவ மாகாண பாடசாலை மட்டத்திலான விளையாட்டுத்துறை சம்பந்தமான படைப்புகள் அடங்கி நூலை அண்மையில் மாகாண ஆளுநரிடம் கையளித்தார். மேற்படி நூலில் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுகள் சம்பந்தமான விபரங்களும் மற்றும் விளையாட்டுத்துறையில் சப்ரகமுவ மாகாணத்தில் பாடசாலைகள், மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் வெற்றி பெற்ற விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.